# SIMPLE ESSAYS

IN

# TAMIL

# தமிழ்

# வியாசமஞ்சரி

(நற்புத்தி போதம்)

EDITED BY


**T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A**

*Pachaiyappa's College*


THIRD EDITION


MADRAS

PRINTED AT THE MADRAS DIOCESAN PRESS, VEPERY

1921

8 **Annas**] [விலை, ௮ அணா

19597

# பதிப்புரை.

## முதற் பதிப்பு.

இக்காலத்தில் கல்விச்சாலைகளில் கல்விகற்கும் சிறுவர்களையும் சிறுமியர்களையும் பரீக்ஷாகாலங்களிலும் மற்றக்காலங்களிலும் அவரவர்கள் தராதரத்துக்கேற்ற விஷயங்களைப் பற்றி வியாசம் எழுதும்படி செய்வது வழக்கமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட வியாசங்கள் தமிழில் எளிதான நடையில் எழுதிய புத்தகங்கள் கிடைப்பது அருமையாக இருத்தலால், சில சிறு வியாசங்களை எழுதிப் பதிப்பிக்க எண்ணங்கொண்டிருக்கும்போது, **ஸ்ரீ–சபாபதி முதலியார்** என்பவர் 1855–௵த்தில் எழுதி ப்ரசுரம்பண்ணின **நற்புத்திபோதம்** என்னும் நூல் எனக்குக் கிடைத்தது. இது விலைக்குக் கிடைப்பதில்லாமல் சில முதியோர்களிடத்தில் மாத்ரம் ஏகதேசமாக இருப்பதை அறிந்து, புதிதாகச் சில வியாசங்களையும் எழுதிச்சேர்த்து வியாசமஞ்சரி என்று பெயரிடுவதென்று நினைத்து, நற்புத்திபோதத்தில் அடங்கியுள்ள வியாசங்களையெல்லாம் அச்சிடுவித்தேன். பின்பு என்னுடைய காரியத்தவறுகளாலும் அநேக இடையூறுகளாலும் நான் நினைத்தபடி புது வியாசங்களை எழுதிச் சேர்த்து அச்சிடத் தடைகள் நேர்ந்துவந்தமையால், அந்தமட்டில் அதனை இப்பொழுது வெளியிட்டு, இரண்டாம் பதிப்பில் இன்னும் சில வியாசங்களை எழுதிச் சேர்த்து ப்ரசுரம்செய்வதென்று துணிந்தேன். மேற்கூறின எண்ணத்தால் நூலின் பெயரை மாத்ரம் மாற்றினதன்றி, நூலின் நடையையும் சொற்களையும் ஒருசிறிதும் மாற்றவே இல்லை. நிறுத்துகின்ற இடங்களை அறிதற்கான குறிகளை முன்னிலும் தெளிவாக அங்கங்கே அமைத்து, அதற்கேற்றபடி அங்கங்கே முடிபுகளை ஒருவாறு மாற்றியிருக்கிறேன். "கல்யாணம் செய்துகொள்ளுதல்" என்னும் வியாசத்தில் மாத்ரம் சிறுபிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் அவசியமில்லாத சில வாக்யங்களை எடுத்துவிட்டேன்.

இந்நூலைப்பற்றி நான் எடுத்துப் பேசவேண்டிய விசேஷம் ஒன்றும் இல்லை. படிப்பவர்கள் தாங்களே இதன் விசேஷத்தை எளிதில் தெரிந்துகொள்வார்கள். இது ஹைஸ்கூல் மிடில் ஸ்கூல்களில் படிக்கும் மாணாக்கர்களுக்கும் பாலிகா பாடசாலைகளில் படிக்கின்ற பாலிகைகளுக்கும் மிகவும் உபயோகமாயிருக்கும். தமிழ் படிக்கத் தெரிந்த மற்ற யாவரும் படித்தால் பயன் இல்லாமற்போகாது. பரீக்ஷைக்குப் படிக்கிறவர்கள் வியாசம் எழுதுகிற விதத்தை ஒருவாறு அறிந்து கொள்ளுமாறு இதனை ஒருமுறை வாசித்தால் நன்மை உண்டாகுமென்று தோன்றுகின்றது.

நற்புத்திபோத நூலாசிரியர் பாயிரத்தையும் இந்நூலை முதலில் பரிசோதித்த செ. கேசவ முதலியார் நூலாசிரியருக்கு எழுதிய கடிதத்தையும் அடியில் அச்சிட்டிருக்கிறேன்.

"கடிதம்.

"ம-ா-ா-ஸ்ரீ, முதலியாரவர்கள்—சபாபதி முதலியாரவர்கட்கு விஞ்ஞாபனம்.

ஐயா!

"தாங்கள் வரவிடுத்தமையானும் அதனுட பொதிந்த பொருட்பொலிவாலும் உச்சிமேல் வைத்து மெச்சுதற்குரிய நற்புத்திபோதம் என்னுநூலை யானோக்குமிடத்து எனக்கு மனத்தகத்தடங்கா மகிழ்ச்சியும் நினைதொறு மாறாக் கவற்சியும் தலைசிறக்கின்றன.

என்னெனின்,

"தாங்களியற்றிய கிரந்தமானது வசனவுருவமாக இருப்பதொன்றன்றியும் மிருதுவு மியற்சொற் புணர்ச்சியுற் றிருப்பதையும் அதனெவ்வொரு விடயத் தானு முளதா முதியத்தையும் அது பெரும்பாலும் பள்ளிச்சிறார்க்குப் பயன்படு தன்மையையும் அதனுட் சில விடயங்கள் த்ரவிடபாடையிற் சிறந்த நூல்களாகிய திருவள்ளுவப்பயன் நாலடி முதலியவற்றின் கருத்திற் கொருங் கொத்திருப்பதையும் யோசித்துணருங்கால் உண்டாகுங் களிப்பும், இது போலிய நூல்களில் நம்மனோர் இளைஞரைப் பயில்விப்பதற் கிதுகாறுந் தௌர்ப்பாக்ய மடைந்திருந்தமையை நினைக்குந்தோறு முண்டாகும் வ்யசனமுமே யன்றி வேறின்று. ஆயினும் இனி யித்தேயத்தினர் தம்மை நெடுநாடோழமை கொண்டிறு மடமைக்கு விடை கொடுப்பதற் கையமில்லையென நம்புகின்றனன். இங்ஙன முலகோபகார நிமித்தம் இந்நூன் முற்றுப்பெறற் கேதுவாய தங்களுழைப்பின் மேற்கோடற்கு யாவர்தான் நன்றி கூர்ந்திரார்கள்? அவர்களுள் நான் முதலவனா யிருக்கின்றனன்.

சென்னபட்டணம்.<br>1855-ளு.

இங்ஙனம்,<br>செ. கேசவ முதலியார்."

# "பாயிரம்.

"தமிழ்ப் பாஷையில் சிறந்த நூல்கள் பல இருப்பினும், அவையெல்லாம் செய்யுட்களாக இருப்பதால் சிறுவர்களுக்கும் மற்றைச் சாமானியர்களுக்கும் உணர்வதற கருமையாயிருக்கின்றன. அப்படிச் செய்யாமல், இங்லிஷ்காரர்கள் பெரும்பாலும் தமது பாஷையை வசனமாக்கி வழங்குவதினால் அதனைக் கற்கப்புகும் பாலியர்கள் யாவரும் அதிசீக்ரத்தில் அபிவிர்த்தியை யடைகின்றனர்.—செய்யுட்களாலாகிய நூலுக்கும், வசனமாயுள்ள நூலுக்கும், விஷயத்தில் பேதம் ஒன்று மில்லாவிட்டாலும், மேற்கூறியவைதக் கற்பதற்குக் காலச் செலவு மாத்ரம் அதிகப்படுகின்றது. தமிழ் நன்கறிந்தவர்களிற் சிலர், வசன நூல்களைச் செய்யும்போதும், அவற்றில் அரும்பதங்களையும் எளிதில் அறியக்கூடாத சந்திகளையும் இசைப்பதனால், அவை, கற்றோர்க்கே யன்றி மற்றோர்க்குப் பயன்படாமலும், அவர்களது கோட்பாட்டை நிறைவேற்றாமலும் போகின்றன. ஆதலால், இவற்றைக் கருதி, முக்கியமாய் இளைஞர்களுக்குப் பயன்படுமாறு திரிசொற் புணர்ச்சியும் கடினசந்தியும் இல்லாமல், தெய்வப் புலமைத் திருவள்ளுவர் ஔவை முதலானவர்களால் செய்யப்பட்ட நீதி நூல்களுக்கு இணங்கவும், இங்க்லிஷிலிருக்கும் ஸெல்ப் இம்ப்ருவ்மென்ட் என்னும் புத்தகத்துக்கு இணங்கவும், என்னால் இயற்றிய இச்சின்னூலில் அறிவுடையோர் வழுக்களைக் காணப் புகின் அது மணற்சோற்றிலும் கற்றேடுதல் போலாம்.

தி. சபாபதி முதலியார்."

பிரம்பூர்.
1897-ஹ. } தி. செ.

## இரண்டாம் பதிப்பு.

முதற் பதிப்பு 400 பிரதிகள் அச்சிட்டு 12 வருஷகாலம் ஆகின்றது. இந்த இரண்டாம் பதிப்பிலும் நூலின் நடையும் சொற்களும் ஒன்றும் மாறுபடவில்லை. ஓரோவிடத்தில் சில தொடர்களும் சில வாக்யங்களும் விட்டுவிடப்பட்டன. தர்மம்செய்தல் வீண்செலவுசெய்தல் என்கிற வியாசங்களில் பெரும்பாகம் விட்டுவிடும்படி நேரிட்டமையால், மிகுந்த பாகம் பணம் சம்பாதித்தல் என்கிற வியாசத்தோடு சேர்த்துவிடப்பட்டது கல்யாணம்செய்துகொள்ளுதல் என்கிற வியாசத்திலும் சில பகுதிகள் விட்டுவிடப்பட்டன. அந்தந்த வியாசத்தின் பாகுபாடுகளை ஸௌலபமாக அறியும்படி, பங்திகளில் விவரிக்கப்பட்ட விஷயங்களின் குறிப்புகள் பங்திகளின் தலைப்பில் சேர்த்திருப்பது இந்தப் பதிப்பின் விசேஷ அம்சம்.

ஜனவினோதினியிலிருந்து ஐந்து வியாசங்களை எடுத்துப் புதுக்கியும் திருத்தியும் I-வது அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன்.

அகராதியாகச் சில வழக்குத் தொடர்மொழிகளை II-வது அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன்.

பிரம்பூர்.
1909-௵ ஜூலை௴ 1௳

தி. செ.

## மூன்றாம் பதிப்பு.

இந்தப் பதிப்பில் அகராதியாக ஆயிரத்துச் சில்லரைப் பழமொழிகளை III-வது அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன்.

பிரம்பூர், சென்னை
1921-௵ ஆகஸ்ட்௴ 1௳

தி. செ.

# பொருளடக்கம்.


**காலையில் எழுதல்.** பக்கம்.

வைகறைத் துயிலெழு .... 1

காலையில் எழுவதற்கு உபாயம் .... ,,

காலையில் எழுவதால் உண்டாகும் நன்மை .... 2

**கடவுளைத் தொழுதல்.**

கடவுளைத் தொழுதல் .... 3

தொழுதற்குரிய காலம் .... ,,

இரவில் படுக்கும்போது தொழுதல் .... 4

**உலாவப் போதல.**

சரீர ஸௌக்யம் .... ,,

சரீர ப்ரயாஸை .... 5

வித்யாப்யாஸிகளுக்கு சரீர ப்ரயாஸை .... ,,

உலாவப் போதல் .... 6

உலாவ-அழைத்துக்கொண்டு போதற்கு உரியவர் .... ,,

வெவ்வேறு இடங்களுக்கு உலாவப் போதல் .... 7

உலாவப் போதற்கு உரிய இடங்கள் .... ,,

வாஹனங்கள் .... 8

உலாவி வந்தபின் செய்யத்தக்கவை .... ,,

**கல்வி கற்ற**

படித்தவனும் படியாதவனும் .... ,,

கல்வி கறறல் .... 9

கல்வியால் உண்டாகிற நன்மை .... ,,

கல்வி கற்றற்கு உரிய காலம் .... 10

கவனம் .... 11

படிக்கத் தகுந்த புத்தகங்கள் .... ,,

படிக்கிற விதங்கள் .... 12

கல்விப்பொருளின் விசேஷம் .... 13

கல்வியே புருஷார்த்த சாதனம் .... 14

## ஸ்நேஹம் செய்தல்.

பக்கம்.

உண்மையான ஸ்நேஹர்கள் .... .... .... .... .... 14
உண்மையல்லாத ஸ்நேஹர்கள் .... .... .... .... 15
நட்பாராய்தல் .... .... .... .... .... .... .... ,,
ஸ்நேஹரில் மூன்று வகை .... .... .... .... .... 16
ஸ்நேஹருக்கு வரும் விபத்தை நீக்கல் .... .... .... ,,
ஸ்நேஹரிடத்தில் மர்யாதை.... .... .... .... .... ,,
உண்மையான ஸ்நேஹரிடத்தில் நமது கடமை .... .... 17
மற்றவர்களிடத்தில் நடக்கும் விதம் .... .... .... ,,

## பணம் சம்பாதித்தல்.

பாபமில்லாத தொழில் முயற்சி .... .... .... .... 18
ஜீவனோபாயம் .... .... .... .... .... .... .... ,,
பயிர்த்தொழில் .... .... .... .... .... .... .... 19
வர்த்தகத்துக்கு அவசியமானவை .... .... .... .... ,,
வியாபார மார்க்கங்களை அறிதல் .... .... .... .... 20
உவாத்திமை, ஸேவகம் .... .... .... .... .... ,,
தர்மம் .... .... .... .... .... .... .... .... 21
தர்மம் செய்கிற விதம்.... .... .... .... .... .... ,,
செலவு .... .... .... .... .... .... .... .... 22
அதிகப்படி செலவை ஸரிக்கட்டும் விதம் .... .... ,,
வரவுக்கேற்ற செலவு.... .... .... .... .... .... 23

## கல்யாணம் செய்துகொள்ளுதல்.

கல்யாணத்துக்கு உரிய வயது .... .... .... .... ,,
வயோதிக விவாஹம் .... .... .... .... .... .... 24
கல்யாணம் செய்துகொள்ளும் பெண்ணின் வம்சம் .... ,,
படித்த பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ளுதல் .... 25
கல்யாணம்—குணகுணங்களை விசாரித்தறிதல் .... .... 26
ஒத்த குடும்பத்தில் பெண் கொள்ளுதல்.... .... .... ,,
போதுமான ஸம்பாத்யம் இல்லாமல் கல்யாணம் செய்து கொள்வதன் தீமைகள் .... .... .... .... 27
மனைவியிடம் விசுவாஸம்.... .... .... .... .... 28

# காலையில் எழுதல்.

"வைகறைத் துயிலெழு" என்று ஔவையார் கூறியபடியே நாம் தினந்தோறும் உதயகாலத்தில் படுக்கையைவிட்டு எழும்படி அப்யாஸம் பண்ணவேண்டும். நேரஞ்சென்று எழுந்தால், அன்றெல்லாம் நமது உடம்பு சோம்பலாக இருக்கும்; அன்றியும், புத்திகூர்மையும் படிக்க மனவிருப்பமும் இராது; பசியும் நன்றாக எடுக்காது. நாம் சோம்பலை உடையவர்களாக இருந்தால், எந்த வேலையையும் நன்றாகவும் விரைவாகவும் செய்துமுடிக்கும் சக்தி உண்டாகாது: ஒருநாளில் செய்யும் வேலையை ஒன்பது நாளில் செய்யும்படி ஆகும். புத்திகூர்மை இல்லாவிட்டால், எதையும் திறமாகச் செய்வதற்கு நமக்கு நல்ல யுக்தி தோன்றாது. இந்தச் சோம்பலும் மந்தபுத்தியும் நம்மிடத்தில் இருக்குமளவும் படிப்புக் கொஞ்சமாகிலும் நமக்கு வரமாட்டாது. படிக்க ஆரம்பஞ் செய்தாலும், நாளைக்குப் படிப்போம் நாளைக்குப் படிப்போம் என்றெண்ணிக் காலத்தை வீணிலே கழித்துவிடுவதன்றியும், படிப்பும் மனதில் தரிக்கமாட்டாது. இப்படி இளமைப்பருவமெல்லாம் கழித்துவிட்டால், பின்பு முதிர்ந்த வயதில் நாம் மிகுமூடர்களாகி, யாதொரு வேலையும் செய்ய முடியாதவர்களாய் இருப்போம். பசி இல்லாமலிருந்தால், நம்முடைய நாவிற்கு உணவு ருசியாக இராது. உணவு ருசியாய் இராவிட்டால், நாம் அதனை அளவில் குறைத்து உண்ணும்படி நேரிடும். இப்படிச் சிலநாள்வரைக்கும் அசனத்தைக் குறைத்துக்கொண்டே வந்தால், பசித்தீபனம் அடங்கிப்போவதல்லாமலும், தேகத்தில் ரத்தம் குறையும்; அதனால் கைகால் முதலாகிய அவயவங்களுக்கு வலி குறைந்துவிடும்.

காலையில் எழுவதற்கு உபாயம்.—நாம் விடியற்காலத்திலே எழுந்திருக்கவேண்டுமென்று விரும்பினால், இரவில் ஸரியாகப பத்து மணிக்குப் படுத்துக்கொள்ளவேண்டும். அதனால் கண்களுக்கு ஸௌக்கியம் உண்டாகும். இரவில் படுக்கைக்குப் போகும்போதும், காலையில் எழுந்துவரும்போதும், நாம் நம்முடைய கண்களைத் தூசி படியாத சுத்த ஜலத்தினால் நன்றாகக் கழுவிக்கொள்ளவேண்டும். நாம் பத்துமணிக்குப் படுத்துக்கொண்டால், நமக்கு நித்திரைவரப் பதினொரு மணி ஆகும். பதினொரு மணிமுதல் காலையில் ஐந்து மணி வரைக்கும் நித்திரைசெய்தால், அந்தக் காலம் நம்முடைய சரீர ஸௌக்யத்திற்குப் போதுமானதாக இருக்கும். வைத்திய சாஸ்திரிகளும், அந்தக் காலம் போதுமானதென்றும், அதற்குமேல் நித்திரை செய்தல் வியாதியை

விளக்கு மென்றும் சொல்லுகிறார்கள். காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருப்பது முதலில் வருத்தமாக இருக்கும். ஆனாலும் எழுந்து கொள்ளப் பழகிவிட்டால், அது பின்பு நமக்கு ஸகல நன்மைகளையும் உண்டாக்கும். நாம், முதலில், காலையில் ஐந்து மணிக்கு எழுந் திருக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டால், படுக்கைக்குப் போகும்போது, நம்முடைய தாய் தகப்பன் ஸகோதரன் ஸகோதரி முதலானவர்களிடத்திலாவது, அல்லது, கடவுள் கிருபையால் நமக்கு ஒரு வேலைக்காரன் இருந்தால் அவனிடத்திலாவது, காலையில் ஐந்து மணி ஸமீபித்த உடனே நம்மை எழுப்பும்படி சொல்லிவைக்க வேண்டும். அப்படி எழுப்பும்போது, இரண்டு மூன்று நாள்வரை யில், அவ்வேளையில் நமக்கு மனவருத்தம் உண்டாயிருக்கும். அந்த வருத்தத்தினால் அவர்கள்மேல் நாம் கோபம் கொள்ளலாகாது. அப் படிக் கோபங்கொண்டால், அவர்கள் அப்புறம் நம்மை எழுப்ப விரும்ப மாட்டார்கள். எழுந்தவுடனே மறுபடியும் சற்றுப் படுத்துக்கொள்ளலா மென்று மனவிருப்பம் உண்டாகும். அப்படிச் செய்யாமல், படுக் கையை விட்டு எழுந்தவுடனே, சீக்கிரத்தில் அப்புறம் போகவேண்டும். இப்படி இரண்டு மூன்று நாளைக்கு எழுந்தால், பின்பு அந்த வேளைக்கு ஒருவருடைய ஒத்தாசையும் இல்லாமல் நாமே எழுந்துகொள்ளும் வழக்கம் உண்டாகும்.

காலையில் எழுவதால் உண்டாகும் நன்மை.—இப்படியாகப் படுக்கையை விட்டுக் காலையில் ஐந்து மணிக்கு எழுந்தால், நாள்தோ றும் நமக்குப் பதினேழு மணி அவகாசம் இருக்கும். அப்படிச் செய் யாமல், இராவில் எட்டு மணிக்குப் படுத்துக்கொண்டு காலையில் எட்டு மணிக்கு எழுந்திருப்போருடைய வழக்கத்தை நாமும் அநுஸரித்துவந் தால், இந்த உலகத்தில் நாம் வசிக்கும்படி ஏற்பட்டிருக்கிற நாள்களில் பாதி நாள் நித்திரையில் கழிந்துபோகும். மற்றப் பாதி காலத்திலும், நோய் குழந்தைப்பருவம் முதுமைப்பருவம் முதலானவைகளால் கழி யும் நாள்கள் போக, மிகவும் கொஞ்சகாலந்தான் நமக்கு மீதியாகக் கிடைத்திருக்கும். அந்தக் கொஞ்சகாலமும் அதிசீக்கிரத்தில் கழிந் துபோகும். கடைசியில் போன காலத்தைக் குறித்து நாம் வியஸனப் பட நேரிடும். அந்த வியஸனம் போன காலத்தை மீட்டுக் கொடுக் கமாட்டாது. அநேக மனிதர்கள் தமது நாள்களெல்லாம் வீணாகக் கழிந்தனவே என்று தங்கள் அந்த்யகாலத்தில் வியஸனப்படுகிறார்கள். அதனால் பயன் ஒன்றும் இல்லை. ஆதலால் நாம் தினந்தோறும் காலை யில் எழுந்து, காலத்தை வீணாகப் போக்காமல் நல்ல விஷயத்தில் உப யோகித்தால், நம்முடைய முடிவு காலத்தில் நாம் வியஸனப்பட இட மிராது.

# கடவுளைத் தொழுதல்.

கடவுளைத் தொழுதல்.—தினந்தோறும் நாம் படுக்கையை விட்டு எழுந்தவுடனே கடவுளைத் தொழவேண்டும். தொழும்போது, மனத்தை வேறொரு விஷயத்திலும் செலுத்தாமல், நம்மையெல்லாம் படைத்து ரக்ஷிக்கும் கடவுளின்மேல் வைத்து, இதற்குமுன் அறிந்தும் அறியாமலும் நம்மால் செய்யப்பட்ட பாவங்களை மன்னிக்கவேண்டு மென்றும், இனிமேல் அப்படிப் பாவம் செய்யாமல் இருக்கும்படி நம்மைக் காப்பாற்றவேண்டு மென்றும், நாம் நமது தாய் தந்தை உபாத்தியாயர் முதலானவர்களிடத்தில் விசுவாஸம் உடையவர்களாய் அவர்கள் சொற்படி நடக்க நல்லறிவை நமக்குக் கொடுக்கவேண்டு மென்றும், நாம் அன்று செய்யப்போகும் ஸகல கார்யங்களிலும் நமக்கு வித்தியை அடைவிக்கவேண்டு மென்றும், மிகுந்த அன்போடும் பயத்தோடும் அவரைக் கேட்டுக்கொள்ளவேண்டும். நாள்தோறும் அப்படிச் செய்வதை நாம் சோம்பலினாலாவது புத்தியீனத்தினாலாவது செய்யாமல் விடலாகாது. ஏனென்றால், இந்த உலகத்தில் நாம் மனிதர்களாகப் பிறந்ததற்குப் பிரயோசனம் கடவுளைத் தொழுவதைவிட வேறொன்றும் இல்லை. அல்லாமலும், யாதாயினும் ஒரு கார்யத்தைப் புதிதாகச் செய்ய நாம் ஆரம்பிக்கும்போதும், கடவுளைத் தொழுவதினால் ஸகல நன்மைகளும் உண்டாவதன்றியும், அந்தக் கார்யத்தை ஸுலபமாகவும் நன்றாகவும் செய்து முடிக்கும் வல்லமையும் நமக்கு உண்டாகும். பூமியில் வசிக்கும் எல்லாமனிதர்களும் பல ஜாதியாராகவும் பல மதஸ்தராகவும் பகுக்கப்பட்டிருந்தும், அவர்களெல்லாரும் தங்கள் தங்கள் வருணத்திற்கும் மதத்திற்கும் தகுந்தபடி கடவுளை நானாவிதமாகத் தொழுகிறார்கள்

தொழுதற்குரிய காலம்.—கடவுளைத் தொழுகிறதற்கு, ஒரு காலம் தகுந்த தென்பதும், ஒருகாலம் தகாததென்பதும் இல்லை. ஆயினும், உதயத்தில் நித்திரையில் நின்று எழும்போது மனம் மிகவும் தெளிந்திருப்பது யாவருக்கும் ஸ்வபாவமாகையால், அதுவே சிறந்ததாக இருக்கின்றது. நாம் கடவுளை வழிபடுவதற்கு இளமைப் பருவத்திலும் முதுமைப்பருவமே விசேஷமென்று எண்ணித் தொழுதலை விடக்கூடாது. ஏனென்றால், நாம் தொழுதற்கு விரும்பிய அந்தப் பருவம் வருமளவும் இவ்வுலகத்தில் நாம் இருப்போம் என்கிற உறுதி இல்லை. ஆகையால், இதுவே நாம் அவரைத் தொழுதற்கு மிகவும் தகுந்த பருவமென்று எண்ணி, அவர் நமக்குச் செய்கிற நன்மைக்கே யன்றித் தீமைக்கும் அவரைத் தொழவேண்டும். ஏனென்றால், மனிதர்கள், வருத்தம் வந்த காலத்தில் நல்ல புத்தியும், ஏழை

களுக்கு உபகாரம் செய்யவேண்டு மென்கிற எண்ணமும், கடவுளைத் தொழும்படியான விருப்பமும உடையவர்களாக இருக்கிருர்கள்: மற்றக் காலத்தில் அப்படி இரார்கள். ஆகையால், அதுவும் நமது நன்மைக்கு ஏதுவென்று நினைத்து, அப்போதும் விடாமல் கடவுளைத் தொழவேண்டும். சிலர், தங்களுக்கு வருத்தம் நேரிட்ட காலத்தில் கடவுளின் மகிமையை அறியாமல், அவரைத் தூஷிக்கிருர்கள். அது அவர்களுடைய அறிவின்மையே அல்லாமல் வேறில்லை.

இரவில் படுக்கும்போது தொழுதல்.—நாம் காலையில் எழும்போது கடவுளைத் தொழுவதுபோல, இரவில் படுக்கும்போதும், அன்றைக்கு நாம் செய்த நல்ல காரியங்களையும் கெட்ட காரியங்களையும் ஆலோசித்தறிந்து நன்மையைக் குறித்து அவருக்கு வந்தனஞ்செய்து, தீமையைக் குறித்து உண்மையான மனத்துயரத்தை அடைந்து, நாம் இந்தப் பூமியில் இருக்குமளவும் இனி இப்படித் தீமை செய்யும் குணத்தை நமக்குக் கொடுக்காமல் இருக்கும்படி அவரைத் தொழுது, பின்பு படுத்து நித்திரைசெய்தல் வேண்டும். இப்படி நாள்தோறும் செய்துவந்தால், நாம் இவ்வுலகத்தில் இருக்குமளவும் கடவுள் துணையைப் பெற்றுப் புகழோடு ஜீவித்து, முடிவில் மோக்ஷத்தை அடைவோமென்று அறியக்கடவோம்.

# உலாவப் போதல்.

சரீர ஸௌக்யம்.—நம்முடைய சரீரம் எவ்வளவு ஸௌக்யமாக இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி நமக்குக் கூர்ந்த புத்தியும் படிப்பில் ஊற்றமும் உண்டாகும். ஆகையால், நம்முடைய முயற்சிகள் எல்லாவற்றுள்ளும் சரீர ஸௌக்யத்தின் முயற்சி முதன்மையாக இருக்கின்றது. நாம் சரீர ஸௌக்யத்தைத் தேடிக்கொள்ளாமல் இருந்தால், அது நம்முடைய அபிவிர்த்தியைத் தடைசெய்வதாக இருக்கின்றது. நமக்கு அஸௌக்யம் அதிகமாகுந்தோறும் படிப்பில் வெறுப்பும் அதிகமாகும் கடைசியில் அது மரணத்தையும் உண்டுபண்ணும். நம்முடைய சரீரம் ஸௌக்யக்குறைவு அடைந்தால், புத்தி எவ்வளவு கூர்மையாக இருந்தாலும், விர்த்தியடையாமலும், நன்ருகப் பிரகாசியாமலும், எண்ணெய் இல்லாத விளக்கைப்போல், க்ஷீணதசையை அடையும். ஆதலால், நாம் படிப்பில் நன்ருக விர்த்தி அடையவேண்டு மென்று விரும்பினுல், முதலில் நம்முடைய சரீர ஸௌக்யத்தைக் காப்பாற்றவேண்டும். சிலர், விரைவில் கெட்டிக்காரர்கள் ஆகவேண்டு மென்று நினைத்து, அதை எவ்வளவும் விரும்-

யாமல், தமது காலத்தையெல்லாம் படிப்பில்தானே கழிக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதினால் பல வியாதிகளையும் அடைந்து, மிகவும் பலஹீனர்களாகி, கல்வி கற்றதனாலாகிய பயனை அடையாமல், சீக்ரத்தில் மரணத்தை அடைகிறார்கள். இப்படி மரணத்தை அடைகிறது அதிக படிப்பினால் அன்று; சரீர ஸௌக்யத்தைப் பாராட்டாமல் இருந்ததினால்தான். ஆனபடியால், முதலில் சரீர ஸௌக்யத்தைத் தேடிக்கொண்டு, பின்பு கல்வி கற்கப் புகுந்தால், அது நமக்கு பலம் முதலாகிய எல்லா நன்மைகளையும் விளைக்கும். தேஹத்தில் த்ருடம் இல்லாவிட்டால், ஒரு ஸபையில் நின்று ஒரு விஷயத்தைப் பற்றி இரண்டொரு நாழிகை பர்யந்தம் பேசுவதற்கும் திராணி இருக்காது. அப்போது நாம் எவ்வளவு கற்றிருந்தபோதிலும் அது நன்றாகப் பிரகாசிக்கமாட்டாது. ஆகையால், எல்லாவற்றிற்கும் தேஹ த்ருடமானது இன்றியமையாததாய் இருக்கின்றது

சரீர ப்ரயாஸை. — உழவர் முதலான உழைப்பாளிகள் நல்ல பலசாலிகளாகவும் வியாதி இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அதேனெனில், அவர்கள் சரீரத்தில் வியர்வை உண்டாகும்படி பிரயாஸப்படுகிறதினால் அவர்களுக்குச் சாதம் நன்றாக ஜீரணமாகின்றது. அப்படி ஜீரணமாகிறதினால், புது ரத்தம் உண்டாகி, அந்த ரத்தம் நரம்புகள் வழியாக உடல் முழுமையும் பரவி, அதிக பலத்தைக் கொடுக்கிறதும் அல்லாமல், வியாதிகளை உண்டுபண்ணுகிறதும் இல்லை. மற்றவர்கள், சரீரத்தை வருத்தாமல் ஓரிடத்தில்தானே இருந்துகொண்டு, மனத்தை மாத்ரம் படிப்பினால் வருத்திக்கொண்டு இருக்கிறபடியால், அவர்களுக்குச் சாதம் ஜீரணமாகிறதும் ரத்தம் உண்டாகிறதும் இல்லை. அதனால் வ்யாதிகள் உண்டாகி பலஹீனர்கள் ஆகிவிடுகிறார்கள்.

வித்யாப்யாஸிகளுக்குச் சரீர ப்ரயாஸை. — வித்யாப்யாஸிகளுக்குச் சரீர ஸௌக்யம் அவசியம் இருக்கவேண்டுமாகையால், ஒவ்வொரு பால்யனும் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் சரீரத்தில் வியர்வை உண்டாகும்படி ப்ரயாஸப்பட்டுப் பின்பு படிக்க ஆரம்பிக்க வேண்டும். அப்படிச் செய்கிறதினால், உடம்பில் இருக்கிற சோம்பல் முதலானதுகள் நீங்கி, புத்தியானது படிக்கும் விஷயத்தில் செல்லும். சரீரத்தில் வியர்வை உண்டாகும்படி செய்ய அநேக உபாயங்கள் இருக்கின்றன. அவை என்னவென்றால்:—முதலாவது மண்வெட்டி முதலான ஆயுதங்களைக் கொண்டு நிலங்களைக் கொத்துவதும், இரண்டாவது மல்லகஜெட்டிகளைப் போலச் சிலம்பம் பழகுவதும், மூன்றாவது இரண்டு மூன்று நாழிகை தூரம் நடந்துபோய்த் திரும்பிவருவதும், இவை போன்ற இன்னும் சில உபாயங்களுமாம். இவற்றுள், மண்வெட்டி எடுத்துக் கொத்துகிறதும், சிலம்பம் பயில்

வதும், வித்யாப்யாஸிகளுக்கு அனுகூல சாதகம் அல்லாதனவாயிருக்கின்றன. ஆகையால், கடைசியில் சொன்னதையே நாம் அநுஸரிக்க வேண்டும்.

**உலாவப் போதல்.**—இதை அநுஸரிப்பது முதலில் வருத்தமாக இருக்கும். ஏனென்றால், நடக்கிறதினால் கால்களுக்கு உபத்ரவம் உண்டாகும். அதனால், உலாவப் போகாமல் சும்மா இருந்துவிடலாம் என்று தோன்றும். ஆகையால், அப்படிச் செய்யாமலும், அந்த வருத்தத்தைப் பாராட்டாமலும், இரண்டு மூன்று நாளைக்குக் காலையில் எழுந்தவுடனேயும், மாலையில் நம்முடைய வேலையிலிருந்து வந்தவுடனேயும், இரண்டு மூன்று நாழிகை தூரம் உலாவி வீட்டுக்கு வந்தால், பின்பு அது நமக்கு ஸாதாரண மாகிவிடும். அப்புறம் உலாவப்போகவேண்டு மென்கிற இஷ்டமும் நமக்கு உண்டாகும். நாம் உலாவிவந்து படிக்க ஆரம்பிக்கும்போது, நமக்குப் படிப்பில் உண்டாகிற இஷ்டமும் சுறுசுறுப்பும், உலாவப் போகாமலிருந்து படிக்கிறபோது உண்டாகமாட்டா. அல்லாமலும், உலாவுதலினால் கால் கை முதலான அவயவங்களில் ரத்தம் நன்றாகப் பரவி நரம்புகளுக்கெல்லாம் அதிக பலத்தை உண்டாக்குகின்றது; சோம்பல் நீங்குகின்றது. நல்ல காற்று உட்புகுவதனாலே சாதமும் நன்றாக ஜீரணமாகிப் பசித்தீபனமும் அதிகரிக்கின்றது. சிலர் தங்களுக்கு இருக்கும் வேலையினால் உலாவப் போகிறதற்கு ஒழிவில்லை யென்று நினைத்து உலாவப் போகாமல் வேலையைச் செய்யத் தொடங்குகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதினால், சோம்பல் நீங்காமலும், அவயவங்களுக்குச் சக்தி யில்லாமலும் இருப்பதால், தாம் ஆரம்பிக்கும்வேலை இரண்டொரு நாழிகையில் நிறைவேறத் தகுந்ததாய் இருந்தபோதிலும், அதற்கு இரண்டொரு நாள் செல்லுவதை யோசிக்காதவர்களாய் இருக்கிறார்கள். ஆகையால், நமக்கு எவ்வளவு வேலை இருந்தபோதிலும், உலாவப் போகிற வேலையை முதலில் நிறைவேற்றிவிட்டு, அப்புறம் மற்றொரு வேலையைச் செய்ய ஆரம்பித்தால், அப்போது அது வெகு சீக்ரத்தில் முடியும். உலாவி வருவது நம்முடைய அவயவங்களுக்குப் பலத்தையும் புத்திக்குச் சுறுசுறுப்பையும் உண்டுபண்ணுகிறபடியால், அதனால் செலவழிந்த காலம் வீணாகப் போய்விட்டதே என்று நாம் வியஸனப்படாமல், அதனால் உண்டாகிற பிரயோசனத்திற்காக ஸந்துஷ்டி அடைந்து, உலாவப் போகிற வழக்கத்தை விடாமல் எப்போதும் அநுஸரித்துவரவேண்டும்.

**உலாவப் போகும்போது கூடே அழைத்துக் கொண்டு போதற்கு உரியவர்.**—நாம் உலாவப் போகும்போது ஒன்றியாகப் போகக்கூடாது. அப்படிப் போனால், நம்முடைய மனதிற்கு ஸந்

தோஷம் உண்டாகாது. நாம் அறியவேண்டிய அநேக வஸ்துக்களின் விஷயங்களை அறியாமலே வந்துவிடுவோம். அல்லது, அவ்வஸ்துக்களுடைய பேரை மாத்ரம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து யாராகிலும் தெரிந்தவர்களைக் கேட்டபோதிலும், அந்த வஸ்துக்களைக் காட்டித் தெரிவித்தால் நமக்கு எப்படிப் படுமோ அப்படிப் படமாட்டாது. ஆகையால் எப்போதும் ஒருவருடன் கூடிக்கொண்டே உலாவப் போகவேண்டும். அவர்கள் நம்முடைய கல்விக்கும் புத்திக்கும் மேலான கல்வியையும் புத்தியையும் உடைய ஸ்நேஹிதர்களாக இருக்கவேண்டும். நாம் வழியில் போகும்போது, நம்முடைய கண்களுக்குத் தோன்றும் வஸ்துக்களை யெல்லாம் நன்றாகப் பார்த்து, ஒவ்வொரு வஸ்துவினாலும் நமக்கு இன்ன இன்ன நன்மைகள் உண்டாகின்றன என்று யூகித்தறியவேண்டும். ஒருவேளை சில வஸ்துக்களைக்குறித்து நமக்குத் தெரியாவிட்டால், நம்மோடு வருகிற ஸ்நேஹிதரைக் கேட்கவேண்டும் அவர் சொல்லும்போது அவற்றை நன்றாகக் கவனித்துக் கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்

வெவ்வேறு இடங்களுக்கு உலாவப் போதல்.—எப்போதும், நாம் உலாவி வந்தவுடனே, என்ன விஷயங்களை இன்றைக்கு நூதனமாக அறிந்தோமென்று யோசிக்கவேண்டும் நாம் ஒருநாள் உலாவப்போன இடத்திற்கு மறுநாள் போகக்கூடாது. ஏனென்றால், ஒருதரம் பார்த்த வஸ்துவையே பலதரம் பார்த்தால் நமக்கு வெறுப்பு உண்டாகும். ஆகையால், தினந்தோறும் ஒவ்வோர் இடத்திற்கு நூதனமாகப் போய் அங்கங்கே இருக்கிற அருமையான வஸ்துக்களை யெல்லாம் பார்த்து அறிந்துகொண்டு வீட்டுக்கு வரவேண்டும். கெட்ட காற்று வீசுகிற குப்பை முதலானவைகள் கொட்டிக்கிடக்கும் இடங்களில் உலாவப் போகக்கூடாது அவ்விடங்களில் போனால், அந்தக் காற்று நமது உடம்பில் பட்டு நாம் மூச்சு விடுந்தோறும் உள்ளே புகும்; அப்போது அதிலிருக்கிற விஷம் குடல்களில் பாய்ந்து பேதி முதலான வ்யாதிகளை உண்டுபண்ணும்

உலாவப் போதற்கு உரிய இடங்கள்—நாம் ஸமுத்ரக் கரையில் குடியிருந்தால், சாயந்தரம் கடற்கரை ஓரத்தில் உலாவப்போக வேண்டும். உப்பங்காற்று தேகத்தின்மேல் பட்டால் ஸௌக்யம் உண்டாகுமென்று வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். காலையில் பயிர்கள் நிறைந்திருக்கும் வயல்களின்மேல் சென்று சுற்றிப் பார்த்துக்கொண்டு வரவேண்டும் ஏனென்றால், பச்சை நிறமாகிய பயிரைப் பார்ப்பதினால் கண்களுக்குக் குளிர்ச்சி உண்டாகிறது மல்லாமல், புலங்களின்மேல் வீசுகிற புதிய காற்று சரீரத்தில் படுவதினால் நமக்கு அநேக நன்மைகள் உண்டாகும்.

**வாஹனங்கள்.**—வண்டி குதிரை முதலானவைகளை வைத்துக் கொண்டிருக்கும் சில பேர்கள் அவைகளின்மேல் ஏறிக்கொண்டு புதிய காற்று வீசப்பட்ட இடங்களில் சாரிபோய் வந்தால் சரீரத்துக்கு ஸௌக்யம் உண்டாகுமென்று நினைத்து அப்படிச் செய்கிறார்கள். புதிய காற்று சரீரத்தின்மேல் படுகிறதினால் ஸௌக்யம் உண்டாகும் என்பதற்கு ஸந்தேஹம் இல்லை. ஆனால் கடவுள் நமக்கு ஸ்வபாவமாகக் கொடுத்திருக்கிற கால்களால் இரண்டு மூன்று நாழிகை தூரம் சரீர முழுமையும் அசையும்படி உலாவிவருகிறதினால் உண்டாகின்ற ஸுகம் மற்றவைகளால் உண்டாகமாட்டாது. சாரட்டு முதலான வாஹனங்கள், கால்களில் சக்தியில்லாத கிழவர்களுக்கு உபயோகமானவைகளே யன்றி, பாலியர்கள் உலாவப் போகும்போது அபேக்ஷிக்கத் தகுந்தவைகள் அல்ல

**உலாவி வந்தபின் செய்யத்தக்கவை.**—நாம் உலாவி வந்த உடனே, உடுத்திருக்கும் உடையைக் கழற்றிவிட்டு நாலைந்து நிமிஷம் வரைக்கும் சும்மாவிருந்து, பின்பு குளிர்ந்த ஜலத்தினால் வியர்வையெல்லாம் போகும்படி நன்றாக உடம்பைக் கழுவவேண்டும் அல்லது, நாம் குடியிருக்கப்பட்ட இடத்திற்கு ஸமீபத்தில், நல்ல ஜலம் ஓடிக்கொண்டிருக்கிற ஆறு வாய்க்கால் முதலானவை இருந்தால், அவைகளில் குளிக்கலாம். அப்படிச் செய்த உடனே, வேறே ஸலவை வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு அலுவல்களில் பிரவேசிக்கவேண்டும். நாம் உலாவி வந்த நாலைந்து நிமிஷநேரம் சும்மாவிராமல் உடனே குளித்தால், நன்றாக வியர்வை விடாமல் நின்றுவிடும். உலாவி வந்தவுடனே, உடம்பு குளிக்காமலும், வியர்வையினாலே நனைந்திருக்கிற உடுப்பைக் கழற்றாமலும் இருந்தால், வியர்வையினுடைய கசிவினாலும் துணியினுடைய ஈரத்தினாலும் மனத்தில் அருவருப்பு உண்டாகும். அன்றியும், வியர்வை நீரெல்லாம் மறுபடியும் சரீரத்தில் ஊறினால் வ்யாதி உண்டாகும். ஆகையால், நாம் உலாவி வந்தவுடன் குளித்து வேறு வஸ்திரத்தை உடுக்கவேண்டும்.

# கல்வி கற்றல்.

**படித்தவனும் படியாதவனும்.**—உலகத்தில் இருக்கும் மனிதர்கள் எல்லாரும், கடவுளின் செயல்களை யெல்லாம் நன்றாய் அறிவதற்கும், அவரால் விதிக்கப்பட்டவைகளை அடைந்து விலக்கப்பட்டவைகளை ஒழிப்பதற்கும், கல்வியைக் கற்கவேண்டும். கல்வியில்லாத ஒருவன் ஸ்வபாவத்தில் எவ்வளவு புத்திமானாகவும் தெய்வபக்தியும்

இரக்கமும் உடையவனாகவும் இருந்தபோதிலும், கல்வியைக் கற்று அதற்குத் தக்கபடி நடக்கிறவனுக்கு ஸமானம் ஆகான். உலகத்தில் கல்வியில்லாத மனிதர்களுக்கு நல்லறிவு நல்லொழுக்கம் முதலானவை வருவது மிகவும் அரிது. படிப்பில்லாமல் அவைகளை அடைந்தவர்களும் மிகவும் சிறுபான்மையாக இருக்கலாம். படித்தவனும் படியாதவனும் உருவத்தில் ஒன்றாக இருந்தாலும், புத்தியில், மனுஷனுக்கும் மிருகத்துக்கும் எவ்வளவு தாரதம்யம் இருக்கிறதோ, அவ்வளவு தாரதம்யம் உடையவர்களாய் இருக்கிறார்கள். ஆதலால், கல்லாதவன் மனிதனென்று சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிலும், அறிவுடையோரால் இகழப்படாத மிருகமாய்ப் பிறப்பதே நன்றாயிருக்கிறது.

கல்வி கற்றல்.—எல்லா மனிதர்களுடைய புத்தியும் பால்யத்தில் ஒரேவிதமாக இருக்கின்றது. ஆனால், ஒருவன் தன் புத்தியை எப்படி உபயோகப்படுத்துகிறானோ, அதற்குத் தகுதியாக அது விருத்தியடைந்து பிரகாசிக்கின்றது. அது எதுபோல என்றால், ரத்தினங்கள் பூமியிலிருந்து முதலில் எடுக்கப்படும்போது மற்றக் கல்லுகளைப் போலவே இருந்தபோதிலும், அவைகள் சாணைபிடித்து மெருவு கொடுக்கப்பட்டால் விலையுயர்ந்த ஆபரண முதலானவைகளைச் செய்ய உபயோகமாகின்றதைப்போலாம். மனிதர்களுடைய புத்தி பால்ய காலத்தில் ஒரேவிதமாக இருக்கின்றதென்று ஏன் சொல்லவேண்டியிருக்கிற தென்றால், பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களில் ஒரு சிறுவன் ஒருதரம் படித்து ஒப்பிக்கிற பாடத்தை மற்றொரு சிறுவன் இரண்டுதரம் அல்லது பத்துதரம் படித்து ஒப்பிக்கின்றான். இந்த பேதம் மாத்திரந்தான் அந்தக் காலத்தில் அவர்களிடத்தில் தோன்றுகிறதேயல்லாமல், வேறொன்றும் இல்லை. ஆனால், சிலர் கல்வியினால் மிகுந்த திறமை உடையவர்களாகி மேலான தொழிலை அடைந்து அதிக கீர்த்தியை அடைகிறார்கள்; மற்றவர்கள் ஸாதாரணர் ஆகின்றனர். ஆகையால் நாம் புத்தியை வேறொரு விஷயத்தில் செலுத்தாமல் கல்வியில் செலுத்தி, அதை மேன்மேலுங் கற்கவேண்டும். கல்வியானது அளவிறந்ததாக இருக்கின்றது அதைக் கற்க விரும்பும் மனிதர்களின் ஆயுளோ ஸ்வல்பமாக இருக்கின்றது. ஆகையால், நமக்கு உபயோகமானவைகளில் சிலசில விஷயங்களை நாள்தோறும் புதிதாகக் கற்றுக்கொள்ளவேண்டும். கல்விமான்கள் கல்வியைப் பற்றியாவது அல்லது வேறே எந்த விஷயத்தைப் பற்றியாவது பிரஸங்கம் செய்தால், நாம் அதைக்கேட்டு அதில் அருமையான விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

கல்வியால் உண்டாகிற நன்மை. — உலகத்தில் வித்தையினால்தான் மனிதர்களுக்கு அழிவில்லாத கீர்த்தியும் மர்யாதையும் உண்

டாகின்றன. நன்றாகக் கற்ற ஒருவன் எவ்வளவு தரித்ரனாக இருந்தாலும், அவனைக் காண்கிற நல்ல விவேகிகள் அவனுக்கு மர்யாதை செய்யாமலும், அவன் ஒரு ஸபைக்குப் போனால் அங்குள்ளவர்கள் அவனை மிகுந்த வணக்கத்துடனே உபசரிக்காமலும் இரார்கள். அதிக திரவ்யம் உள்ளவன் எவ்வளவு மூடனாக இருந்தாலும், அவனுக்கும் மேற்சொல்லிய மர்யாதை நடக்கிறது; ஆனால் அந்தத் திரவ்யம் அவனை விட்டு நீங்காமல் இருக்கிற வரைக்குந்தான். மூடர்களிடத்தில் இருக்கும் செல்வப்பொருள் அவர்களைவிட்டுப் பிரிந்துவிட்டால், முன்பு எவன் அவர்களுக்கு மர்யாதை செய்தானோ அவனே அவர்களை அவமதிக்கிறான். செல்வம் இருந்தபோது நல்ல வாஹனங்களில் ஏறிக்கொண்டு பலபேர்களால் பின்தொடரப்பட்டுப் போன அநேக ஸீமான்கள் வீட்டு மூடப்பிள்ளைகள், செல்வம் போய்விட்ட பின்பு, அன்னத் துக்கும்-வருத்தப்பட்டுக்கொண்டு நடைப்பிணமாகத் திரிவதையும் நாம் காண்கிறோம். ஆகையால், நாம் செல்வமுடையவர்களாய் இருக்கிறோமென்று கல்வியை அலக்ஷ்யம் செய்யக்கூடாது.

கல்வி கற்றற்கு உரிய காலம்.—வித்தையைப் பால்யத்தில் தானே அப்யாஸிக்கவேண்டும் ஏனெனில், அந்தப் பருவத்தில் நம்முடைய புத்தி வேறே யாதொன்றிலும் செல்லாதாகையால், அப்போது படித்தால், அது கல்லின்மேல் எழுதிய எழுத்தைப் போல நன்றாக மனத்தில் தரிக்கும். பால்யத்தில் தானே படிக்கவேண்டுமென்று சொல்லியிருந்தாலும், நாம் அதைப்பற்றி அதிகமாகப் புத்தியை வருத்தக்கூடாது. அப்படிச் செய்தால், வில்லை அதிகமாக வளைப்பின் அது எப்படி ஒடிந்துபோகிறதோ அப்படியே, நம்முடைய புத்தியின் கூர்மை மழுங்கிப்போகும்: படிக்கவும் வெறுப்பு உண்டாகும். அந்தப் பருவத்தில் படிக்க வெறுப்பு உண்டானால், அதைப் பின்பு நீக்குகிறது மிகவும் வருத்தமாக இருக்கும். பால்ய காலத்தில் நம்முடைய புத்தி முக்யமாக விளையாட்டில் செல்லும். ஆகையால் நம்முடைய காலத்தில் மிகவும் கொஞ்சகாலத்தைக் கல்வி கற்பதில் உபயோகிக்கவேண்டும். அப்படிச் செய்யாமல், காலத்தை யெல்லாம் படிப்பில்தானே செலுத்தினால், புத்தி மிகவும் வருத்தத்தை அடையும். விளையாடுகிறதினால் காலம் வீணாகப் போகின்றதே என்று எண்ணிச் சிலர் தமது சிறுவர்களை இரவும் பகலும் படிப்பில்தானே அதிகமாக வருத்துகிறார்கள். அது ஸரியல்ல. விளையாடுவதினால் மனத்திற்கு அதிக ஸந்தோஷம் உண்டாகிறது மல்லாமல், சரீரத்திற்கு ஸௌக்யமும் உண்டாகின்றது. விளையாடி வந்த உடனே படிக்க ஆரம்பித்தால், புத்தி படிக்கும் விஷயத்தில் நன்றாகச் செல்லும்.

கவனம்.—நாம் ஒரு புத்தகத்தைப் படிக்க ஆரம்பிக்கும்போது, நம்முடைய மனதையெல்லாம் அதின் விஷயத்தில் செலுத்த வழக்கம் பண்ணிக்கொள்ள வேண்டும். ஆனால் அதைப் பால்யத்தில் தானே செய்யவேண்டும். அப்படிப் பண்ணாவிட்டால், நமது புத்தியினிடத்தில் வேறு விஷயங்கள் நுழைந்து, நாம் படிக்கிற விஷயம் இன்னதென்று நம்மால் தெரிந்துகொள்ளக்கூடாமல், பிரயோசனம் இல்லாமற்போகும்; காலமும் வீணாகக் கழிந்துவிடும். ஆகையால், நாம் படிக்கிற புத்தகத்திலிருக்கும் ஸங்கதிகளை யெல்லாம் அறிய வேண்டுமானால், மனத்தை முழுதும் அவைகளில் செலுத்தவேண்டும். ஒரு புத்தகத்தை எடுத்தால், அதில் ஒவ்வொரு ஸங்கதியாகப் படித்து, அதின் கருத்தை அறிந்துகொள்ளவேண்டும். ஒருதரம் படிப்பதில் அந்த ஸங்கதி நம்முடைய மனத்தில் பதியாவிட்டால், மறுபடியும் படிக்கவேண்டும். அப்போதும் தெரியாவிட்டால், அது நன்றாக நம்முடைய மனத்திற் பதிகிறவரைக்கும் படித்து, பின்பு பதிந்ததென்று தோன்றினால், புத்தகத்தை மூடிவிட்டு, படித்ததைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். அல்லது, அதை முகபாடமாகச் சொல்லவேண்டும். அதன் பின்புதான் மற்றொரு ஸங்கதியை கவனிக்கவேண்டும். அப்படிப் புத்தகம் முழுதும் படித்தானபின்பு, அதில் தோன்றிய ஸந்தேஹங்களை அவ்வவ்விடங்களில் குறித்துக்கொண்டு, நமது உபாத்யாயரை யாவது அல்லது நம்மினும் கல்வியில் சிறந்தவர்களையாவது கேட்டுத் தெளிந்து, அவைகளை மனத்தில் அமைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமாகவே, ஒவ்வொரு பால்யனும், அவசியம் தான் படிக்கவேண்டிய புத்தகங்களை யெல்லாம் படித்து, மனத்தைத் தன்னுடைய வசத்தில் வைத்திருந்தால், பின்பு அவனுக்கு அது அநேக நன்மைகளை உண்டுபண்ணும். நாம் பால்யத்தில் அறியக்கூடாத கடினமான புத்தகங்களைப் படிக்கவேண்டுமென்று விரும்பக்கூடாது. அந்தக் காலத்தில் நமக்குக் கல்வியில் விற்பத்தியை உண்டாக்குவதும், நீதியைப் போதிப்பதும், தெய்வபக்தியை விளைப்பதும் ஆகிய நூல்களைக் கற்கவேண்டும். அப்போது அருமையான நூல்களைக் கற்பதனால் நமக்குப் பயன் ஒன்றும் இல்லாமல் போகிறதன்றியும், கற்பிப்பவர்களுடைய ப்ரயாஸமும் நமது காலமும் வீணாகின்றன. பால்ய காலத்தில் படிக்கவேண்டுமென்கிற விருப்பத்தையும், படிக்கும் விஷயத்தில் மனத்தைச் செலுத்தும் வழக்கத்தையு மாத்ரம் ஸம்பாதித்துக்கொண்டால், பின்பு ஆயுள் இருக்கிறவரைக்கும் புத்தியினால் கல்வியை விர்த்தி செய்துகொள்ளலாம்.

படிக்கத்தகுந்த புத்தகங்கள்.—உலகத்தில் வழங்கும் புத்தகங்களில் சில, பால்யர்கள் படிக்கத் தகாதனவாய் இருக்கின்றன. ஆகையால், அப்படிப்பட்ட புத்தகங்களைப் படிக்க நாம் விருப்பம் கொள்ள

லாகாது. அவைகளைப் படிப்பதனால், நம்முடைய புத்திக்குத் தோஷம் உண்டாகும். நாம் படிக்கத் தகுந்த புத்தகமென்று தெரியவந்தால், அது யாரால் செய்யப்பட்டது, அவர் எங்கே இருந்தவர், அவரைப் பற்றியும் அவர் செய்த நூலைப்பற்றியும் மனிதர்களுடைய அபிப்ராயம் என்ன என்கிற ஸங்கதிகளை முதலில் அறியவேண்டும். அவைகளை அறிந்தபின்பு, அந்த நூல் என்ன காரணத்தினால் செய்யப்பட்டதென்றும், அந்த நூலாசிரியர் தன்னைக் குறித்தும் தன்னாற் செய்யப்பட்ட புத்தகத்தைக் குறித்தும் என்ன சொல்லுகிறாரென்றும் பார்க்கவேண்டும். இப்படிப் பலவிதத்தினாலும் அது படிக்கத் தகுந்ததென்று தோன்றினால், அதைப் படிப்பதற்கு நம்முடைய காலத்தில் எது தகுதியான காலமாகத் தோன்றுகிறதோ அந்தக் காலத்தை ஏற்படுத்திக்கொண்டு ஜனசங்கம் இல்லாத இடத்திற்போய் அதைப் படிக்க ஆரம்பிக்கவேண்டும்

**படிக்கிற விதங்கள்.**—நாம் படிக்கிற இடத்தில் படுக்கை முதலானவைகளை வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. அப்படி வைத்துக்கொண்டிருந்தால், அவைகளின்மேல் படுத்துக்கொண்டு படிக்க மனம் உண்டாகும் அதற்கு இடங்கொடுத்தால், படிப்பின்மேல் மனம் செல்லாமல், பகலில் நித்திரை செய்யும் கெட்ட வழக்கம் நமக்கு உண்டாகும்.

நாம் இரவில் படிக்கும்போது, விளக்கின் ப்ரகாசம் நமது கண்களின்மேல் படாமலிருக்கும்படி அந்த விளக்கை எதனாலாவது மறைத்துப் புத்தகத்தின்மேல் மாத்ரம் அதன் ப்ரகாசம் தோன்றும்படி செய்துகொள்ளவேண்டும்.

நாம் ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது, அது இத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், இன்னின்ன பிரிவில் இன்னின்ன விஷயம் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், முன்னே அறியவேண்டும்.

நமக்கு ஒரு நூலில் உண்டாகிய ஸந்தேஹம் தீருகிறதற்கு முன்னே மற்றொரு நூலைப் படிக்கக்கூடாது. அப்படிப் படித்தால், கல்வி நிரம்பாமல் போகிறதன்றியும், நாம் படித்த விஷயங்களெல்லாம் நமக்கு ஸந்தேஹமாகவே இருக்கும். ஆகையால், அப்போது கல்வியில் நமக்கு உண்டாகிய ப்ரயாஸம் வீணாகிறதன்றியும், நன்றாகக் கற்றவர்களில் வைத்து எண்ணப்படமாட்டோம் நாம் ஒருநாள் படித்ததை மறுநாளைக்குப் படித்துப் பின்பு அன்றைப் பாடத்தைப் படிக்கவேண்டும். அதனால் படித்த விஷயங்களெல்லாம் நன்றாக ஞாபகத்தில் இருப்பதல்லாமலும், படிக்கப்போகிற பாடமும் ஸுலபமாகத் தெரியும். அநேக புத்தகங்களைப் போதுமானமட்டும் சிந்தனை செய்

யாமல் படிக்கிறதைப் பார்க்கிலும், நாலைந்து நல்ல புத்தகங்களைச் சிந்தனையோடும் படித்தால், அவை பால்யர்களுக்குப் போதுமான கல்வியைக் கொடுக்காமற் போகமாட்டா. படிக்கத் தெரியாத ஒருவனிடத்தில் அநேக புத்தகங்கள் இருந்தாலும், அவைகளால் அவன் கெட்டிக்காரனென்று சொல்லப்படமாட்டான்; புத்தகங்களை விற்கிறவனிடத்தில் அநேக நல்ல புத்தகங்கள் இருந்தாலும் எப்படி அவைகளின் பயனை அவன் அறியாமல் இருக்கிறானோ அப்படிப்போலாவான்.

நாம் ஒரு புத்தகத்தை வாங்கி அதைப்படித்து அதிலிருக்கிற ஸங்கதிகளையெல்லாம் அறிவதற்கு முன்னமே வேறொரு புத்தகத்தை வாங்கக்கூடாது வாங்கினால் அதைப் படிக்க விரும்பி முன் படித்துக்கொண்டிருந்ததை விட்டுவிடும்படியாக நேரிடும் புதிய புத்தகத்தில் கொஞ்சதூரம் படித்துக்கொண்டுபோன பிறகு, மறுபடியும் பழைய புத்தகத்தின்மேல் மனம் திரும்பும் இப்படியே ஒன்றையும் முழுதும் நன்றாகப் படிக்கக்கூடாமல் காலம் வீணாகக் கழிந்து போகும். ஆகையால், படிக்கும்படி எடுத்த புத்தகம் முடிவதற்கு முன்னமே வேறொரு புத்தகத்தைப் படிக்க எத்தனப்படக்கூடாது.

**கல்விப்பொருளின் விசேஷம்**—நமக்குக் கல்வி கற்பிக்கும் உபாத்யாயருக்கும், நம்மினும் கல்வியில் உயர்ந்தவர்களுக்கும், நாம் கீழ்ப்பட்டு நடக்கவேண்டும் அப்படி நடந்தால், அவர்கள் நம்மிடத்தில் இஷ்டம் உடையவர்களாகி, தாம் அதிக ப்ரயாஸப்பட்டுக் கற்றதையெல்லாம் நமக்குச் சொல்ல விரும்புவார்கள். பால்ய காலத்தில் வருத்தப்பட்டுக் கல்விப்பொருளை ஸம்பாதித்து வைத்துக்கொண்டால் அதனால் நம்முடைய பருவகாலத்தில் நாம் ஸகல ஸௌக்யங்களையும் அடைவோம். பால்ய காலத்தில் கல்விப்பொருளை ஸம்பாதிக்காமல், நம்முடைய தாய் தந்தைகள் வைத்திருக்கிற செல்வப் பொருளே நமக்குப் போதுமென்று எண்ணியிருக்கக்கூடாது. ஏனென்றால், அந்தச் செல்வப்பொருள் என்றைக்கும் ஒருவரிடத்தில் நிலையாய் இருப்பதன்று: அது எப்போதாயினும் நம்மை விட்டு நீங்கிவிடும். கல்விப்பொருளோ வெள்ளத்தாலும் கொள்ளப்படாது; நெருப்பினாலும் வேகாது; வேந்தர்கள் கோபித்தவிடத்தும் அவர்களால் க்ரஹிக்கப்படாது; திருடர் முதலாயினோராலும் எடுத்துக்கொள்ளக்கூடாது; கொடுக்குந்தோறும் விர்த்தியாகும்; காவல் முதலியவற்றால் பாதுகாப்பதையும் விரும்பாது: சரீரமாகிய பேழையும் புத்தியாகிய சாவியும் அழியாமலிருந்தால், அது நம்முடைய ஆயுள் இருக்கிற வரைக்கும் நம்மை விட்டு நீங்காமலிருக்கும்.

கல்லாதவனிடத்தில் செல்வப் பொருள் இருந்தால், அவனுக்கு அதைப்பார்க்கிலும் சத்ரு வேறொன்றும் இல்லை. மூடன், ஒன்றைப் பார்த்துப் படிக்கமாட்டாமையால் கண்ணிருந்தும் குருடனென்றும், கற்றவர்கள் சொல்வதைக் கேட்டறியாமையால் காதிருந்தும் செவிடனென்றும், அழகு பொருந்திய மனித உருவத்தை உடையவனாக இருந்தும் கல்வியறிவில்லாமையால் மரப்பாவை யென்றும், அறிவுடையோரால் இகழப்படுகிறான். நாம் கற்கும் கல்வியானது நமக்கு ஸந்தோஷத்தையும் பெருமையையும் உண்டாக்குவது போல, நமது தாய் தந்தைகளுக்கும் சுற்றத்தார்களுக்கும் அப்படியே ஸந்தோஷத்தையும் பெருமையையும் உண்டாக்கும்.

கல்வியே புருஷார்த்த சாதனம்.—கல்வியைக் கற்றவன், எவ்வளவு தாழ்ந்தவனாக இருந்தாலும் களர் நிலத்தில் உண்டாகிய உப்பைப்போல, உயர்ந்தவர்களில் வைக்கப்படுகிறான். ஆதலால், நாம் அவனை நிஷித்ரமாக நினைத்து அவனுக்கு மர்யாதை செய்யாமலும் அவனிடத்தில் இருக்கிற கல்வியைக் கற்காமலும் இருக்கக்கூடாது. நன்றாகக் கற்றவன் ஓரூரில் ஓரிடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தாலும், அவன் கீர்த்தி எல்லாத் தேசங்களிலும் உலாவிக்கொண்டிருக்கும். கல்லாதவன் புத்தியினால் எவ்வளவு யுக்தியாகப் பேசினாலும், படித்தவர்கள் அதனை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள். வித்தையை உடையவனுக்குக் கல்வியே சிறந்த ஆபரணமாக இருக்கும். ஆகையால், அவனுக்கு வேறே பூஷணம் வேண்டுவதில்லை. அவன் வேறே பூஷணத்தை அணிந்தால், அது அழகுக்கு அழகு செய்வதைப்போல் இருக்கும். உலகத்தில் அறம் பொருள் இன்பம் வீடு என்று சொல்லுகின்ற இந்த நான்கு உறுதிப் பொருள்களுக்கும் கல்வியானது முக்ய சாதனமாக இருக்கின்றது. ஆதலால், நாம் இம்மையில் செல்வத்தையும் புகழையும் மறுமையில் மோக்ஷத்தையும் அடையவேண்டும் என்று விரும்பினால், கல்வியைக் குறைவறக் கற்றுக்கொள்வோமாக.

# ஸ்நேஹம் செய்தல்

உண்மையான ஸ்நேஹர்கள்.—உலகத்தில் எல்லா மனிதர்களையும் ஸ்நேஹிப்பது நமக்கு அவசியமாக இருந்தாலும், அவர்களெல்லாம் நம்முடைய ஸ்நேஹிதர்களென்று நாம் நினைக்கக்கூடாது. அவர்களில் ஒருவன் அல்லது இரண்டு பெயர் நமக்கு உண்மையான ஸ்நேஹிதராக இருப்பர். அவர்களை, அநேக ரத்தினங்களில் ஸகலவிதத்திலும் யோக்யதையுள்ள ரத்தினத்தைப் பார்த்துத் தெரிந்து எடுத்துக்கொள்வ

தைப்போல், பலவிதத்திலும் சோதித்துப் பார்த்து, உண்மையானவர்களென்று தெரியவந்தால், பின்பு நாம் அவர்களுடன் மனங்கலந்து ஸ்நேஹிக்கவேண்டும்.

உண்மையல்லாத ஸ்நேஹர்கள்.—உண்மையான ஸ்நேஹிதர்களை ஸம்பாதிப்பதும், ஒருவேளை அகப்பட்டாலும் அந்த ஸ்நேஹத்தைக் காப்பாற்றிக்கொள்வதும், நமக்கு வெகு கடினமாக இருக்கும். சிலர், தம்முடைய சொந்த ப்ரயோசனத்திற்காக நம்மை ஸ்நேஹித்து, அது முடிகிறவரைக்கும் நமக்கு உண்மையானவர்களைப் போலவும், நமது கார்யங்களில் சிரத்தையுடையவர்களைப் போலவும் இருப்பார்கள். அவர்களுக்கு நம்மால் ஆகவேண்டிய கார்யம் முடிந்துவிட்டால், பின்பு நம்மைவிட்டு நீங்கிப்போவார்கள். இவர்களை நமக்கு ஸ்நேஹிதர்களென்று நம்பி அவர்களோடு நம்முடைய ரஹஸ்யங்களையெல்லாம் சொல்லக்கூடாது. சொன்னால் பின்பு அவர்களால் நமக்குப் பொல்லாங்கு ஸம்பவிக்கும்.

நட்பாராய்தல்.—ஒருவர் நம்மோடு ஸ்நேஹிக்கவந்தால், உடனே நாம் அவரை ஸ்நேஹிக்கக் கூடாது. அவருடைய நடக்கைகளையெல்லாம் நாளாவட்டத்தில் பார்த்து, நம்மால் எதுவாகிலும் பெற வேண்டியோ அல்லது நமது நட்பை மாத்திரம் விரும்பியோ ஸ்நேஹிக்க வந்தவரா என்று அறியவேண்டும். நமது ஸ்நேஹத்தை விரும்பி வந்தவராக நமக்குத் தெரிந்தால், நாம் சில கெட்ட கார்யங்களில் ப்ரவேசித்து அவர் நம்முடைய க்ஷேம ஸௌக்யங்களை உண்மையாகக் கோருகிறதை அறியவேணடும். அப்படிச் செய்யும்போது, நல்ல புத்திகளைச் சொல்லி, அந்தக் கெட்ட கார்யங்களில் நின்றும் நம்மை நீக்காமல் பராமுகமாக இருந்தால், அவர் ஏதோ தமது சொந்த கார்யநிமித்தம் நம்மிடத்தில் வந்தாரென்று அறிந்து, அவரிடத்தில் நாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஸ்நேஹபங்கம் வந்தாலும் வரட்டுமென்றெண்ணி, அதனால் தமக்குப் பயனிருந்தாலும் அதைப் பாராமல், நம்மை துர்விஷயத்தில் ப்ரவேசிக்கவொட்டாமல் தடுத்தால், நமது ஸௌக்யத்தை விரும்புகிறவரென்று அறிந்து, வெளியிட்டாலும் நமக்குப் பொல்லாங்கு விளையாத சில ரஹஸ்யங்களைச் சொல்லி அதை அவர் தம் மனத்தில் வைத்துக் காப்பாற்றுவதையும் வெளியிடுவதையும் அந்யரைக்கொண்டு கேட்பித்து அறியவேண்டும். நாம் இப்படிச் சோதித்ததில், அவர் ஸரியானவராக இருந்தால், பிறகு அவரோடு உண்மையாய் ஸ்நேஹிக்கவேண்டும். அன்றியும், அவர் மேலான கல்வியும் நன்னடக்கையும் உடையவராக இருக்கவேண்டும். நாம் இவ்வளவு ப்ரயாஸப்பட்டு ஸம்பாதித்த ஸ்நேஹத்தை ஜாக்ரதையாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

**ஸ்நேஹரில் மூன்று வகை.**—யாதொரு பயனையும் விரும்பாமல் ஸ்நேஹிப்பவன் உத்தமன் என்றும், பந்துத்துவம் செல்வம் முதலியவற்றைக் கருதி ஸ்நேஹிப்பவன் மத்திமன் என்றும், ப்ரயோசனத்தை விரும்பி ஸ்நேஹிப்பவன் அதமன் என்றும் சொல்லப்படுகிறார்கள். ஆதலால், நாம் ஒரு பயனையும் கருதாமல், எவர்கள் நற்குண நற்செய்கைகளை உடையவர்களாய் இருக்கிறார்களோ, அவர்களை ஸ்நேஹிக்கவேண்டும்.

**ஸ்நேஹருக்கு வரும் விபத்தை நீக்கல்**—நம்முடைய உண்மையான ஸ்நேஹிதர்களுக்கு நாம் மனமறிந்து ஒரு தீங்கும் நினைக்கக் கூடாது. யாராகிலும் அவர்களுக்குத் துன்பஞ்செய்ய நினைக்கிறதாகக் கேள்விப்பட்டாலும், அது நமக்கு வருவதைப்போல நினைத்து, வேண்டிய முயற்சிகளைச் செய்து, ஸ்நேஹனுக்கு வரும் அந்த விபத்தை விலக்கவேண்டும் இப்படிச் செய்யும் விஷயத்தில் நமக்குப் பணச் செலவு முதலிய வருத்தங்கள் நேரிட்டாலும், அவற்றிற்குப் பின்வாங்கக் கூடாது. இந்த ப்ரகாரம் நாம் செய்ததை நாமே நம்முடைய ஸ்நேஹிதரோடு சொல்லக்கூடாது. ஆனால், மறுபடியும் அப்படிப் பட்ட துர்விஷயத்திற்கு உள்ளாகாமலிருக்கும்படி அவர்களுக்கு நல்ல புத்திகளை மாத்ரம் சொல்லவேண்டும் நாம் நம்முடைய ஸ்நேஹிதர்கள் விஷயத்தில் எடுத்துக்கொண்ட ப்ரயாஸையை அவர்கள் யாராகிலும் அறியும்போது, நமது புத்திக்கும் நாம் அவர்கள்மேல் வைத்திருக்கும் அன்பிற்கும் அதிக ஸந்தோஷத்தை அடைந்து, நம்மிடத்தில் அதிக விசுவாஸமாக இருப்பார்கள்: அல்லாமலும் நமக்கு ஆபத்து வந்த காலத்திலும், நம்மை விட்டுப் பிரியாமல், அது தமக்கு வந்ததுபோல நினைத்து, நம்மை அதிலிருந்து நீக்கவேண்டியதற்காகத் தகுந்த முயற்சியும் செய்வார்கள்.

**ஸ்நேஹரிடத்தில் மர்யாதை.**—நாம் நமது ரஹஸ்யங்களை நம்முடைய உண்மையான ஸ்நேஹிதர்களோடு மறைக்காமல் சொல்லிவிட வேண்டும் அவர்கள் நம்முடைய வீட்டிற்கு வந்தால் ஸகல மர்யாதைகளும் செய்யவேண்டும். ஸ்நேஹிதர்கள்தானே யென்று அலக்ஷ்யமாக இருந்தால், அவர்களுடைய மனத்தில் வெறுப்பு உண்டாகும்; பின்பு ஸ்நேஹத்துக்குக் கெடுதி நேரிடும். நாம் மேலான கல்வியையும் தொழிலையும் உடையவர்களை நூதனமாகக் கண்டால் அவர்களுக்கு என்ன மர்யாதை செய்வோமோ, அந்த மர்யாதை நம்முடைய ஸ்நேஹிதருக்கும் எப்போதும் செய்யவேண்டும். ஸ்நேஹம் நீடித்திருக்க விரும்பினால், நாம் நமது ஸ்நேஹிதர்மேல் மனத்தில் அணு மாத்ரமும் பகை வைக்கக்கூடாது. நமது ஸ்நேஹிதர்களின் கல்விக்கும் ஐசுவர்யத்திற்கும் பொறாமை படக்கூடாது. அப்படிப் பொறாமைப் படுவது ஸ்நேஹத்துக்கு நஷ்டத்தை உண்டுபண்ணும். ஒரு ஸ்நே

ஹிதன் கெட்டவழியில் போனால், அதைத் தடுப்பது அவனுடைய உண்மையான ஸ்நேஹிதனுக்குக் கடமையாக இருந்தாலும், அவனைத் தடுத்து நல்லவழியில் கொண்டுவர யத்தனப்படும்போது, அவனுக்குச் சொல்லுகிற புத்தியும் வார்த்தையும் ஹிதமாகவும் மதுரமாகவும் இருக்க வேண்டும். நம்முடைய ஸ்நேஹிதர்கள் ஒரு கெட்ட கார்யம் செய்திருந்தால், அதைப் பலதரம் எடுத்துப் பேசக்கூடாது. எந்தத் தருணத்தில் சொன்னால் கோபிக்காமல், நாம் சொல்லுகிறது புத்தியென்று நினைப்பார்களோ, அந்த ஸமயத்தில்தானே நன்றாய் அவர்கள் மனத்தில் படும்படியாகச் சொல்லிவிட்டு, பிறகு அதைப்பற்றி யாதொன்றும் சொல்லலாகாது.

**உண்மையான ஸ்நேஹரிடத்தில் நமது கடமை**—உலகத்தில் நமக்கு உண்மையான ஸ்நேஹிதர்கள் அகப்பட்டிருந்தால், அதை நமக்குப் பெரிய பணப்புதையல் அகப்பட்டதைப்போல் நினைக்கவேண்டும். நாம் எவ்வளவு தூரத்தில் போயிருந்தாலும், நமது உண்மையான ஸ்நேஹிதர்களை எப்போதும் மறக்காமல், அவர்களுக்கு நம்முடைய க்ஷேமத்தைக் குறித்து அடிக்கடி தெரிவித்து, அவர்களது ஸுக ஸமாசாரத்தையும் கடிதமூலமாக அறிந்துகொண்டிருப்பது நமக்குக் கடமையாக இருக்கவேண்டும்.

**மற்றவர்களிடத்தில் நடக்கும் விதம்**—உலகத்தில் நமக்கு இரண்டொருவர் உண்மையான ஸ்நேஹிதர்களாக இருந்தாலும், மற்றவர்களையும் நாம் ஸ்நேஹிதர்களைப் போலவும் பந்துக்களைப் போலவும் எண்ணி, எல்லாரோடும் ப்ரியமாகப் பேசவேண்டும். நாம் அப்படிக் கில்லாவிட்டால் எல்லாரும் நமக்கு விரோதிகளாக இருப்பார்கள். அப்போது நம்முடைய மனத்திற்கு அதிக வருத்தம் உண்டாகும். ஆகையால், நாம் எல்லாரோடும்ப்ரியமாகப்பேசிக்கொண்டும், பேலோருடைய ஸ்நேஹத்தை நூதனமாக ஸம்பாதித்துக்கொண்டும் இருக்க வேண்டும். தோட்டக்காரன் தான் வைத்த மரங்களிடத்திலிருந்து அதிக பலனைப் பெறவேண்டி எப்படி ஜாக்ரதையோடு அவைகளுக்கு நல்ல எரு முதலானவைகளைப் போடுவானோ, அப்படிப் போலவே; உலகத்திலிருக்கும் எல்லா மனிதர்களும் நம்மை விசுவாஸிக்க வேண்டியதற்காக நாம் அவர்களோடு இன்சொல் சொல்லவேண்டும். நாம் எல்லாரிடத்தும் விசுவாஸம் உடையவர்களாக இருந்தால், நமக்கு அந்யர்களும் பகைவர்களும் இல்லாமல், யாவரும் உறவினர்களாக இருப்பார்கள். அப்படியிருப்பது உலகத்தில் நாம் அடையவேண்டும் நன்மைக்கெல்லாம் காரணம் ஆகலால், எல்லா மனிதர்கள் மேலும் ப்ரீதியாய் இருப்பது நமக்கு முக்ய கடமை என்று அறிவோமாக.

# பணம் சம்பாதித்தல்.

பாபமில்லாத தொழின் முயற்சி. — பணம் ஸம்பாதிப்பதற்கு உலகத்தில் அநேக தொழில்கள் இருந்தாலும், அவற்றுள் எது பாபமில்லாததாயும் ஒருவருக்கும் வருத்தத்தை உண்டாக்காததாயும் இருக்கிறதோ அந்தத் தொழிலையே நாம் கைப்பற்றவேண்டும். பாபத்தை உண்டுபண்ணும் களவு சூது மோசம் முதலானவைகளால் நமக்குப் பணம் சீக்ரத்தில் அதிகமாகப் பெருகினாலும் அந்த த்ரவியம் விரைவில் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நாம் செய்த அத்தீத்தொழில்களால் உண்டான பாபமாத்ரம் நம்மைவிட்டு நீங்காது. அதைக் குறித்துக் கடவுளால் தண்டிக்கப் படுவோம். உலகத்தில் அநேகர் தங்களுக்கிருக்கிற மேலான அதிகாரத்தினால் ஏழைகளை வருத்திப் பணத்தைப் பறிக்கிறார்கள். அதனால் அவர்கள் ஸௌக்யம் அடைகிறதும் அதை அனுபவிக்கும் அவர்கள் ஸந்ததி விர்த்தி அடைகிறதும் இல்லை. ஹிம்ஸை செய்து பொருள் ஸம்பாதிப்பவர்கள் உயிருடன் இருக்கிறவரைக்கும், தாங்கள் செய்யுங் கொடுமை எவ்விஷயத்தில் வெளியாகுமோ, அதனால் தமக்கு என்ன தண்டனை ஸம்பவிக்குமோ என்று இரவும் பகலும் மனவருத்தம் கொண்டிருப்பது மன்றி, அந்தப் பொருளை யாரிடத்திலாவது கொடுத்துவைக்கத் துணிகிறார்கள் வாங்கிவைத்துக்கொண்டவர்கள் அதை அபஹரித்துக்கொண்டு தங்களிடத்தில் கொடுத்தவர்களையாவது அல்லது அவர்களுக்குப் பின்பு அவர்கள் வம்சஸ்தர்களையாவது வஞ்சிக்கிறார்கள். எவர்களும் வருத்தமுறும்படி ஸம்பாதிக்காமல், நாம் சரீர ப்ரயாஸப்பட்டுப் பொருள் ஸம்பாதித்தால், அதை நாம் ஒருவருக்கும் அஞ்சாமல் அனுபவிக்கலாம். அதை அனுபவிக்கும் நமது வம்சஸ்தர்களும் நன்றாக விர்த்தியடைவார்கள். அந்தப் பொருளை ஒருவரும் அபஹரிக்கமாட்டார்கள். ஒருவேளை அபஹரித்தாலும், அது நமது சொந்த முயற்சியினால் ஸம்பாதிக்கப்பட்டதாகையால், ந்யாயஸ்தலத்தில் பிராது முதலானதுகளும் செய்து அதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கமாட்டோம்.

ஜீவனோபாயம்.—மனிதர்கள் எவ்வளவு ப்ரயாஸப்படுகிறார்களோ அதற்குத் தகுந்தபடி கூலி கொடுக்கக் கடவுள் ஸித்தமாக இருக்கிறார். நாம் ப்ரயாஸப்படாமல் இருந்தால், ஜீவிப்பது கடினமாக இருக்கும். உலகத்தில் பொருளானது எல்லாவற்றிற்கும் இன்றியமையாததாக இருக்கின்றது. அதை ஸம்பாதித்தால், மற்றவைகளை ஸம்பாதிப்பது மிகவும் எளிதாக இருக்கும். ஆகையால் நாம் நல்ல வழியில் முயன்று பொருளை ஸம்பாதித்து வைத்துக்கொள்ளவேண்டும் உலகத்தில் மனிதர்கள் யாவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்யவேண்டிய

தற்குப் போதுமான வஸ்துக்கள் இருக்கின்றன. அந்த வஸ்துக்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொன்றைத் தனது புத்தியினால் தொழிற்படுத்தி அதைத் தனது உழைப்பிற்குத் தகுந்தபடி விலைப்படுத்தி அந்தப் பணத்தினால் ஜீவித்துக்கொண்டுவரலாம்.

பயிர்த்தொழில்.—மனிதர்களில் சிலர் தேஹபலத்தை உடையவர்களாகவும், சிலர் புத்தியை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். தேஹ பலத்தோடு கூடியவர்கள், தொழில்கள் பலவற்றிலும் பயிரிடும் தொழில் மேலானதாகையால், அதில் ப்ரவேசிப்பது நலமாக இருக்கும். புத்திமான்களாக இருப்பவர்கள் உலகத்தவர்களால் தூஷிக்கப்படாத வர்த்தகம்செய்தல் கல்விகற்பித்தல் முதலாகிய குற்றமற்ற தொழில்களில் ப்ரவேசிக்கலாம். பயிரிடும் தொழில் செய்பவனுக்கு ஸமானமாக உலகத்தில் மற்றொருவனையும் சொல்லக் கூடாது. ஆனால் அவன் அதிக ஜாகரதையோடும் வயல்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு, எந்தக் காலத்தில் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்துகொண்டு தனக்குக்கீழ் அநேக வேலைக்காரர்களும் காரியகாரர்களும் இருந்தாலும் அவர்களை நம்பாமல், 'உடையவன் கண்ணோடாப் பயிர் அழியும்' என்பதை அறிந்து, எல்லாக் காரியங்களையும் தானே பார்த்துக்கொண்டுவந்தால், அவனது வயல்கள் நன்றாக விளையாமலும் அவனுக்கு த்ரவ்யலாபம் உண்டாகாமலும் போகமாட்டா. ஆகையால் நமக்கு தேஹபலமும் பயிரிடுகிறதற்குப் போதுமான முகாந்தரங்களும் இருந்தால், அதை விட்டு வேறொரு தொழிலில் ப்ரவேசிக்கக்கூடாது. நமக்குப் போதுமான தேஹபலம் இல்லாவிட்டால் அப்போது மாத்ரம் மற்றத் தொழிலில் ப்ரவேசிக்கவேண்டும்.

வர்த்தகத்துக்கு அவசியமானவை.—முன்னே நாம் வர்த்தகம் செய்கிறதற்கு நம்மிடத்தில் கொஞ்சம் முதல் இருக்கவேண்டும். அதனோடு பொய்யாமையும் இருக்கவேண்டும். இவ்விரண்டும் இருந்தால் நமக்கு அதிக லாபம் உண்டாகிறது மல்லாமலும் நமது வர்த்தகம் நீடித்தும் இருக்கும். நாம் கொண்டு விற்கப்பட்ட வஸ்துக்களுக்கு அதிக லாபம் வைக்காமல் அவைகளை வேண்டி வருபவர்களுக்குக் கொடுத்தால், எல்லாரும் நம்மிடத்தில் வருவார்கள். ஒருகாலத்தில் அவர்களுக்கு வேண்டியவைகள் நம்மிடத்தில் இல்லாவிட்டாலும், நாம் பொய் சொல்லமாட்டோம், அதிக லாபம் வைத்துக்கொள்ளமாட்டோம் என்று அவர்கள் நம்மை அறிந்திருப்பதினாலே, அந்த வஸ்துக்களை நம்முடைய மூலமாக வரவழைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்வார்கள். அப்படி வரவழைத்துக் கொடுப்பதினால் நம்முடைய ப்ரயாஸைக்குத் தகுந்தபடி நமக்குத் தரகு கொடுப்பார்கள். இப்படி யாவரும் நம்மிடத்தில் அதிக நம்பிக்கை வைப்பதனால், அதிக

லாபம் வைத்து விற்பவனுடைய கடையைப் பார்க்கிலும் நமது கடையில் விற்று முதல் அதிகப்படும், லாபமும் அதிகமாகும். அப்படிக்கில்லாமல், கொள்வது அதிகமாகவும் விற்பது குறைவாகவும் இருந்தால், அந்த வர்த்தகம் விருத்தியாகமாட்டாது. நமக்குக் கிடைத்த லாபத்தை நாம் வீண்செலவு செய்யாமல் நமக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு செலவுசெய்து, மற்றப் பணத்தைச் சிக்கனமாகச் சேர்த்து வைத்துக்கொண்டால், சில நாட்களுக்குப் பிறகு நாம் பெரிய வர்த்தகர்களென்றும் பொருளுடையவர்களென்றும் சொல்லப்படுவோம்.

வியாபார மார்க்கங்களை அறிதல்—நமக்கு முதல் எவ்வளவு இருந்தாலும், செலவு மட்டாகச் செய்யாமல் வரவுக்கு அதிகமாகச் செலவு செய்தால், அந்த முதல் குறைந்துபோகும்: அன்றியும் வெகு சீக்கிரத்தில் கடன்காரர்கள் ஆகிவிடுவோம் பால்யகாலத்தில் நாம் வர்த்தகம் செய்ய விரும்பினுல், நாமே அந்தப் பருவத்தில் வர்த்தகம் செய்ய ப்ரவேசிக்ககூடாது. நல்ல யோக்யனுகவும் எல்லாராலும் அறியப்பட்டவனுகவும் இருக்கிற ஒரு வர்த்தகனடத்தில் சில காலம் பழகவேண்டும். அப்படி இருக்கும்போது, அந்த வர்த்தகன் செய்கிற வ்யாபார மார்க்கத்தை யெல்லாம் அறிந்துகொண்டு, பின்பு அவனுடன் பங்கு சேரவேண்டும். பங்காக இருந்து வர்த்தகம் செய்யும்போது, நாம் கொண்டு விற்கிற எல்லாச் சரக்குகளின் க்ரயமும், அவைகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றனவோ அதையும் நாம் ஒரு கணக்கில் பதித்துக்கொண்டு, கடைசியில் நமது கணக்குப்ரகாரம் நமக்கு லாபம் ஸரிவரப் பார்த்துக்கொள்ளவேண்டும். வேருெருவனுடைய உதவியில்லாமல் வர்த்தகம் செய்யும ஸாமர்த்யம் நமக்கு உண்டானுல், அப்போது நாம் தனித்து வ்யாபாரம் செய்துகொள்ளலாம். வர்த்தகமானது பயிரிடும் தொழிலுக்கு ஸமானம் ஆகாவிட்டாலும் அதற்கு இரண்டாவதாகச சொல்லலாம். ஏனென்றுல், வர்த்தகனும் ஒருவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டிய அவசியம் இல்லாதவனுக இருக்கிருன்.

உபாத்திமை, ஸேவகம்—கற்பிக்கும் தொழிலும் ஒருவரிடத்தில் ஸம்பளத்திற்கிருக்கும் தொழிலும் அதமமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும், உபாத்யாயர்கள், தமக்குக் கொடுக்கப்படுகிற ஸம்பளத்தின்மேல் லக்ஷ்யம் வைக்காமல், தம்மிடத்தில் விடப்பட்ட பிள்ளைகளைத் தமது சொந்த பிள்ளைகளைப்போல் பாவித்து, அவர்களுக்கு வேண்டியவைகளை யெல்லாம் கற்பித்துக்கொண்டும, ஒருவரிடத்து ஸேவிப்பவர்கள் தமக்கு இடப்பட்டிருக்கிற வேலையைத் தமது சொந்த வேலையைப்போல நினைத்துச் செய்துகொண்டும் வந்தால், பிள்ளைகளின் தாய் தந்தைகளும் வேலைகள் கொடுத்த எஜமான்களும் தங்களுக்

குக் கிடைத்திருக்கிற உபாத்தியாயர்களின்மேலும் காரியகாரர்களின் மேலும் அதிக ஸந்தோஷத்தை அடைந்திருப்பார்கள். அப்படி ஸந் தோஷத்தை அடைகிறவர்களிடத்தில் இருப்பது யாருக்கும் வருத்த மாக இராது. நாம் உண்மையாகப் பாடுபட்டு ஸம்பாதிப்பது கொஞ் சமாக இருந்தாலும், அது மேன்மையைத் தரும். ஆகையால், நாம் பணம் ஸம்பாதிக்க ப்ரவேசிக்கும் எல்லா விஷயங்களிலும் உண்மை யாக இருந்து, நமக்கு ந்யாயமாகக் கிடைத்த லாபத்தினால் உஜ்ஜீவித் துக்கொண்டு வரவேண்டும்.

தர்மம்.—நாம் ந்யாயமாக ஸம்பாதிக்கும் பொருளில் சிலவற்றை எளியவர்களுக்கும், கூன் குருடு ஊமைகளுக்கும், வேலைசெய்ய முடி யாத கிழவர்களுக்கும் கொடுக்கவேண்டும். தமது உழைப்பினால் ஜீவிக்கும் திறமை உடையவர்களாய் இருந்தால், அவர்களுக்கு ஒன் றும் கொடுக்கக்கூடாது. கடவுள் ஒருவனுக்கு அதிக த்ரவியத்தைக் கொடுப்பது, ஏழைகள் முதலானவர்களுக்குக் கொடுக்கிறதற்கேயன்றி, தேஹத்தில் திடமிருக்கிறவர்களுக்குக் கொடுத்து அவர்களை முழுச் சோம்பேறிகள் ஆக்குகிறதற்கன்று.

தர்மம் செய்கிற விதம்—நாம் போகும் வழியில் எவர்களாகி லும் இருக்க வீடில்லாமலும் உடுக்க வஸ்திரமில்லாமலும் இருந்தால், அவர்களுக்கு நமது கையிலிருக்கும் பணத்தை வீடு கட்டிக்கொள்ளவா வது வஸ்திரம் வாங்கிக்கொள்ளவாவது கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்கும்போது நாம் இன்னாரென்று அவர்களுக்கு அறிவிக்கக் கூடாது. நாம் ஒருவரோடும் இன்ன இடத்தில் இன்னாருக்கு இவ்வ ளவு கொடுத்தோமென்று சொல்லவுங்கூடாது. நாம் செய்ததை உட னே மறந்துவிடவேண்டும். நம்மை அவர்கள் அறிந்தால், அவர்கள் மற்றவர்களோடு சொல்லுவார்கள். அதை அறிந்து அவர்கள் தம்மிடத் தில் போதுமான பணம் இருந்தாலும், நம்முடைய பணத்தை க்ரஹிக் கவேண்டி மிகுந்த தரித்ரம் அடைந்தவர்களைப்போல வேஷம் போட் டுக்கொண்டு, நமது முன்பாக வந்து நமக்கு அதிக வருத்தத்தைக் கொடுப்பார்கள். ஆகையால் நாம் செய்கிற தருமம் ஒருவருக்கும் தெரியாமல் இருக்கவேண்டும்

நாம் இருக்கப்பட்ட இடத்தில் யாராவது எளியவர்கள் வ்யாதியை அடைந்திருந்தால், நாம் எப்படிப்பட்ட மேலான தொழிலை உடைய வர்களாக இருந்தாலும் அதனால் நாம் கௌரவப்பட்டவர்களென்று எண்ணாமல், உடனே அவர்களைப் போய்ப் பார்த்து, அவர்களுக்கு வைத்யத்துக்கும் சாப்பாட்டுக்கும் வேண்டிய பணத்தைக் கொடுத்து, அவர்கள் அந்த வ்யாதியிலிருந்து ஸௌக்யம் அடையுமளவும் நாள்தோ றும் விசாரணை செய்துகொண்டே இருக்கவேண்டும்.

தாய் தந்தைகள் இல்லாத பிள்ளைகளைக் காப்பாற்றவும், ராஜ்யபாலனத்தின் பொருட்டு அந்யதேசத்தில் போய்ச் சண்டையில் இறந்தவர்களுடைய மனைவிகளைக் காப்பாற்றவும் ஏற்பட்டிருக்கின்ற ஸபைக்கும், கூன் குருடு முதலானவர்களுக்கு வந்த வியாதிகளைப் போக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற வைத்யசாலைக்கும், நம்மால் கூடிய மட்டும் மாதம் மாதம் நமக்கு ந்யாயமாக வரும் பொருளில் கொஞ்சம் கொடுக்கவேண்டும். தர்மம் செய்வதால் நமக்கு நாளுக்குநாள் அதிக ஐசுவர்யமும் புண்யமும் உலகத்தாரால் புகழ்ச்சியும் உண்டாகும். தர்மம் செய்யாவிட்டால், நாம் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கும் பொருளினால் மறுமையில் ஒரு பயனையும் அடையமாட்டோம். த்ரவ்யமானது ஒருவரிடத்திலும் நிலையாயிருப்பதன்று என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகையால், அப்படிப்பட்ட பொருளை நாம் பெற்ற பொழுதே நம்மால் கூடியமட்டும் ஏழைகள் முதலானவர்களுக்கு உதவி, உயிருக்குத் துணையாகிய புண்யத்தைத் தேடிக்கொள்வது நமக்கு முக்ய கடமையாக இருக்கின்றது.

செலவு—நாம் ப்ரயாஸப்பட்டு ந்யாயமாக ஸம்பாதிக்கிற பொருளை வீண்செலவு செய்யக்கூடாது. நாம் செலவு செய்யும்போது, ஒவ்வொரு காசையும் எவ்வளவு ப்ரயாஸப்பட்டு ஸம்பாதித்தோமோ அதை ஆலோசிக்கவேண்டும். நாம் செலவுசெய்யும் விஷயம் ந்யாயமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கவேண்டும். அப்படிக்கிருந்தால், அதற்கு எவ்வளவு செலவு பிடிக்குமோ அதைக் குறிப்பிட்டு, அதில் குறைக்கலாமென்று நமக்குத் தோன்றுகிறதைக் குறைத்துவிடவேண்டும். நம்முடைய காரியங்களில் இப்படிச் சிக்கனமாகச் செலவு செய்யாமல் விசேஷமாகச் செய்தால், நம்மிடத்தில் எவ்வளவு த்ரவியம் இருந்தாலும் அது கொஞ்சங் கொஞ்சமாகச் செலவழிந்து போகும்.

அதிகப்படி செலவை ஸரிக்கட்டும் விதம்.—நாம் ஸம்பாதித்துவைத்த பொருளில் செலவான தொகைக்குப் பதில் உடனே ஸம்பாதித்து அதனோடு சேர்க்கவேண்டும். அல்லது, அந்தத் தொகை அதனோடு சேருகிறவரைக்கும், நமது தினமானச் செலவில் நாள்தோறும் கொஞ்சம் குறைத்துக்கொண்டேவந்து, செலவழிந்த தொகை முழுதும் சேர்ந்தபின்பு வழக்கப்பிரகாரம் செலவு செய்யலாம். நாம் இவ்வளவு சிக்கனமாக இருந்தால், உலகத்தில் பணம் ஸம்பாதித்து அதை ஸத்காரியங்களில் உபயோகப்படுத்தாமல் துர்விஷயங்களில் உபயோகப் படுத்துகிறவர்களால் சிக்கனக்காரர்களென்று சொல்லப்படுவோம். அவர்கள் அப்படிச் சொல்வதினால் நமக்கு ஒரு கெடுதியும் இல்லை. அதற்கு நாம் வெட்கப்படுதலும் கூடாது.

வரவுக் கேற்ற செலவு.—நாம் துர்விஷயங்களில் ப்ரவேசித்துப் பணத்தை வீண்செலவு செய்யாமல் ஜாக்கிரதையாய் நல்ல விஷயங்களில் செலவு செய்துகொண்டு வரவேண்டும். வரவு முழுவதையும் செலவிடும்படியாக சாஸ்த்ரம் இல்லை. வரவு இரண்டு பங்கும் செலவு ஒருபங்குமாக இருக்கவேண்டும். இப்படிச் செய்யாமல், சிலர் தமது வரவிற்கும் அதிகமாகக் கடன் வாங்கிச் செலவு செய்து, பின்பு பல விதத்திலும் அபகீர்த்தியும் கடன்காரர் என்கிற பெயரும் மனக்கவலையும் அடைகிறார்கள். ஆகையால், நாம் எப்போதும் வரவு இவ்வளவு என்று அறிந்து அதற்குத் தக்கதாகச் செலவழிக்கவேண்டும்

# கல்யாணம் செய்துகொள்ளுதல்.

கல்யாணத்துக்கு உரிய வயது - புருஷன், இருபத்தைந்து வயதில், தன் வயதிற்கு நாலு ஐந்து வயது குறைந்த வயதை உடையவளாய் அதிக ரூபமாகவும் அஸங்கியமாகவுமில்லாமல் நல்ல குடும்பத்தில் பிறந்த விவேகசாலியாக இருக்கிற ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். ஒருவன் இருபத்தைந்து வயதுக்கு முன்னே கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது. ஏனெனின், அந்தப் பருவத்துக்குமுன் எல்லாவற்றிற்கும் முக்கிய காரணமாகிய கல்விப்பொருளை ஸம்பாதிக்கவேண்டுமாகையால், அப்போது கல்யாணம் செய்துகொண்டால், படிப்பின்மேல் மனம் செல்வதற்கு அநேகம் இடையூறுகள் உண்டாகின்றன. அதன்றியும், பால்யகாலத்தில் ஒருவேளை பிள்ளைகள் உண்டானால், அந்தப் பிள்ளைகளால் உண்டாகும் இன்பத்தை அடையத்தகுந்த பருவம் அதல்லாதபடியால், பிள்ளைப் பேற்றினால் அடையும் இன்பத்தையும் இழந்துபோவான். அதிபால்யத்தில் கல்யாணம் செய்துகொள்வதினால இன்னும் அநேக வருத்தங்கள் உண்டாகின்றன. என்னவென்றால், பதினாறு அல்லது பதினெட்டாவது வயதில் புருஷர்களுக்குப் போதுமான பலம் இராதாகையால், அந்த வயதில் உண்டாகின்ற பிள்ளைகளும் அதிக பலசாலிகளாக இருக்கமாட்டார்கள் அதிபால்யர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகள் பலசாலிகளாக இராமல் அதிக சீக்ரத்தில்தானே மரணத்தை அடைந்துகொண்டு வருகிறார்கள். இந்தத் தேசத்தில் அதிபால்யத்தில்தானே கல்யாணம் செய்கிற சில ஜாதியர்களுடைய புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பிறக்கிற பிள்ளைகளுக்கும், நல்ல பருவத்தை அடைந்த

பின்பு கல்யாணம் செய்கிற இங்க்லிஷ்காரருக்கும் இன்னும் மற்ற ஜாதியர்களுக்கும் பிறக்கிற பிள்ளைகளுக்கும் இருக்கிற பலமே, மேற் சொல்லியதற்குப் போதுமான த்ருஷ்டாந்தமாக இருக்கின்றது.

வயோதிக விவாஹம்.— இருபத்தைந்தாவது வயதில் ஒருவன் கல்யாணம் செய்துகொள்ள, அவனுடைய இருபத்தாறாவது அல்லது இருபத்தேழாவது வயதில் அவனுக்குப் பிள்ளை உண்டானால், அந்தப் பிள்ளைக்கு இருபத்தஞ்சு வயதாகும்போது, தகப்பனுக்கு ஐம்பது ஐம்பத்திரண்டு வயது ஆகும் அப்போது தகப்பன் முதுமையை அடைகிறான் பிள்ளை அவனைக் காப்பாற்றும் நிலையை அடைகிறான். ஆகையால்தான் பெரியோர்கள் "அறுநான்கிற் பெற்றபிள்ளை முன்னாளில் தேடிவைத்த பொருள்" என்று சொல்லியிருக்கிறார்கள் சிலர், இருபத்தைந்து இருபத்தாறாவது வயதில் கல்யாணம் செய்துகொள்ளாமல், ஐம்பதாவது வயதில் கல்யாணம் செய்துகொள்ளுகிறார்கள். அது எவ்விதத்தாலும் ஸரியானதன்று. ஏனென்றால், மனிதர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற ஆயுள் ப்ரமாணத்தில் ஐம்பதாவது வயது ஸரி பாதியானதால், அப்போது மனிதர்களுக்கு இருக்கும் பலத்தில் பாதிக்கு அதிகமாகவே குறைந்துபோகின்றது. ஆகையால், கல்யாணம் அந்த வயதில செய்துகொண்டால், பிள்ளை உண்டாகாது. உண்டானால், அதிக பால்யர்களுக்குப் பிறக்கிற பிள்ளைகள் எப்படி பலவீனமாக இருக்கின்றனவோ அப்படிப்போலவே இருக்கும். அதன்றியும், பிள்ளைகளை வளர்த்துப் படிப்பு முதலாகியதுகளையும் கற்பித்துக் கொடுத்து அவர்களைச் சீர்ப்படுத்துவதற்கு முன்னமே தந்தைகள் இறந்துபோய்விடுவார்கள்

கல்யாணம் செய்துகொள்ளும் பெண்ணின் வம்சம்— பெண்கள் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். ஏனென்றால், அவர்களுடைய வம்சஸ்தர்கள் நல்ல கீர்த்தியை உடையவர்களாக இருந்தால், அவர்களைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறவர்களுக்குப் பெருமை உண்டாகின்றது. அபகீர்த்தியை உடையவர்களாக இருந்தால், இன்ன புருஷன் இன்னானுடைய பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டான் என்கிற பழிப்பு உண்டாகின்றது. ஆகையால், அந்தப் பழிப்புக்கஞ்சி நாம் எந்தக் குடும்பத்தாருடைய பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புவோமோ, அந்தக் குடும்பத்தாருடைய கார்யங்களையெல்லாம் நன்றாக அறிந்து, அவர்கள் குற்றமற்றவர்களாக இருந்தால், அவர்கள் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். நாம் கல்யாணம் செய்துகொள்ளப்போகிற பெண்களுடைய குடும்பத்தில் யாருக்காவது குஷ்டமுதலான வம்ச பாரம்பர்யமாக இருக்கிற வ்யாதிகள் உண்டா என்றும் விசாரிக்

கவேண்டும். ஏனென்றால், அப்படிப்பட்ட வ்யாதிகளிருந்தால் அவைகள் அந்தப் பெண்கள் வழியாக அவர்களைக் கல்யாணம் செய்துகொள்ளும் புருஷர்களுக்காவது அல்லது அவர்களுடைய பிள்ளைகளுக்காவது உண்டாகுமென்று சொல்லுகிறார்கள். ஆகையால், அதை முக்யமாக அறியவேண்டும்

படித்த பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளுதல்.— ஒருவன் எந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறானே, அந்தப் பெண் நல்ல விவேகசாலியாகவும் படித்தவளாகவும் இருந்தால், அவனுக்கு அதைவிடச் செல்வம் வேறே வேண்டியதில்லை. பெண்கள் தங்களுடைய விவேகத்தினால் புருஷர்களுக்கு ஸகல மர்யாதையும் உபசாரமும் செய்கிறதுமன்றி, தமது நன்னடக்கையினாலே கணவர்களுக்கு அழிவில்லாத கீர்த்தியையும் உண்டுபண்ணுகிறார்கள். பெண்கள் அவசியம் படித்தவர்களாகவே இருக்கவேண்டும் ஏனென்றால், அவர்கள் படித்திருந்தால் தமது குடும்ப கார்யங்களையெல்லாம் தங்களுடைய புருஷர்களுக்கு வருத்தங்கொடுக்காமல் தாங்களே பார்த்துக்கொண்டுபோகும் திறமை உடையவர்களாக இருப்பார்கள் அன்றியும், தமது புத்திரர்களைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பும் பருவத்திற்கு முன்னே வீட்டில்தானே பால்யகாலத்தில் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டிய நல்ல புத்திகளையெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாகவே போதித்து விடுவார்கள் அதனால், அந்தப் பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளைவிட விவேகசாலிகளாகவும் யோக்யர்களாகவும் இருப்பார்கள். மேலும் பெண்கள் படித்திருந்தால், அவர்கள் கணவர்கள் எவ்விடத்திற்குப் போயிருந்தாலும், வீட்டில் இருப்பதுபோலவே எல்லாக் கார்யங்களையும் தமது மனைவியர்க்குக் கடிதமூலமாகத் தெரிவிப்பார்கள் அதற்குப் பதிலாக அவர்களும் எழுதி அனுப்பும் சக்தியை உடையவர்களாக இருப்பார்கள். அப்படிக்கில்லாவிட்டால், அந்தப் புருஷர்கள் தம்முடைய மனைவிகள்மாத்ரம் அறியவேண்டிய ரஹஸ்யங்களையெல்லாம் எழுதாமல், எல்லாரும் பார்த்து அறியத்தகுந்த கார்யங்களைமாத்ரம் எழுதி அனுப்புவார்கள் மனைவியரும் அப்படியே தம்முடைய க்ஷேமத்தை மாத்ரம் தெரிவிப்பார்கள். இப்படி க்ஷேமம் மாத்ரம் தெரிந்து மற்றொரு ரஹஸ்யமும் தெரியாமலிருப்பதால், அதைப் பற்றி ஒருவரையொருவர் காணவேண்டுமென்று ஆவல்கொண்டிருப்பார்கள். ஒருவேளை ஒருவரையொருவர் பாராமுன்னமே இறந்துபோய்விட்டால், அப்போது அநேக கெடுதிகள் உண்டாகும் இங்க்லிஷ்காரர்களில் ஸ்திரீகள் படித்திருப்பதால், புருஷர்கள் அவர்களைவிட்டு எத்தனைநாள் பிரிந்திருந்தபோதிலும், அவர்களுடைய ஸகல ஸமாசாரங்களையும் கடிதமூலமாக அடிக்கடி அறிந்துகொண்டிருக்கிறபடியால், அவர்களைப் பிரிந்திருப்பதினால் அதிக வ்யஸனத்தை அடையாமல் இருக்கிறார்கள்.

**கல்யாணம் செய்துகொள்வதற்கு முன் குணகுணங்களை விசாரித்தறிதல்.**—இங்க்லிஷ்காரர்களில் புருஷர்கள் ஸ்திரீகளைப் பார்த்து, அவர்களுடன் பேசி, அவர்களது திறமையையும் விவேகத்தையும் அறிந்து, பின்பு கல்யாணம் செய்கிற வழக்கத்தைப்போல, இந்தத் தேசத்தார்கள் செய்யாமல், தாய் தந்தைகள் அல்லது பந்துக்கள் பெண்களைப் பார்த்துக் கல்யாணம் செய்விக்கிறபடியால், புத்திசாலியாகவும் கல்விமானாகவும் யோக்யனாகவும் இருக்கிற புருஷனுக்கு, புத்தியும் படிப்பும் இல்லாத மிகவும் துஷ்டையானவள் வந்து ஸம்பவிக்கிறாள். அல்லது, விவேகசாலியாக இருக்கிற பெண்ணுக்கு, அவிவேகியாகவும் தீயொழுக்க முடையவனாகவும் இருக்கிறவன் வந்து ஸம்பவிக்கிறான். இப்படி ஒன்றுக்கொன்று மாறுபாடான குணங்களையுடைய புருஷர்களும் ஸ்திரீகளும் கல்யாணம் செய்துகொள்வதினால் என்ன ஸௌக்யம் உண்டாகும். அதைப் புத்திமான்களே யோசிக்கவேண்டும். ஆனால், மேலே சொல்லிய மூடத்தனம் இந்தத் தேசத்தார்களுக்கு நல்ல விவேகம் வருகிறவரைக்கும் இவர்களை விட்டு நீங்காது. ஆகையால், விவேகசாலிகளாக இருக்கிற புருஷர்கள், தங்களுக்குத் தமது தாய் தந்தைகள் கொள்ளவேண்டுமென்று யோசித்திருக்கிற பெண்களுடைய குணங்களை எவ்விதத்திலாவது விசாரித்துப் பின்பு கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். ஏனென்றால், தாய்தந்தைகளாவது, அல்லது பந்துக்களாவது, பணம் பந்துத்துவம் முதலிய காரணத்தினால், கூன் குருடு முதலிய விகார ரூபங்களையுடைய ஸ்திரீகளை நன்றாக இருக்கிற புருஷனுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயிப்பார்கள். இப்படி அநேகம் பேர்கள், தங்களுடைய ஸௌக்யம் பெருமை முதலியவைகளைப் பார்த்தும், பின்பு புருஷன் படப்போகிற வருத்தத்தைப் பாராமலும், விகார ரூபமுள்ள பெண்களைக் கொள்ளத் துணிகிறார்கள் ஆலோசித்துப் பார்க்குமிடத்து, எப்படிப்பட்டவர்களும் முதலில் தங்கள் ஸௌக்யத்தை விரும்புகிறவர்களாய் இருப்பார்களே யல்லாமல், பிறனுடைய ஸௌக்யத்தைப் பாராட்டுகிறவர்கள் உலகத்தில் யாரும் இல்லை. ஆகையால், கல்யாணம் செய்துகொள்ளும் விஷயத்தில் பெண்களைப் பார்க்கப் புருஷர்களும், புருஷர்களைப் பார்க்கப் பெண்களுந்தான் தகுந்தவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தேசத்தார்களும் இப்படிச் செய்துகொண்டு வந்தால், ஸ்திரீகளும் புருஷர்களும் ஆகிய எல்லாரும் அதிக ஸுகத்தோடு கூடி வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

**ஒத்த குடும்பத்தில் பெண் கொள்ளுதல்.** — புருஷர்கள் அதிக ஐசுவர்யத்தை உடையவர்களுடைய பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ளலாகாது. மிதமான தனிகர்களாகவும் சின்ன குடும்பஸ்தர்களாகவும் இருக்கிறவர்களுடைய பெண்களைக் கல்யாணம்

செய்துகொள்ளவேண்டும் ஏனென்றால், மாமன் அதிக பொருளு டையவனாகவும் மருமகன் எளியவனாகவும் இருந்தால், அந்த மருமகனை மாமன் தன்னுடைய வேலைக்காரர்களில் ஒருவனைப்போல எண்ணு வான். அவனுடைய பெண்ணும் செல்வச் செருக்கினால் தனது புருஷனுக்கு உபசாரம் முதலானவைகளைச் செய்ய விரும்பாள். அன் றியும் எப்போதும் தாய்வீட்டிலேயே இருப்பாள். புருஷனுக்கு, இவன் இன்னாருடைய மருமகன் என்று சொல்லும் பெயரேயன்றி, வேறே யாதொரு மர்யாதையும் கிடைக்கமாட்டாது. ஸாதாரணமான வர்களுடைய வீட்டுப் பெண்ணாக இருந்தால், அப்போது அவர்களால் மருமகனுக்கு எல்லா உபசாரங்களும் நடக்கும். பெண்ணும் புருஷ னுடைய சொற்படி நடப்பாள்: தாய்வீட்டிலேயே குடிகொண்டிராமல் புருஷனுடனே எப்போதும் கூடியிருப்பாள். மாமன் வீட்டார் எளிய வர்களாகவும் அதிக குடும்பஸ்தர்களாகவும் இருந்தால், அவர்களுடைய பெண்ணைக் கொண்ட புருஷன் எப்போதும் அவர்களுக்கே தன் ஆஸ் தியைச் செலவழிக்கும்படியாக நேரிடும். புருஷனுக்கு அவர்களால் ஒரு நன்மையும் கிடைக்கமாட்டாது.

**போதுமான ஸம்பாத்யம் இல்லாமல் கல்யாணம் செய்து கொள்வதன் தீமைகள்.**—நல்ல ஸம்பாத்யம் நமக் கில்லாவிட்டால், நாம் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது. கைக்குப் போதுமான த்ரவ்யம் இல்லா முன்னமே, நாம் கல்யாணம் செய்துகொண்டால், நமக்கு ஸந்தோஷம் இல்லாமல் எப்போதும் வ்யஸனமே உண்டாகும்; நம்முடைய பெண்டாட்டிக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களுக்கு நம்மிடத்தில் பணமில்லாவிட்டால், கடன் வாங்கியாகிலும் போதுமான செலவு செய்யும்படியாக நேரிடும். அப்புறம் அந்தக் கடனைத் தீர்க்க நாம் சக்தியில்லாதவர்களாகிக் கடன் கொடுத்தவர்களால் எப்போதும் பீடிக்கப்பட்டுக்கொண்டிருப்போம் ஒருவேளை கடவுள் கிருபையால் பிள்ளைகள் உண்டானால் அவர்களுக்குப் போதுமான உபசாரம் செய்ய நமக்குச் சக்தியில்லாதபடியால், அந்தப் பிள்ளைகள் அன்னவஸ்திரங்க ளுக்காகத் தமது தாய்முகத்தைப் பார்க்கும்போது, அவள் நம்முடைய முகத்தை நோக்குவாள். நாம் அப்போது அதிக வ்யஸனத்தை அடை வோம். ஆகையால், கையில் பொருள் கிடைப்பதற்கு முன்னமே கல்யாணம் செய்துகொண்டு இப்படிப்பட்ட துன்பத்தை அடைகிற தைப் பார்க்கிலும் ஒன்றியாக இருப்பதே மிகவும் நலமாக இருக்கின் றது. சீமான்களுடைய பெண்கள் அதிக த்ரவ்யத்தோடு நமக்குக் கிடைப்பதாக இருந்தாலும், நாம் நமது சொந்த முயற்சியினால் ஸம் பாதிக்கும் பொருள் ஒரு ஸம்ஸாரத்தை வைத்துக் காப்பாற்றுகிறதற் குப் போதுமானதாக இல்லாவிட்டால், கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது. ஏனென்றால், அந்தப் பணத்தினால் ஜீவிப்பவன் அதம

னென்று சொல்லப்படுகிறான். அதல்லாமலும், வீட்டில் சேர்ந்த அதிகாரமும் அவர்களுக்கே இருக்கும்; நாம் அந்தப் பணத்தைச் செலவிடும்போது நமது மனத்திற்கு அருவருப்பும் பலவகை வருத்தங்களும் உண்டாகும்.

**மனைவியிடம் விசுவாஸம்.**—உலகத்தில் பெண்கள் புருஷர்களை விவாஹம் செய்துகொள்ளுகிறது, அவர்களுடன் கூடி ஸௌக்யத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கிறதற்கே யன்றி, வேறொன்றுக்கும் அல்ல. அதை அறியாமல் புத்திஹீனர்கள் சிலர் எப்போதும் தமது மனைவிகளை அடித்தல் திட்டுதல் முதலானவைகளால் வருத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்கிறதை அப்பெண்கள் தம்மால் கூடியமட்டும் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த துர்நடையை விடாமலிருந்தால், அந்தப் பெண்கள் ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் கிணறு குளங்களில் வீழ்ந்து தங்களுடைய ப்ராணனைப் போக்கிக்கொள்ளுகிறார்கள். ஒருவன் இல்லாள் கிணற்றில் வீழ்ந்து இறந்தாளென்பது அவனுக்குத் தலையிறக்கத்தைக் கொடுக்கின்றது. ஆகையால், அதை அடையாமலிருக்கும்படி, தாம் கொண்ட பெண்களை உபசாரத்தோடும் மர்யாதையோடும் விசுவாஸத்தோடும் நடத்திக்கொண்டு, அவர்களுடன் கூடி இன்பத்தை அனுபவித்துக்கொண்டு ஸுகமுற்றிருக்கவேண்டும்.

## அநுபந்தம் I.


| | பக்கம். |
|---|---|
| கைத்தொழில்கள் .... .... .... .... .... | 30 |
| மனிதர்களுக்குள்ள பரஸ்பர ஸம்பந்தம் .... .... | 32 |
| காலதாமதம் .... .... .... .... .... | 33 |
| ஸம்பாஷணை .... .... .... .... .... | 36 |
| உழைப்பின் சிறப்பு .... .... .... .... | 38 |


## அநுபந்தம் II.


| | |
|---|---|
| வழக்குத் தொடர்மொழிகள் .... .... .... .... | 40 |


## அநுபந்தம் III.


| | |
|---|---|
| பழமொழிகள் .... .... .... .... .... | 49 |

# அநுபந்தம் I.

## கைத்தொழில்கள்.

கைத்தொழில்கள் என்பதற்கு மனிதன் கையினால் செய்யப் படும் வேலைகள் என்று அர்த்தம். சொல்லின்படி அர்த்தம் இதுவே யாயினும், கையினாலாகும் எல்லா வேலைகளையும் கைத்தொழில்கள் என்று வழங்குவதில்லை. வழக்காற்றில் இந்த வார்த்தை சில வேலை களை மாத்ரமே குறிக்கும். மனிதர்கள் செய்யும் வேலைகள் எல்லாவற் றிற்கும் கை அவசியமானதே. ஆயினும் தண்ணீர் இறைப்பது சோறு சமைப்பது முதலிய ஸாதாரண வேலைகள் கைத்தொழில்கள் அல்ல.

நிலத்தை உழுது பண்படுத்தி விதை விதைத்துத் தகுந்த காலத் தில் களை பிடுங்கிப் பயிரிடுகிறோம். இந்தத் தொழிலில் மனி தன் ப்ரயாஸப்படுவது உண்மையே. ஆகிலும், விதை முளைப்பதும் கதிர் விடுவதும் தான்யம் பழுப்பதும் தெய்வச்செயலே அன்றி மனி தன் செயல் அல்ல. ஆகவே, நெல் முதலியவைகளை விளைபொருள் கள் என்கிறோம். உழுதல் முதலிய வேலையெல்லாம் கைப்பாடு கைவேலை என்று சொல்லப்படும்.

எண்ணெய் ஆடுவது கருப்பஞ்சாறு இறக்குவது முதலிய வேலை கள் சிறப்பில்லாத ஸாதாரணமான வேலைகளே ஆதலால், அவைகளுக்குக் கைத்தொழில் என்னும் பேர் தகாது. கையால் எழுதுகிற சித்ரவேலை யைக் கைத்தொழில் என்னலாகாது: கைத்தொழில்களினும் சித்ர வேலை மேன்மையானது. அதைக் கைத்தொழில் என்பது அதன் கௌர வத்துக்குக் குறைவு. சித்திரத்தைக் கையினால் எழுதினபோதிலும், இந்த வேலையில் எப்பொழுதும் மனனூகமும் கைஸாமர்த்யமும் அவசிய மானவை. மனனூகமும் கைஸாமர்த்யமும் எப்பொழுதும் அவசியமான வேலைக்குச் சற்றுக் குறைந்தும் ஸாதாரணமான கைவேலைகளுக்குச்சற்று உயர்ந்தும் இருக்கிற வேலைகளே கைத்தொழில்கள். கெடியார வேலை யைக் கைத்தொழில் என்று சொல்லலாம். ஏதோ ஒரு உலோகத்தைநாளு வித சக்ரங்களாகவும்சுழல்களாகவும் செய்து கெடியாரம் என்கிற விசித்ர யந்திரத்தை அமைக்கிறார்கள். சித்திரவேலைபோல் இதிலும் மனவூகை யும் கைஸாமர்த்தியமும் அவசியம் இல்லையா? அப்படியிருக்க, இதைச் சித்ரவேலையிலும் தாழ்ந்ததரன கைத்தொழில் என்று சொல்வது ஏன்? முதல்முதல் கெடியாரம் பண்ணுகிற விதத்தை கண்டுபிடித்தபோது

மனவூக்கையும் கைஸாமர்த்யமும் அவசியமே. அப்பால் எவனுகிலும் அந்த வழியைக் கற்றுக்கொண்டு கெடியாரம் செய்யலாம். சிதரவேலை அப்படிச் செய்யக் கூடியதல்ல. இப்படியே யந்த்ரங்களால் இயற்றப் பட்ட இரும்புவேலை தச்சுவேலை கண்ணுடிவேலை குடம் முதலான மண்வேலை பஞ்சுவேலை தோல்வேலை கடிதவேலை அச்சுவேலை முத லியவைகள் கைததொழில்களாம்.

பிராணனைப் போகவொட்டாமல் காப்பாற்றுவதற்குச் செய்ய வேண்டியது வ்யவஸாயம். ஸௌகர்யங்களை அநுபவித்து ஸௌக்ய மாய் ஸந்தோஷத்துடன் வாழ்வதற்குச் செய்ய வேண்டியது கைத் தொழில் வெறுங்கையால் செய்கிற வேலை கைவேலை. யந்திரங்களை ஏற்படுத்திக்கொண்டு அவைகளின் உதவியால் செய்கிற வேலைகள் கைத்தொழில்கள்.

நாகரீகம் உள்ள தேசங்களில்தான் கைத்தொழில்கள் நடந்து வரும். கைத்தொழில்களுக்கு ஐசுவர்யமும் உழைப்பும் ஆகிய இரண்டும் இன்றியமையாதவை. ஐசுவர்யம் மாததிரம் உள்ள தேசங்களில் கைத் தொழில்கள் அதிகமாய்க் காணப்படமாட்டா. ஏனெனில், உழைப் பில்லாமலே தனவான்களாய் இருந்தால், பிறகு உழைக்க மனம் வராது. மிகவும் தரித்ரமான தேசங்களிலும் கைத்தொழில்கள் இருக்கமாட்டா: ஏனெனில், கொஞ்சமாகிலும் த்ரவியம் இல்லாவிட்டால், முதல்முதல் கைத்தொழில்கள் ஊன்றுகிற விதம் எப்படி? கைத்தொழில்களை நடத் தும் வழியைக் கண்டுபிடிப்பதற்கு சாஸ்திரப்பயிற்சியும் நுட்பவறிவும், அவைகளை இயற்றுவதற்கு யுக்தி உபாயமும், அவைகளைச் செழிப்பிப் பதற்கு ஒழுக்கமும் ஒற்றுமையும் வேண்டும். அவைகளைப் பாதுகாப்ப தற்குத் தகுந்த அரசாட்சி இருக்கவேண்டும். நாகரீகம் அற்ற தேசங்க ளில் இவைகளெல்லாம் எங்ஙனம் நேரும்? கைத்தொழில்கள் முதலில் ஏற்படும்போது, யந்த்ரங்கள் அமைக்க த்ரவ்யம் வேண்டும் ஸாமான் கள் இன்றி வேலை நடக்கமாட்டாதாகையால், பற்பல தேசங்களி லிருந்து ஸாமான்களை வரவழைப்பதற்கும் முன்பின் ஸரிப்படுத்துவ தற்கும் பணம் வேண்டும். இப்படிச் செய்வதற்காக இதர தேசங்க ளோடு வர்த்தகம் பண்ணிக்கொண்டு ஸ்நேஹம் பாராட்டி வரவேண் டும். வர்த்தகம் விசேஷமாய் நடவாத தேசத்தில் கைத்தொழில்களும் நடவா. ஒரு தேசத்தில் கைத்தொழில்கள் ஊன்றி திடப்பட்டு வ்ருத் தியாகிச் சிறப்படைய நெடுநாள் பிடிக்கும்.

யந்த்ரங்கள் அமைப்பதற்கு சாஸ்த்ரஞானம் அருமையான சாத கம். மனிதன் நெடுநாளில் செய்து முடிக்கும் வேலையை யந்த்ரம் அதிசீக்ரத்தில் செய்து முடிக்கும். மனிதனுடைய ஆற்றலுக்கு எட் டாத கார்யங்களும் யந்த்ரத்தால் நிறைவேறும். மணலும் சாம்பலும்

கண்ணாடியாகிறதென்றும் கந்தை காகிதமாகிறதென்றும் சொன்னால், யாருக்குத்தான் முதலில் அதிசய மிராது. காகிதத்தை வைத்தால் கண்மூடித் திறப்பதற்குள் அதை இழுத்துக்கொண்டுபோய், மை தடவி அச்சிட்டு, மறுபடியும் ஓரிடத்தில்கொண்டு சேர்த்துவிட்டு, உடனே மற்றொரு காகிதத்தை அவ்விதமாகவே செய்ய இழுத்துக் கொண்டுபோகிறதே, அப்படிப்பட்ட அச்சயந்த்ரத்தைக் கண்டு யார் தான் வியப்படையாமல் இருப்பர். சணலை ஸரிகையாக்கினால் ஒன்றுக்கு ஐயாயிரமடங்கு விலை உயர்ந்துபோகிறது. இரும்பை ஊசிகளாகவும் சங்கிலிகளாகவும் பண்ணினால் விலை எத்தனையோ மடங்கு அதிகரிக்கிறது. இவையெல்லாம் கைத்தொழில்களின் சிறப்பலவா?

## மனிதர்களுக்குள்ள பரஸ்பர ஸம்பந்தம்.

மலையடிவாரங்களிலும் வனங்களிலும் வீடுவாசல் முதலியது ஒன்றும் இல்லாமல், கனி கிழங்குகளையும் வேட்டையாடிய ஜந்துக்களின் மாம்ஸ தைடம் புசித்துக்கொண்டு, கேவலம் மிருகஜாதிகளைப்போல் திரிந்துகொண்டிருக்கும் காட்டுமனிதர்கள், உண்பதும் உறங்குவதுமன்றி வேறு அபேட்சையில்லாமல் காலந்தள்ளிவிடுகிறார்கள். இத்தன்மையான மனிதர் ஏகதேசமாய் எங்கேயோ சிலரே இருக்கிறார்கள். இவ்வுலகில் ஏறக்குறைய எல்லா தேசங்களிலும், சிலவற்றில் அதிகமாகவும் சிலவற்றில் கொஞ்சமாகவும், நாகரீகம் பரவியிருக்கிறது. இப்படிப்பட்ட தேசங்களில் அவரவர் வீட்டில் ஜனங்கள் வைத்திருக்கும் பொருள்களையும் ஸாமான்களையும் பார்த்தால், அவைகளைச் செய்து கொடுக்க இத்தனை வேலைக்காரர்கள் வேண்டும் என்று கணக்கிட்டுச் சொல்வது முடியாது.

அதிக ஐசுவர்யம்பெற்று ஸகலவிதமான போகங்களையம் அநுபவிக்கிற தனவான் வீட்டில் உள்ள பொருள்களைப் பார்க்கவேண்டும் என்பதில்லை. ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என்று அன்றாடம் வேலை செய்து ஜீவனம்பண்ணுகிற அற்பக் குடியானவன் ஒருவனுடைய வீட்டைப் பார்த்தால் போதும். மற்றொன்றும் வேண்டாம்: அவன் மேலே போட்டுக்கொண்டிருக்கிற ஒரு துணியைப் பார்ப்போம். அது எத்தனை வேலைக்காரர் சேர்ந்து துணியாயிற்று. பருத்திச்செடி வைத்து வளர்ப்பவன்—பஞ்சு எடுப்பவன்—நூல் நூற்கிறவன்—நெய்கிறவன் முதலான வேலைக்காரர்கள் வேண்டியிருப்பதும் தவிர, இவர்களுள் ஒருவனிடத்தில் ஸாமானை மற்றொருவனிடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க எத்தனை மூட்டைக்காரர்களும் வர்த்தகர்களும் வேண்டும்? அன்றியும் அநேக ஸாமான்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு வெகுதூரம் போகவேண்டுமாகையால், எத்தனை கப்பல்வேலைக்

காரர்களும் புகைவண்டி வேலைக்காரர்களும் வேண்டும்? இதுமாத்ரமோ! இந்த வேலைக்காரர்களுடைய ஆயுதங்கள் ஒவ்வொன்றையும் செய்து கொடுக்க இதரமான வேலைக்காரர்கள் கணக்கில்லாமல் வேண்டும்.

விசித்ரமான யந்த்ரங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைக ளெல்லாம் இருக்கட்டும். மிகவும் அற்பமான சிறு கத்தியைச் செய்ய எத்தனை பேர் தேவை? இரும்பு வெட்டியெடுக்கிறவன்முதல் கன்னான் வரையில் உள்ள பல வேலைக்காரர்களுடைய கூட்டுத்தொழிலால் கத்தி என்பது செய்யப்படுகின்றது. ஒரு கத்திக்கு இத்தனை பேர் வேண்டு மானால், பெரிய ஆயுதங்களுக்கு எத்தனை பேர் வேண்டும்.

இப்படி ஒவ்வொன்றையும் பார்க்கப்போனாலோ, ஸமுத்ரத்தில் இறங்குகிறதுபோல் இருக்கும். நுட்பமாய் விசாரிக்கிறதென்றால் சொல்லவேண்டியதில்லை. இப்படி ஒரு அற்பத்துணியைப் பிடித் துப் பார்க்குங்கால் இவ்வளவுதூரம் இழுத்துக்கொண்டுபோனால், மற்றப் பொருள்களையும் தனித்தனியே இவ்விதமாக ஆராய்ந்து பார்ப்பது எப்படிப்பட்ட காரியம்?

இந்த விஷயத்தை உள்ளாழ்ந்து பார்ப்போமானால், ஒருவன் தனக்கு வேண்டிய ஸாமான்கள் எல்லாவற்றையும் தானே செய்து கொள்வது கூடாத காரியம் என்பது தெளிவாக விளங்கும். அநேக ஆயிரம்பேர்கள் சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாக நின்று வேலை செய்யாவிடின், ஒன்றுமில்லாத ஏழைக்குக்கூட அவனுக்கு வேண்டிய அற்பமான பொருள்களும் கிடைக்கமாட்டா மனிதர் ஒவ்வொருவரும் தம்மால் கூடிய வேலையைச் செய்து, மற்றவர்கள் செய்யும் வேலைகளின் ப்ரயோசனத்தைப் பெற்று, பரஸ்பரம் ஒற்று மையாக வாழ்கின்றனர்.

## காலதாமதம்.

இன்றைக்குச் செய்வதிலும் நாளைக்கு இன்னும் செவ்வையாய்ச் செய்து முடிக்கக்கூடிய காரியத்தை, அதுவரையில் காத்திருக்கப் பொறுமல், இன்றைக்கே செய்வது மதியீனம். இன்றைக்கே செவ் வையாய்ச் செய்து முடிக்கக்கூடிய காரியத்தை, அப்படிச் செய்யாமல், நாளைக்கு ஆகட்டும் என்று நினைத்து நிறுத்திவைப்பதும் மதியீனமே. ஒன்றுக்கொன்று விரோதமான இவ்விரண்டும் குற்றமென்றே அங்கீ கரிக்கத்தக்கவை. இவ்விரண்டிலும் எது அதமமானது என்பதை நாமே அநுபவசித்தமாய் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

அந்த க்ஷணமே கட்டாயமாய்ச் செய்யவேண்டிய வேலையை அப்படிச் செய்து முடிக்காமல் பின்னிட்டுச் செய்துகொள்ளலாம்

என்று வீணே ஆலசியம் செய்வது காலதாமதம் எனப்படும். அது ஸாதாரண தோஷங்களில் ஒன்று. அதற்கு இடங்கொடுத்தால், நாம் எந்த வேலையையும் க்ரமப்படி செய்து முடிப்பது கூடாமையாகும். நாளைக்கு நாளைக்கு என்று சொல்லி ஆலசியம் செய்துவந்தால், எடுத்த கருமம் என்றைக்கும் முற்றுப்பெறுமலே போய்விடும். ஆகையால் காலதாமதம் என்னும் குற்றத்துக்கு ஒருபொழுதும் இடங்கொடுக்கல் ஆகாது. இன்று செய்யத்தக்கதை நாளைச் செய்துகொள்ளலாம் என்று மெல்ல மெல்ல நழுவவிடுவோமாயின், வரவர இந்த துர்வழக்கம் மேலிட்டு, கருதிய கார்யம் கைகூடாமலே, "நாளைக்கு" "நாளைக்கு" என்ற நாள்கள் எல்லாம் "நேற்று" "நேற்று" என்று சென்ற நாள் களாய், சாகுங்காலமளவும் இப்படியே மோசம்போகவேண்டும்.

அவசியம் செய்து முடிக்கவேண்டிய விஷயங்களை அந்தவேளையில் செய்து முடிக்காமல் காலதாமதம் பண்ணுவதற்குக் காரணம் இன்னதென்று நமக்கு எளிதில் புலப்படுகிறதில்லை. நாம் எடுத்த கருமங்களைச் செய்யத் தொடங்கும்போது, அதற்குத் தடையாக எத்தனையோ இடையூறுகள் குறுக்கிடுவதனால் காலதாமதம் செய்வதற்கு இடமுண்டாகின்றது. காலதாமதத்தைச் சோம்பலென்று சொல்லலாமோ எனின், அப்படிச் சொல்வதற்கும் வழியில்லை. ஏனெனில், காலதாமதம் செய்கிறவர்களில் பெரும்பான்மையோர் விடாமுயற்சி உள்ள நல்ல பாட்டாளிகள். முதலில் செய்யவேண்டிய கார்யத்தை அதனிடத்தில் உள்ள வெறுப்பு முதலிய காரணங்களால் அதை அப்படிச் செய்ய முயலாமல், தமக்கு விருப்பாயுள்ள மற்றொன்றைச் செய்யப் புகுகிறார்கள். உடனே செய்யவேண்டியதைப் பரபரப்போடு செய்யப் புகாமல், பின்னாலே செய்யத்தக்கதை முதலில் செய்யும்படி தொடங்குவதனால் காலதாமதம் செய்யும்படி ஆகிறது. நாளை நன்றாய்ச் செய்து முடிக்கத்தக்க கார்யத்தை ஆத்திரப்பட்டு இன்றே செய்ய வேண்டும் என்று செய்வதனால், அந்தக் கார்யம் நன்றாய் முடியாததும் தவிர, இன்றே அவசியமாய்ச் செய்யவேண்டிய கார்யமும் குந்தகப் பட்டு இவ்வாறு இரண்டும் கெடுவனவாகும்.

இதை மனோதைர்யமில்லாமை என்று சொல்லவும் வழியில்லை. எவப்பட்ட வேலைகளை நாம் ஸரியான காலத்திலேயே செய்யவேண்டியதாக இருக்க, அதனிடத்தில் நமக்கு நெடுநாளாக உள்ள வேண்டா வெறுப்பினால் உடனே செய்யப் புகுவதில்லை. செய்யத்தான்வேண்டும் என்று நிர்ப்பந்தம் பண்ணப்பட்டால், அதை எப்படியாவது சிரமப்பட்டுத் தீராப்பொறியாய் உடனே செய்து முடித்துவிடுகிறோம். இங்ஙனம் முதலில் நாமே செய்யாமல் காலதாமதம்பண்ணி, நிர்ப்பந்தம் ஏற்பட்டபின் அதற்குப் பயந்து செய்வது சோழைத்தனமாகும். காலதாமதம் என்கிற ஸாதாரண தோஷம் உண்டாவது இன்ன காரணத்

தால் என்று தெளிவாய்ப் புலப்படாவிட்டாலும், இது பெரிய குற்றமென்றே யாரும் அநுபவசித்தமாய் அறிந்துகொள்ளலாம்.

**கா**லதாமதம் என்னும் குற்றத்துக்கு நாம் சற்றும் இடங்கொடுக்காமல் பலமாய் எதிர்த்துநின்று அதனோடு போராடவேண்டும் என்பதற்கு முக்யமாய் இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது:—சென்ற நாள்கள் ஒருபொழுதும் நின்றநாள்கள் ஆகமாட்டா என்பது நிச்சயம். ஒரே விஷயத்தை நாம் இருமுறை செய்யும்படி ஒருபொழுதும் நமக்கு வாய்க்காதென்பது திண்ணம். ஏற்ற ஸமயம் எப்போதும் வாய்க்குமா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது போல, செய்யத் தொடங்கின கார்யங்களைச் செய்யத்தக்க காலத்தில் தப்பாது செய்தே தீரவேண்டும். வாய்த்த ஸமயத்திலே செய்யாது விட்டுவிட்டால், மறுபடியும் ஸமயம் நேர்ந்தாலும், அது முன்னத்தனை நன்றாயிராமல் ஏதாவது குற்றங் குறைவு உள்ளதாகத்தான் இருக்கும். ஆகவே கருதிய கார்யம் கைகூடாமலே போவது இயற்கை. மனிதர் வாழ்க்கை நிச்சயமல்ல ஆதலால், எதை எப்பொழுது செய்யவேண்டுமோ அதை அந்த வேளையிலேயே தப்பாது செய்துகொள்வதே அறிவோர் கடன். இரண்டாவது:—காலதாமதத்துக்கு இடங்கொடுத்தால் அது வரவர வ்ருத்தியாகும். வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல, பரம ஸுலபமாய் இந்த துரப்யாஸம் பலமாய் வேரூன்றி நம்மிடத்தில் குடிகொண்டு பலவிதத்திலும் நம்மைச் சதிசெய்யும். நாம் இதன் வலையினின்றும் தப்பி வெளிப்படுவது எளிதன்று. இது தைர்யக்குறைவை உண்டாக்கி, அற்ப கார்யத்தையும் செய்யவொட்டாமல் நம்மை மலைக்கப்பண்ணும்.

**நா**ம் செய்யவேண்டிய கார்யங்களை நாளைக்கு ஆகட்டும் என்று நிறுத்திவைக்காமல், நாள்தோறும் குறித்த வேளைகளில் ஒரு குறையும் இல்லாதபடி ஒழுங்காய்ச் செய்ய வழக்கப்படுத்திக்கொண்டால், எல்லாம் இனிது முடிந்து, காலதாமதம் உண்டாவதற்கு இடமிராது. ஆரம்பத்திலே தானே இந்தக் குற்றத்தை வேரோடு களைந்துவிட்டால், நாம் அதனால் ஸுகப்பட்டு முன்னுக்கு வருவதுமன்றி, நம்மைச் சேர்ந்தவர்களையும் முன்னுக்குக் கொண்டுவரலாம்.

**கா**லதாமதத்தினால் உண்டாகும் கேட்டைப்பற்றி எத்தனையோ உதாரணங்களை எடுத்தெழுதலாம். ரோம சக்ரவர்த்திகளில் ஒருவராகிய ஜூலியஸ் ஸீஸர் என்பவருக்கு விரோதமாய்ப் பலரெழுந்து மந்த்ராலோசனை மண்டபத்தில் அவரைக் கொலைசெய்த அன்று காலையில் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் மந்த்ராலோசனை மண்டபத்துக்கு அன்றைத்தினம் போனால் மரணம் அடையவேண்டுமென்றும், அதற்குத் தப்பிப் பிழைக்கும் உபாயம் இன்னதென்றும், அக்கடிதத்தில் தெளிவாய்க் கண்டிருந்தது. அக்கடிதத்தை அவர் அன்று காலை

யில் கையில் வாங்கியும், உடனே அதைப் பிரித்துப் படித்துப்பாரா மலே அப்புறம் பார்க்கலாமென்று மந்திரியிடம் கொடுத்துவிட்டமை யால் அன்றையதினம் அங்கே போய்க் கொலையுண்டார். காலதாமதத் தால் இவ்வாறு ஒவ்வோர் ஸமயத்தில் உயிர்க்கிறுதியும் உண்டாவத ஞல், எவரும் இதன் கொடுமைக்கு உள்ளாகாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## ஸம்பாஷணை.

ஒருவருடைய குணகுணங்களை உள்ளபடி அறிவதற்கு அவரு டைய வார்த்தைகளே ஒருவகை வாயிலாக இருக்கின்றன. ஏறக் குறைய இவ்வுலகத்தில் இயற்றப்படுகிற எவ்வகை நன்மைக்கும் தீமைக்கும் சொற்களே காரணம். அவரவருடைய குணதோஷங் களைப் பிசகாமல் வெளிப்படுத்தி ஸுகதுக்கங்களை விளைவிப்பன சொற் களே. ஒருவரிடத்தில் அறிவு ஆஸ்தை உண்டு இல்லை என்பதை அவர் சொற்களே காட்டி விடும் இப்படி நமது சிறுமை பெருமை களுக்குக் காரணமான சொற்கள் நம்முடைய வசத்தில் இருக்கின்றன. நம்முடைய வசத்தில் இருப்பவைதானே என்று வாய்க்குவந்தபடி பிதற்றுமல், ஸம்பாஷணையில் சொற்களை வழங்கும்போது அதிக எச் சரிக்கையாக இருக்கவேண்டும். நாம் பேசும்போதெல்லாம் நமது சொற்கள் இனிப்பும் ஒழுங்கும் உடையனவாய் இருக்கவேண்டும்: இக்கருத்து உட்கொண்டே "ஞயம்படவுரை" என்றுர் ஒளவையார்.

வீட்டுஸங்கதி, லௌகிக வ்யவஹாரம், க்ரந்தவிசாரம், ராஜாங்க வ்யவஹாரம் முதலானவைகளில் எதாவது ஒரு விஷயத்தைப்பற்றி ஒருவரோடொருவர் பேசுவது ஸம்பாஷணை. இந்த ஸம்பாஷணை, புத்தியுடையவர்களாகட்டும் இல்லாதவர்களாகட்டும், யாவரும் செய் யக்கூடியதே. ஸம்பாஷணை செய்கிற காலங்களில் எவ்வளவு யுக்தி புத்தி சாதுர்யங்களோடும் ஆசையும் ஆவலுமாய்ப் பேசுகிறேமோ, அவ்வளவு பேரும் புகழும் அதிகமாகும். நமது சொற்கள் கேட்போர் காதுக்கு ரஞ்சகமாய் இருப்பதைவிடப் பெருமை வேறென்றும் இல்லை.

ஸம்பாஷணையில் புத்திசாலிகள் தாம் அதிகமாய்ப் பேசாமல் பிறர் சொல்லுவதையே விசேஷமாய் உற்றுக் கேட்பார்கள்: எதிரி வாயை எப்போது அடக்கப்போகிறேம் என்று விரும்பார்கள். தம் வாயை எதிரி அடக்கினுலும் வருத்தம் அடையார்கள். எதிரி சொல் வதை சாந்தமாய்க் கவனித்து, அவன் சொல்லுகிற யுக்தி ஸரியானதாய் இருந்தால், அதன்மேல் சற்றும் வாயைத் திறவார்கள். நாம் சொல் வது ஸரியென்று நாமே ஸாதிக்கக்கூடாது. எதிரிக்கு மனம் பொத்

தும்படி விடைகொடுப்பது உபயோகமற்ற செய்கை. சொல்லவேண்டிய ஸங்கதி ஒன்றும் இல்லாமற்போனாலும், இருந்தும் அது ஒரு புதுமையான ஸங்கதியாய் இராவிட்டாலும், புதுமையாய் இருந்தாலும் அதனால் நமக்காவது கேட்பவனுக்காவது யாதொரு நன்மையும் இராவிட்டாலும், வாயைத் திறந்து மிகைபடப் பேசக்கூடாது.

ஒருவனுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும் என்று கோரிச் செய்கிற ஸம்பாஷணை ஹித ஸம்பாஷணையாம். ஹித ஸம்பாஷணை செய்ய நினைப்பவர்கள் தமது நற்போதனைகளும் ஶிக்ஷைகளும் இலகுவாகவே கேட்போர் கருத்தில் ஏறும்படி வெகு நயமாகவே பேசுவார்கள். அவர்கள் எதையும் தருணம் பார்த்துத் தெரிவிப்பது வழக்கம். கேட்போர்க்குத் தாங்கத் திறமை எவ்வளவோ அவ்வளவாகவே உண்மைகளை எடுத்துரைப்பார்கள். ஹிதத்தை உபதேசிக்க நினைத்தவர்கள் எவரிடத்திலும் கண்யமும் கௌரவமுமாகவே பேசித் தமது கருத்தை நிறைவேற்றிக்கொள்வர். ஹித ஸம்பாஷணை செய்வதற்குத் தக்க முயற்சி இல்லாவிடின் அதன் கருத்து ஈடேறாது. நாம் ஸாதாரணமாய் வீடுகளில் பேசுகிற பேச்சு அதிக சாதுர்யமாயும் இனிப்பாயும் இருப்பதில்லை. புதிதாய் யாராவது ஒருவரைக் கண்டால், வெகு ரஸமாய்ப் பேசுகிறோம். இதற்குக் காரணம் நமது முயற்சியும் முயற்சியின்மையுமே தவிர வேறொன்றும் இல்லை. இவ்வாறு ஸம்பாஷணை செய்து ஸித்திபெற்றவர்களை விசேஷமாய்க் காண்பது அரிது.

சாஸ்த்ர ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றிச் செய்யும் ஸம்பாஷணை வாதம் எனப்படும். ஒருவர் பூர்வபக்ஷம் பண்ணவும், அதன்மேல் ஒருவர் ஸமாதானம் சொல்லவும், வாதம் தர்க்கரீதியாக நடக்கவேண்டும். வாதம் செய்யுங்காலத்தில், வாதம் செய்பவர் அதிக கவனமாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், வாதம் தன் நிலையில் நிற்காமல் சச்சரவாகவும், சச்சரவு பெருங்கோபமாகவும் முடிந்துபோம். வாதம் செவ்வையாய் முடிந்து பயன்படுவது வெகு அருமை. வாதம் செய்வது யாவர்க்கும் அதிக உபயோகமானது. கவனமாய்ப் பாதுகாத்து ஒழுங்காக நடத்தினால், வாதம் செவ்வையாகவே முடியும். ஒரு முறை ஒரு கக்ஷி சலித்துத் தோல்வியடைந்தாலும், பிறகு நல்ல ஆலோசனை உண்டாகி, அதனால் வெகு நன்மை விளையும். ஒவ்வொருவேளையில் இனி நிலைநிற்காது என்று தள்ளிவிடும்படி யத்தனிக்கத்தக்க கக்ஷிகளைத் தாங்கும்படியான ந்யாயங்களும் தோன்றும். ஆகவே வாதம் செய்வதால் விசேஷமாய்ப் பேசுந்திறமையும் புத்திகூர்மையும் உண்டாகும்.

# உழைப்பின் சிறப்பு.

உழைப்பு எவ்வளவு சிறப்புள்ளது! அது என்ன அருமையான காரியங்களைச் செய்கிறது பாருங்கள்! தன் உத்தேசத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு வருத்தம் இருந்தாலும் அது அஞ்சுகிறதில்லை; எவ்வளவு முயற்சி வேண்டுவதாய் இருந்தாலும் தளர்கிறதில்லை; எவ்வளவு இடுக்கண் வந்தாலும் பின்வாங்குகிறதில்லை. மனிதருடைய நல்வாழ்க்கையை வளர்ப்பதில் எப்போதும் ஊக்கமுள்ளதாய், எப்போது விடியப்போகிறது விடியப்போகிறது என்று காத்திருந்து, அருணோதயமாகிய பொற்கதவைக் கைகளால் தள்ளிக்கொண்டுபோய் வேலை செய்ய ஆரம்பித்து, நாள்தோறும் நவநவமான மஹோபகாரங்களைச் செய்துகொண்டே வருகின்றது.

காட்டை அழித்துக் காம்பைத் திருத்திப் பார்க்கப் பயங்கரமான வெட்டவெளியைக் கண்ணுக்கு இனிமையாகப் பச்சைப்பசேரென்று தளிர்க்கச்செய்வது எது? ஏர் உழுது எருவிட்டு நீர்பாய்ச்சிப் பயிர்செய்து பழுத்த தான்யத்தை அறுவடை செய்து, அதை உணவுக்கு உபயோகமாகும்படி பக்வம்பண்ணி, இவ்வுலகிலுள்ள கோடானகோடி ஜனங்களையும் போஷிப்பது எது? செங்கல் சூளைபோட்டும் கருங்கல் வெட்டியெடுத்தும் மாடமாளிகை கூடகோபுரங்களைக் கட்டுவதும், ஆதாள பாதாளத்தைப் பரிசோதித்துப் பொன் வெள்ளி இரும்பு ஈயம் தகரம் முதலிய உலோகங்களை எடுப்பதும் எது?

காட்டில் உள்ளமரத்தை வெட்டிக் கப்பல்செய்து, அலைகளை லட்சியம்பண்ணாமலும் புயலுக்குப் பயப்படாமலும் அகாதமான ஸமுத்ரத்தின் வழியாய் நாலு திக்கிலும் உள்ள தேசங்களெல்லாம் சுற்றி, அங்கங்கே அகப்படும் நல்ல பொருள்களைப் பிறதேசங்களுக்குக் கொண்டுபோய், பிறதேசங்களில் உள்ள சிறந்த பொருள்களை அவைகளுக்கு மாறாகக் கொடுத்து, இப்படியே ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு க்ராமத்திலும் அவரவர்கள் இனிது வாழ்வதற்கு வேண்டிய ஸகல ஸாமான்களையும் நிரப்பி, இவ்வுலகில் உள்ள யாவரும் ஒரேவிதமாய் ஸௌக்யம் பெறுவதற்குக் காரணமாக நிற்கின்ற வர்த்தகத்தை நன்றாய்த் தழைத்துச் செழித்தோங்கும்படி செய்வது எது?

அஸாத்யமாகவும் ப்ரயாஸமாகவும் காணப்படும் செய்கைகளை எவ்வளவும் லட்சியம் பண்ணாமல், பெரிய ப்ரவாஹமாக ஓடும் நதிகளை அணைகட்டி, உளைவிழும் சதுப்புநிலத்தின்மேல் செவ்வையான பாதைகளை உண்டுபண்ணி, ஆழமான காறுகளின்மேல் அந்தரத்தில் தொங்குவதுபோல் வாராதிகள் கட்டி, பாறைகளைத் துளைத்து மலையின் கீழாகக் குகைபோல் வழிபண்ணுவது எது?

ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கும், ஒரு தேசத்தி லிருந்து மற்றொரு தேசத்திற்கும், மலைகளின் வழியாகவும், ஸமுத்ரத் தின் வழியாகவும் மெல்லிய கம்பியை இழுத்து, அதன் வழியாய் வாயுவேகமும் மனோவேகமும் இணையென்று சொல்லலாகாத வேகத் துடன் ஸமாசாரம் தெரிவித்து, ஒருவரும் கனவிலும் நினைக்க வொண்ணாத இந்த அதிசயத்தைச் செய்வது எது?

புத்திமான்களிடத்தினின்று உதிக்கிற விஷயங்களையும் சாஸ்த்ர பாரங்கதருடைய கொள்கைகளையும் பெரியோர்களுடைய புத்திமதி களையும் எல்லாரும் எக்காலத்திலும் அறிந்துகொள்ளும்படி வெறுங் காகிதத்தில் அச்சிட்டு அதற்குக் கற்பிக்கும் திறமையைக் கொடுப்பது எது?

நிர்மானுஷ்யமான ப்ரதேசங்களில் ப்ரவேசித்து, ஜாலவித்தைக் காரன் தன் கையில் ஏந்திய மந்திரக்கோலைச் சுழற்றி விநோதம் காட்டு வதுபோல், சுத்த ஸூந்யமான பள்ளத்தாக்குகளில் நவதான்யங்களும் செழித்துப் பயிராகவும்; வெறுமையான இடங்களிலெல்லாம் பசுமை யான மரங்கள் அடர்ந்த சோலைகள் நிறையவும்; உலைக்களம் பஞ்சாலை முதலான கைத்தொழிற்சாலைகள் விளங்கவும்; வாணிபங்கள் வேரூன் றிச் செழிக்கும் அடைக்கல ஸ்தானமாயும், ஸகல சாஸ்த்ரங்களும் முழங்கும் விலாஸமண்டபமாயும், ஸமய ஸித்தாந்தங்கள் ஓங்கிவளர் கிற திவ்யாலயமாயும், அரமனைகளும் ஆலயங்களும் மண்டபங்களும் உயர்ந்து காட்சிக்கினிய நகரம் தோன்றவும் காரணமாயிருப்பது எது?

பிறதேசத்து ஸாமான்கள் கப்பல் கப்பலாய் வந்திறங்குவதும் இவ்விடத்து ஸாமான்கள் அவ்விடங்களுக்கெல்லாம் கப்பல் கப்ப லாய்ப் போவதுமாக வர்த்தகத்தை வ்ருத்திசெய்து, சாஸ்த்ர ந்யாயங்க ளால் பஞ்சபூதங்களையும் மன்னுயிர்க்கு உதவியாகும்படி ஸ்வாதீனப் படுத்தி, கைத்தொழில்களை உண்டுபண்ணி, அவ்வேலைகளுக்கு அழ கைக் கொடுக்க சில்பவித்தைகளைக் கற்பித்து, இவைகளெல்லாம் என்றென்றைக்கும் அழியாமல் விளங்குவதற்கு ஸாதனமான நூல் களைப் பெருக்கி, நாகரீகம் பரவச்செய்து, ஜனங்கள் ஸகல க்ஷேமங் களையும் பெற்று ஸந்தோஷத்தை அநுபவிக்கும்படி அநுகூலித்து, நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் மேன்மேலும் வ்ருத்தியாகும்படி வகைதேடுவது எது?

இப்படியாக நாற்புறங்களிலும் விளங்கும் எண்ணிறந்த அதி சயமான கார்யங்களை ஸாதிப்பது உழைப்பு அல்லவா? அப்படி யானால், உழைப்புக்குச் சிறப்பு இல்லையென்று யார்தான் சொல் வார்கள்?

# அநுபந்தம் II.

## வழக்குத் தொடர் மொழிகள்.

அகடவிகடம்.
அகடித கடனாசக்தி.
அகவிலை.
அகால மரணம்
அகோராத்ரம்.
அக்கினிஸாட்சி
அக்குத்தொக்கில்லாதவன்.
அஜகஜாந்தரம்.
அசுவதாட்டி.
அச்சாணி.
அஞ்சலிபந்தம்.
அஞ்ஞாதவாஸம்.
அடாடி படாடி.
அடலை முடலை
அடி கோலுதல்.
அடிச் சட்டியில் கரணம்போட்டுக் குண்டு சட்டியில் குதிரை ஸவாரி விடுகிறது.
அடிதண்டம் பிடிதண்டம்.
அடிதலை தடுமாற்றம்.
அடிப்பாதை.
அடுப்பில் பூனை தூங்குகிறது.
அட்டமத்துச் சனி.
அட்டஹாஸம்.
அணிவகுப்பு.
அண்டபிண்டம்.
அண்டப் புளுகன்.
அண்டையயல்.
அத்திப்பூ.
அஸ்தலாகவம்.
அந்தசந்தம்.
அந்தர் தர்ப்பார்.
அப்யாஸவித்தை.
அமஞ்சி வேலை.
அம்பலத்தில் பொதியவிழ்க்கிறது
அரிச்சந்திரன்.
அருக்காணி முருக்கம்பூ.
அல்லும்பகலும்.
அழுகள்ளர்
அழுதகண்ணும் சிந்தியமூக்கும்.
அழுத பிள்ளையும் வாய்மூடும் அதிகாரம்
அன்னபானம்.
அஹங்கார மமகாரம்.
ஆகாசத்தை வில்லாக வளைத்தல்.
ஆகாசமாளிகை.
ஆகாய தாமரை.
ஆகாயம் விழுந்துவிட்டது.
ஆசாரக் கள்ளர்.
ஆஷாடபூதி.
ஆஜானுபாகு.
ஆணிமுத்து.
ஆதம்பாதமில்லாதவன்.
ஆதாளபாதாளம்.
ஆதிதெய்விகம்.
ஆதிபௌதிகம்.
ஆதியாத்மிகம்.
ஆதியோடந்தமாய்.
ஆபால கோபாலம்
ஆமைமயிர்க் கம்பலம்.
ஆயிரங்காலத்துப் பயிர்.
ஆயிரம்பிறை கண்டவர்.
ஆயிரம் புளுகன்.
ஆரம்ப சூரத்வம்.

ஆலகால விஷம்.
ஆலங்காட்டுப் பேய்.
ஆழமறியாமல் காலையிடுதல.
ஆழம் பார்த்தல்.
ஆழும் பாழும்.
இகபரம்.
இசகு பிசகு (இசக்கு பிசக்கு.)
இடக்கு மடக்கு.
இடபேதம்.
இடம் பொருளேவல்.
இடம் வலம் தெரியாதவன்.
இடிமேல் இடி.
இண்டு இடுக்கு.
இதாகிதம்.
இந்த்ரஜாலம்.
இரசேந்திரம்.
இரட்டைக்குதிரைப் பாய்ச்சல்.
இரண்டகம்.
இருதலைக்கொள்ளி யெறும்பு.
இருவல் நொருவல்.
இலவுகாத்த கிளி.
இறங்குபடி.
இருட்டு பிருட்டு.
இனங் கனம்.
ஈடுசோடு.
ஈடேறுவது.
உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில்.
உபாயக்கள்ளன்.
உமிக் குத்திக் கைசலித்தல்.
உரைகல்.
உரையாணி.
உலக்கைக் கொழுந்து.
உலக்கைப் பூசை.
உலைவைத்தல்.
உள்ளங்கை நெல்லிக்கனி.
உற்பாத பிண்டம்.
ஊமை கண்ட கனு.
ஊராருடைமைக்கு உலைவைக்கிறது.
ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறது.
ஊரோமல்.
எக்கச்செக்கம்.
எடுத்தார் கைப்பிள்ளை.
எடுப்பும் சாய்ப்புமாக.
எட்டுகோ தொட்டுகோ.
எட்டும் எட்டாததும்.
எய்ப்பில் வைப்பு.
ஏகதேசம்.
ஏகபோகம்.
ஏக்கன் போக்கன்.
ஏடாகூடம்.
ஏட்டிக்குப் போட்டி.
ஏட்டுச் சுரைக்காய்.
ஏணல் கோணல்.
ஏழைக் குறும்பு.
ஏழை பேழை.
ஏருமடைக்கு நீர்பாய்ச்சுகிறது.
ஏறியிறங்கும் திருமேனி.
ஏறுபடி.
ஏறுமாறு.
ஐயந்திரிபு.
ஒட்டுத்திண்ணை.
ஒப்படை பண்ணுதல்.
ஒருதலை வழக்கு.
ஓட்டுச் சுரைக்காய்
ஓரவஞ்சகம்.
ஓரியாய் வாழ்தல்.
கங்கணம் கட்டிக்கொள்ளுதல்.
கங்குகரை
கஜகரணம்.
கஜகரணவித்தை.
கடாட்ச வீட்சண்யம்.
கடுமுடு—கடுமுடுக்கல்.
கடைக்கண்பார்வை.

கடை பரப்புகிறது.
கஷ்ட ஸாத்யம்.
கஷ்ட நஷ்டம்.
கஷ்ட நிஷ்டூரம்.
கண்கட்டி வித்தை.
கண்டஸ்நாநம்.
கண்டதுண்டம்.
கண்ணில் மண்ணைத் தூவ.
கண்மாயம்.
கதலீபாகம்.
கதைகாரன்.
கதைவிட்டுக் கதைகேட்க.
கமகமவென்று.
கமரில் ஊற்றிய பால்.
கம்ப சூத்ரம்
கம்பளதண்ட ந்யாயம்.
கரடு முரடு.
கரதலாமலகம்.
கரிகாலன்.
கரிகாலி.
கரும்பிடைக்கணு.
கரும்பு தின்னக் கூலி.
கர்ண பரம்பரை.
கர்ணன்.
கலகலவென்று.
கலி பலி.
கல்மேலெழுத்து.
கல்லில் நாருரித்தல்.
கல்லெடுப்பு (கர்மாந்தரம்.)
கல்லைக்குத்திக் கைநோகிறது
கல்விக் காய்ச்சல்.
கள்ளங்கபடு.
கற்றறி மூடன் (மோழை.)
கற்றுக்குட்டி.
கன்று காலி.
கன்னங்கரிய.
கன்னங்கறேலென.
காகதாலீயம்.
காக்கன் போக்கன்.
காட்டியெரித்த நிலவு.
காணாது கண்டது.
காணியாட்சி.
காயசகாயம்.
காரடிவித்தை.
கார்த்திகைப் பிறை.
காலபேதம்.
கால் நடையில் பேச்சு பல்லக்கில்.
கால்மாட்டு வைத்தியன்.
கால்வழி.
கானகத்துக்க நிலா.
கானல் ஜலம்.
கிடுகிடு.
கிராம பேரை.
கிருஷ்ணபக்ஷம்.
கிளைப்பாதை—கிளைவழி.
கிள்ளுகீரை.
கீழது மேலதாய்.
குங்குமஞ் சுமந்த கழுதை.
குசாக்ரபுத்தி.
குசுகுசெனல்.
குடத்திலேற்றிய விளக்கு
குடியரசு.
குடிவாரம்.
குட்டிக்கரணம்
குட்டிக்கலகம்.
குண்டாகரணம்.
குண்டுகட்டு.
குதர்க்கம்.
குதிரைக்கொம்பு.
குதிரைப் பாய்ச்சல் கொடுத்தல்.
குதிரை முட்டை.
குந்தாணிவேர்.
குபீர் குபீரென்று.
குபுகுபென்று.
குபேரஸம்பத்து.
குப் குப்பென்று.

குமரகண்ட வலிப்பு.
கும்பிடுங் கள்ளர்.
குரங்கின்கை கொள்ளி கொடுத்து விடல்.
குரங்கு கையில் பூமாலை.
குரங்குப்பிடி.
குரங்கெறி விளங்காய்.
குருட்டடியடிக்க.
குருத்துரோகம்.
குலவித்தை-குலத்தொழில்.
குழைத்திடுங் கள்ளர்.
குளிர்ந்த கொள்ளி.
குளுகுளுத்தல்.
குறவழக்கு.
குற்றநற்றம்.
குன்றின்மேலிட்ட விளக்கு
கூடகோபுரம்.
கூரக்கா (கோரக்கர்) வைத்யம்.
கேளிவிலாசம்.
கைகடக்க.
கைகண்ட மருந்து.
கைகாட்ட.
கைக்காரன்.
கைகுவித்தல்.
கைகூட.
கைகூப்புதல்.
கைக்குதவ.
கைகொடுக்க.
கைக்கொள்ளுதல்.
கைக்கோல்.
கைசெய்தல்.
கைச்சாத்து.
கைச்சித்தி
கைதருதல்.
கைதூக்கல்.
கைத்தாய்.
கைத்தொழில்
கைந்நன்றி.
கைநீட்ட.
கைந்நொடி
கைபடிதல்.
கைபாகம்.
கைபார்க்க.
கைபிடி.
கைபிழைபாடு.
கைபோடுதல்.
கைப்பழக்கம்.
கைப்பணம்.
கைப்பற்றல்.
கைப்பாடு.
கைப்பிசகு.
கைம்மறதி.
கைம்மாறு
கைம்மேலே.
கையமர்த்தல்
கையழுத்தம்
கையாளுதல்
கையிடுதல்.
கையிருப்பு.
கையிறுக்கம்
கையுடனே-உடனே
கையுதவி.
கையும்பிடியுமாய்
கையும் மெய்யும்.
கையெழுத்து.
கையேந்தல்.
கையொப்பம்.
கைலாகு.
கைவல்லபம்.
கைவல்லோர்.
கைவாசி.
கைவசம்.
கைவிட.
கைவிரிக்க.
கைவிலை.
கோடாகண்டன்.

கொடுக்கல் வாங்கல்.
கொத்தோடு குலத்தோடு.
கொழுகொம்பில்லாத கொடி.
கொள்ளிக்காசு.
கோகரணம்.
கோடா(னு)னகோடி.
கோமுக வ்யாக்ரம்.
கோமுட்டி ஸாட்சி.
கோரக்கர் வைத்தியம்.
கோழிக் காய்ச்சல்
க்ரஹசாரம்.
க்ருஷ்ணபக்ஷம்
க்ருஷ்ணவார்த்தை.
க்ருதார்த்தன்
சகடயோகம்.
சடகோபன் தரித்தல்.
சட்டதிட்டம்.
சண்டப்ரசண்டமாய்.
சண்டமாருதம்.
சத்யகீர்த்தி.
சந்தி சதுக்கம்.
சந்து பொந்து.
சந்தேக விபரீதம்.
சம்பந்த கிரகஸ்தன்
சம்பிரதாய விரோதம்.
சரக்குப்புரக்கு.
சரட்டுச் சிக்கு.
சராசரம்.
சரித் தரம்.
சர்வஸாதாரணம்.
சல்லிய ஸாரத்யம்.
சாங்கோபாங்கமாய்.
சாய்கால்.
சாரதாபீடம்.
சாரதாம்சம்.
சாலவித்தை.
சிங்கசொப்பனம்.
சிங்கநாதம்.

சுக்ரதிசை.
சிஷ்டபரிபாலனம்.
சிதம்பரம்.

சிலாபாரம்.
சிவசிவா.
சிறகில்லாத பறவை.

ண்டி.
சின்னஞ்சிறிய.
சின்ன பட்டம்.
சின்னபின்னம்.

சீறுமாறு.
சுகதுக்கம்.
சுகபோகம்.
சுக்ரீபாக்
சுக்லபக்ஷம்.
சுத்த சூனியம்.
சுத்தபோஜனம்.
சுபாசுபம்.

சுலப ஸாத்யம்.
சூரியனைக்கண்ட பனி.
சூரியன் குஞ்சு.
சேக்கச்செவேலென்று.
செண்டுவெளி.
செப்பிடுவித்தை.
செம்பாகம்.
செய்கால்.
செய்பாகம்.
செய்யாமல் செய்த உதவி.
செல்வச்சிரிப்பு.
செவசெவவென்று.
சோக்குப்பொடி.
சோனவா (மா)ரி.
ஸ்நாநபானம்.

டம்பாசாரி
டால்டமமாரம போடுதல்
தகதகவென்று
தடிககு மிஞ்சின மிடா
ததியாராதனம்
தாவாரி
தராசு ந்றுககு
தாரதாம்
தரிசனவேதி
தரையோடு தரையாய்
தாமராஜா
தலாணி (தலையணை) மந்திரம
தலைதெரியாத ஸநதோஷம
தலைமாட்டுக கொள்ளி
தலைமாட்டு வைதயன
தலையில ஒட்டைக கவிழ்ததல.
தலையில மிளகாய அரைககிறது
தலையீறறு
தவடை சுததி
தறுகுறுமபு.
தனனந தனியே
தனனரசு நாடு.
தாணடுகால பாயசசல
தாது பிராது
தாமச பதாரததம.
தாரதமமியம
தாலிபுலாகந்யாயம
தாவர ஜஙகமபபொருள
தாறுமாறு
தானதாமம
திகைப்பூடு
திகதிககென்று
திகபிரமை
திடுமபரவேசமாய
திண்டு திமாசு
திப்ரமை.
திமில குமிலம.
திரவ்ய மமதை

திருகல முறுகல
திருககடைக காபபு
திருககண சாததுதல
திருககூட்டம
திருட்டு புரட்டு
ாய மலாநதருளுதல்
தீண்டாத திருமேனி
துஷட நிகரஹம
துபபட்டியில கிழிதத துண்டு
துபபாககி வயிறறில பீரங்கி
ககரம
தூயோதனன குடிககு ஐகுணி
துலாபாரம தூங்குதல
தூராவால கோதரம
தேககித தெவிட்டுதல
தேசாபிமானம
சேட ககிடையாத கிரவியம
தேயபிறை
ால
பாயசசல
தைபபிறை
தோகமபோடுதல
தொடைசவாரி விடுதல்
தொடைதட்டி வேளாளன்
தொட்டதும தொடாததும
தொபபையும தொநதியுமாய
தொழு களளா
தோட்டம துரவு
தோலிருககச சுளை விழுஙகு
தோலோ தோல
நீராகஷபாகம
நகமும சதையுமாய

நடையுடைபாவனை
நட்ட நடு
நநதன தோல்காசு
நநதன படவேடு.
நயபயம

நயவஞ்சகம்.
நல்லது பொல்லது.
நவாப் தர்ப்பார்.
நவ்வு சுவ்வு.
நழுவு சுளுவு.
நளபாகம்
நறுநறுத்தல்.
நறுநறெனல்.
நறுமுறுத்தல்.
நறுமுறெனல்.
நன்செய்.
நன்மை தீமை.
நாகூர் மரியாதை.
நாரதன் கால்.
நாராயணக் குழம்பு.
நாளிகேரபாகம்
நிரக்ஷரகுக்ஷி.
நிலம் நீர்.
நீர்மேலெழுத்து.
நீலங் கட்டுப்படப் பேசுகிறது
நீலி.
நீறுபூத்த நெருப்பு.
நுனிப்புல் மேய்ச்சல்.
நெருப்பாறு மயிர்ப்பாலம்.
நெறநெறவென்று.
நையா பொய்யா பாட்டு.
நொறு நொறு.
பகல் வேஷம்.
பகீரத ப்ரயத்தனம்.
பகைமொன்று பகைக்கின்றது.
பக்காத்திருடன்.
பசபசவென்று விழிக்கிறது.
பசியேப்பம்.
பச்சைப் பசேர்
படபடவென்று.
படாடோபம்.
படியளத்தல்.
படியோலை.
படுகாயம்.
படுகொலை.
படுசூரணம்.
படுபாவி.
படுவிஷம்.
பட்டது கெட்டது.
பட்டதும் படாததும்.
பட்டம் பகல்.
பட்டி மாடு.
பட்டிமிரட்டு.
பட்டுக்கத்தரித்ததுபோல்.
பட்டுக்குல்லா தைத்துப்போடுதல்.
பட்டோலை.
பண்டுபலாதிகள்.
பதபதவென்று.
பதைபதைக்க.
பத்துப் பத்தாய்.
பயிர் பச்சை.
பரபரத்தல்.
பரமபாகவத சிகாமணி.
பரலோக சாதனம்.
பரிசனவேதி.
பரும்படியானது.
பல்பிடுங்கின பாம்பு.
பல்லைக் கடித்துக்கொண்டு.
பவழக் கொடி.
பழக்க வழக்கம்.
பழம் பெருச்சாளி.
பழைய எமனு புது எமனு.
பளபளா.
பற்றுவரவு
பனசபாகம்.
பாங்கு பரிசனை.
பாங்கு பாவனை.
பாஷாபிமானம்.
பாத்ரா பாத்ரம்.
பிடுங்கித் தின்னுதல்.
பிணைப்படுதல்.

பிண்டப்பிரதானம்.
பிதுர்த்துரோகம்
பிரசவ வைராக்யம்.
பிரபஞ்ச நாடகம்.
பிலுபிலென்று.
பிள்ளையார் சுழி
பீமபாகம்
பீமன்.
புராண வைராக்யம்
புளகாங்கிதம்.
புளியேப்பம்
புறங்கொடுத்தல்
புறம்போக்கு
புன்செய்
பூசைபுனஸ்காரம்.
பூச்சி காட்டுகிறது
பூர்வோத்தரம்.
பெட்டி பேழை
பெரும்பேறு
பென்னம்பெரிய
பேய்த்தேர்.
பேரிலக்கம்
பொளபொளென்று
போட்டி போடுதல்.
போணி பண்ணுதல்
ப்ரசண்டமாருதம்
ப்ரசவ வைராக்யம்
ப்ரம்ம ராக்ஷஸன்
ப்ருங்ககீட நியாயம்
மகேந்திர ஜாலம்
மசான வைராக்யம்.
மஞ்சா (மஞ்சள்) காணி
மட்டுமிதம்
மணலைக் கயிறாகத் திரித்தல்
மண்டலவர்ஷம்
மதாபிமானம்.
மதில்மேல் பூனை.
மந்தமாருதம்.
மந்தஹாஸம்.
மயிர்க்கூச்செறிதல்
மர்க்கட முஷ்டி
மலடி மகன்
மலையிலக்கு
மனப்பால் குடித்தல்.
மனோரதம்
மனோராஜ்யம்
மனோவேகம்.
மஹேந்த்ரஜாலம்
மாடமாளிகை (கூடகோபுரம்)
மாயப்பொடி
மாரீசம்
மாயாஜால ஸ்வாமி
மானவாரி
மாஹேசுவர பூஜை
மூக்காலே மூன்றுவீசம்
முதுகுநீர் குத்துதல்
முயற்கொம்பு
முழு பூசணிக்காயைச் சோற்றொடு மறைத்தல்.
முறிச்சீட்டு
முறைவட்டம்
மூக்கும் முழி (விழி) யும்
மூட்டை முடிச்சு
மூதேவி
மூத்தவள்
மூல வோலை
மூலை முடுக்கு
மேரை மரியாதை.
மேல்வாரம்
மோககாணி
மொறுமொறுத்தல்
யமகண்டன்
யமகாதகன்.
யமராக்ஷஸன்
யமவேதனை
யோகக்ஷேமம்.

ரஸாபாஸம்.
ராஜிக தெய்விகம்.
ராஜோபசாரம்
ராம பாணம்.
ராம ராஜ்யம்
ராம வார்த்தை.
ராவண ஸந்யாஸி.
ருத்ராட்சப் பூஜை.
ரோக்க் ரோஜனை.
லட்சாதிலக்ஷம்
லவலேசமும்.
லோகோபகாரம்
வரவு செலவு.
வரிசை வண்ணம்.
வலசாரி இடசாரி.
வலமிடந் தெரியாதவன்
வளர்பிறை.
வாக்கு சகாயம்
வாசாகைங்காயம
வாசாமகோசரம்
வாயும் வயிறுமாய்
வாயுவேகம்
வாய்ப்பட்டி
வாய்ப்பந்தல்.
வாரப்பற்று.
வாழைமலடி.
வாழையடி வாழை.
விசுவாஸ காதகன்
விசுவாமித்ர ஸருட்டி
விடாகண்டன்
விதண்டாவாதம்.
விதயாமமதை.
வித்வக் காய்ச்சல்
விழலுக்கிறைப்பது
வீடும் விளக்குமாய் வைக்க
வீடு வாயில்
வீமபாகம்
வெட்டவெளிச்சம்
வெட்டாரவெளி

வெள்ளையும் சள்ளையுமாய்.
வெள்ளை வெளுக்கும் திருமேனி
வெள்ளை வெளேர்
வேரைக்கிளறி வெந்நீர் வார்த்தல்
வேர்ப்புழு
வேழமுண்ட விளங்கனி
வைப்புச் செப்பு
வைப்புத்தலம்.
வையாளி பாய்கிறது

# அநுபந்தம் III.

## பழமொழிகள்.

அகதிக்குத் தெய்வமே துணை.
அகத்தில் அழகு முகத்தில் தெரியும்.
அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
அஞ்சலி பந்தனம் ஆருக்கும் நன்மை.
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா
அடாது செய்தவர் படாது படுவர்
அடுத்தவனைக் கெடுக்கலாமா.
அணில் கொம்பிலும் ஆமை கிணற்றிலும்.
அதிக ஆசை அதிக நஷ்டம்.
அதிகாரியுடனே எதிர் பண்ணலாமா.
அப்பியாசம் கூசா வித்தை.
அப்பியாச வித்தைக்கு அழிவு இல்லை.
அரத்தை அரங்கொண்டும் வைரத்தை வைரங்கொண்டும் அறுக்க வேண்டும்
அலைகடலுக்கு அணை போடலாமா.
அலை மோதும்போதே தலைமுழுகுகிறது.
அல்ப ஸஹவாஸம் ப்ராண ஸங்கடம்.
அவன் அசையாமல் அணுவசையாது.
அளகேசனானாலும் அளவறிந்து செலவுசெய்யவேண்டும்
அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்.
அறிவுடையாரை அடுத்தால் போதும்.
அற்பசிமாதம் அழுகைத் தூறல்
அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி.
அன்னமயம் பிராணமயம்.
அன்னமிட்டாரைக் கன்னமிடலாமா.
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும்.
ஆடிவிதை தேடிப் போடு.
ஆடு கொழுக்கிறதெல்லாம் இடையனுக்கு லாபம்.
ஆடை இல்லாதவன் அரை மனிதன்.
ஆடையுடையான் சபைக்கஞ்சான்.

ஆட்டுக்கு வால் அளவறுத்து வைத்திருக்கிறது.
ஆணை அடித்து வளர்; பெண்ணைப் போற்றி வளர்.
ஆண்சிங்கத்தை ஆனை அடிக்குமா.
ஆண்டை கூலியைக் குறைத்தால் சாம்பான் வேலையைக் குறைப்பான்.
ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தின்மேல் குறைசொல்வான்.
ஆபத்திலே அறியலாம் அருமை சிநேகிதனை
ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உண்டு.
ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா.
ஆயிரக்கல நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்.
ஆயிரம் நக்ஷத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.
ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டரை.
ஆயிரம்பேரைக் கொன்றவன் அரைவைத்தியன்.
ஆயிரம் வந்தாலும் ஆத்திரம் ஆகாது.
ஆலமரம் பழுத்ததென்று பறவைக்கார் சீட்டனுப்பினர்.
ஆலும் வேலும் பல்லுக் குறுதி.
ஆவாரையிலேயும் ஆபத்துக் குதவும்.
ஆழ மறியாமல் காலையிடாதே.
ஆறின புண்ணிலும் அசடுநிற்கும்.
ஆறு போவதே கிழக்கு அரசன் சொன்னதே வழக்கு.
ஆற்று மணலையும் ஆகாசத்து நக்ஷத்திரத்தையும் அளவிடப் போகுமா.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
ஆனைப்பசிக்கு சோளப்பொரி தாங்குமா.
ஆனை விழுந்தால் கொம்பு, புலி விழுந்தால் தோல்.
ஆனை வேகம் அடங்கும் அங்குசத்தில்.
இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
இடம் வலம் தெரியாதவனோடு இணக்கம் பண்ணக்கூடாது.
இடிக்குக் குடை பிடிக்கலாமா.
இடுவது பிச்சை பெறுவது மோட்சம்.
இரண்டு நாய்க்கு ஒரு எலும்பு போட்டாற்போல.
இராம லட்சுமணரைப்போல் இசைந்திருக்கிறது.
இராமவாக்குக்கு இரண்டுண்டா.
இருக்கவேண்டு மென்றால் இரும்பைத் தின்.
இருட்டுவேலையோ குருட்டுவேலையோ.
இருதலைக் கொள்ளியில் அகப்பட்ட எறும்பு.
இருநாய்க்கு இட்ட எலும்புபோல.

இருந்தகால் மூதேவி நடந்தகால் சீதேவி.
இருந்தவன் எழுந்திருப்பதற்குள் நின்றவன் நெடுந்தூரம்.
இருப்புத்தூணைச் செல் அரிக்குமா
இருவரும் ஒத்தால் ஒருவருக்கும் பயமில்லை.
இருளும் ஒருகாலம் நிலவும் ஒருகாலம்
இலக்கணம் கற்றவன் கலக்கமற மன்னர்சபை காண்பான்.
இலங்கணம் பரமௌஷதம்
இல்லாதவன் பொல்லாதவன்.
இல்லாது பிறவாது அள்ளாது குறையாது
இளங்கன்று பயம் அறியுமா.
இளமையில் கல்வி எப்போதும் நிற்கும்.
இளைத்தவன் எள்ளை விதை.
இன்றைக் கிருப்பாரை நாளைக்குக் காணோம்.
இன்றைக் கென்பதும் நாளைக் கென்பதும் இல்லையென்பதற் கடையாளம்
ஈக்கு விடம் தலையில்; தேளுக்கு விடம் கொடுக்கில்
ஈக்கும் பாலுக்கும் எச்சில் இல்லை
ஈடாகாதவனை எதிர்க்காதே
ஈட்டி எட்டின மட்டும் குத்தும்; பணம் பதின்காதமட்டும் குத்தும்.
ஈனரை அடுத்தால் மானம் அழியும்
உடுக்காப் புடவை பூச்சிக் கிரை
உடைந்த சங்கு ஊது பறியுமா
உடையவன் பாராத பயிர் உருப்படுமா
உடையவன் போகா வேலை ஒருமுழம் கட்டை.
உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும்
உட்சுவரிருக்கப் புறஞ்சுவர் பூசலாமா.
உண்ட இளைப்பு தொண்டருக்கும் உண்டு.
உண்டது தானே ஏப்பம் வரும்
உண்டவன் உரம் செய்வான்.
உண்டால் பசிதீருமா கண்டால பசிதீருமா
உண்ணுச் சொத்து மண்ணுய்ப் போகும்
உண்ணுமல் ஊரெல்லாம் திரியலாம், உடுக்காமல் ஒரு வீட்டுக்கும் போகலாகாது
உதாரிக்குப் பொன் துரும்பு.
உத்தமனுக்கும் தப்பிலிக்கும் உடன்படிக்கை வேண்டாம்.
உத்தியோகத்துக்குத் தக்க சுகம்
உத்தியோகம் புருஷலக்ஷணம்.
உபசாரம் செய்தவர்க்கு அபசாரம் பண்ணுகிறதா.

உப்பிட்டவர்களை உள்ளளவும் நினை.
உப்பிருந்த பாண்டமும் உபாயமிருந்த நெஞ்சும் தப்பாமல் தட்டுண்டுடையும்.
உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்
உப்பு வாணியன் அறிவானோ கற்பூரவிலை.
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கருடனாகுமா.
உயிருள்ளமட்டும் தைரியம் விடலாமா.
உழக்கிலே கிழக்கு மேற்கா.
உழுகிறவன் கணக்குப் பார்த்தால் உழக்கோலும் மிஞ்சா.
உளவில்லாமல் ஊரழியுமா.
உள்ளதைச் சொன்னவன் ஊருக்குப் பொல்லாதவன்.
உள்ள மாற்றைக் காட்டும் உரைகல்லும் மெழுகுண்டையும்.
உறவு உண்ணாமல் கெட்டது, உடம்பு உடுக்காமல் கெட்டது.
உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.
ஊணற்றபோதே உடலற்றுப்போம்.
ஊணற்றபோதே உறவற்றது.
ஊணன் கருமமிழந்தான்; உலுத்தன் பேரிழந்தான்.
ஊணினால் புத்தி; பூணினால் சாதி.
ஊணுக்கு முந்தவேண்டும்; கோணுக்குப் பிந்தவேண்டும்
ஊணு முறக்கமும் ஒத்தாருக் கொத்தபடி.
ஊத்தைவாயன் தேட, கற்பூரவாயன் தின்ன.
ஊமைக்குத் தெத்துவாயன் உயர்ந்த வாய்ச்சாலகன்.
ஊமையன்பாட, சப்பாணிஆட, செவிடன் கேட்க, குருடன் பார்க்க.
ஊருக்காகாதது வீட்டுக்காகாது.
ஊருக்கெல்லாம் ஒருவழி, உனக் கொருவழியா.
ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்.
ஊர் ஓடச்சே ஒக்க ஓடவேண்டும்.
ஊர்க்குருவிமேல் இராமபாணம் தொடுக்கிறதா.
ஊன்றக் கொடுத்த தடி என் உச்சியை உடைக்கிறது.
எங்கு மடமாயிருக்கிறது; இருக்கத்தான் இடமில்லை.
எங்கே புகை உண்டோ அங்கே நெருப்பு உண்டு.
எச்சிற்கலைக்கு மண்ணாங்கட்டி ஆதரவு, மண்ணாங்கட்டிக்கு எச்சிற்கலை ஆதரவு
எடுக்கிறது எருதுமாட்டுச் சுமை, (தம்பி) படுக்கிறது பஞ்சணை மெத்தை.
எடுத்தசுமை சுமந்தல்லவோ இறக்கவேண்டும்.
எடுத்தாளாத பொருள் உதவாது.

எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன.
எட்டியுடனே சேர்ந்த இலவுந் தீப்பட்டது.
எட்டினமட்டும் வெட்டும் கத்தி, எட்டாதமட்டும் வெட்டும் பணம்.
எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம்.
எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணாமற் செய்கிறவன் மட்டி.
எண்ணெய் முந்துதோ திரி முந்துதோ.
எத்தனை புடமிட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா.
எத்தால் பிழைக்கலாம் ஒத்தால் பிழைக்கலாம்.
எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்ச இலை உதிராது.
எந்தவாக்குப் பொய்த்தாலும் சந்தைவாக்குப் பொய்யாது.
எய்தவன் இருக்க அம்பை நோவான் என்.
எரிகிற நெருப்பை எண்ணெய்விட் டவிக்கலாமா.
எரிகிற வீட்டிலே பிடுங்கினது லாபம்
எருது நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுகிறதா.
எருதுநோய் காகம் அறியுமா
எருமைக் கோமயம் எக்கியத்திற் காகுமா
எருமையிலும் வெள்ளாடு ஏறக் கறக்குமா.
எலி அழுது புலம்பினாலும் பூனை பிடித்தது விடாது.
எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்.
எலி பூனையை வெல்லுமா.
எலியைக் கண்டு பூனை எக்கமடையுமா.
எலிவருத்தம் பூனை அறியுமா.
எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.
எல்லாம் அறிந்தவனும் இல்லை; யாதும் அறியாதவனும் இல்லை.
எல்லாருக்கும் ஒவ்வொன் றெளிது.
எல்லாரும் பல்லக்கேறினால் பல்லக்கு ஆர் தூக்குகிறது.
எல்லாரும் மனிதரா; கல்லெல்லாம் மாணிக்கமா
எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்.
எள்ளத்தனை எடுத்தாலும் உள்ளதிற் குறையும்.
எள்ளுக்கு எழுழவு, கொள்ளுக்கு ஒருழவு
எறும்புக்குத் தன்கையால் எண்சாண் உடம்பு.
எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்யும்.
எறும்பூரக் கற்குழியும்.
ஏரி நிறைந்தால் கரை கசியும்
ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை.
ஏழையென்றால் எவர்க்கும் எளிது.
ஏழைச்சொல் ஏறுமா அம்பலம்.
ஐங்காதம் போனாலும் அறிமுகம் வேண்டும்.

ஐப்பசிமாசம் அழுகைத்தூறல்; கார்த்திகைமாதம் கனமழை.
ஐப்பசிமாதத்து வெயில் அன்றுரித்த தோல் அன்று காயும்
ஐயமான காரியத்தைச் செய்யலாகாது.
ஒடிந்தகோல் ஆனாலும் ஊன்றுகோல் ஆகும்.
ஓதி பெருத்துத் தூணாகுமோ.
ஒரு ஊருக்கு ஒரு வழியா.
ஒருகாற்செய்தவன் இருகாற் செய்வான்.
ஒருகுடம் பாலுக்கு ஒருதுளி பிரை.
ஒரு கூடு முடைந்தவன் ஒன்பது கூடு முடைவான்.
ஒரு கை தட்டினால் ஓசை கேட்குமா
ஒருதாய் அற்றவர்க்கு ஊரெல்லாம் தாய்.
ஒரு துரும்பு பழுதை யாமா
ஒருத்தர் போன வழி ஒருத்தர் போகிறதில்லை.
ஒருநன்றி செய்தவரை உள்ளளவும் நினை.
ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்.
ஒரு மரத்துப் பட்டை ஒரு மரத்தில் ஒட்டுமா.
ஒரு முழுக்கிலே மண் எடுக்க முடியுமா.
ஒருமைப்பாடு இல்லாத குடி ஒருமிக்கக் கெடும்.
ஒருவ ரறிந்தால் ரகசியம், இருவ ரறிந்தால் அம்பலம்.
ஒரு விரல் நொடியிடாது
ஒளியில்லாவிட்டால் இருளையும் இருளில்லாவிட்டால் ஒளியையும் காணலாம்.
ஒற்றைக் கை ஓசையிடுமா
ஓடங் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
ஓடம் வண்டியிலே வண்டி ஓடத்திலே.
ஓடம்விட்ட ஆறு அடிசுடும்.
ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.
ஓட்டைச் சங்கு ஊது பறியாது.
ஓட்டை மணியானாலும் ஓசை நீங்குமா.
ஓதுவானுக்கு ஊரும் உழுவானுக்கு நிலமும் இல்லையா.
ஓதுவானெல்லாம் உழுவான் தலைக்கடையே.
ஓந்தி வேலிக் கிழுக்கிறது தவளை தண்ணீருக் கிழுக்கிறது
கங்கையில் முழுகினாலும் காக்கை அன்னமாகுமா.
கசடருக் கில்லை கற்றோ ருறவு.
கசடருக்கு யோகம் வந்தால் கண்ணுந்தெரியாது காதுங்கேளாது.
கடலுக்குக் கரை போடுவா ருண்டா.
கடலைத் தாண்டினவனுக்குக்கால்வாயைத் தாண்டுகிறது கஷ்டமா.

கடல் கொதித்..ல் வளாவ நீர் எங்கே.
கடல் திடலாகும் திடல் கடலாகும்.
கடல் நீர் நிறைந்தென்ன காஞ்சிரை பழுத்தென்ன.
கடல் பெருகினல் கரை யேது.
கடா பின்வாங்குகிறது பாய்ச்சலுக் கிடம்.
கடிக்கிற நாய்க்குக் கழுத்திற் குறுங்கயிறு.
கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா.
கடுக்காயில் அகணி நஞ்சு, சுக்கில் புறணி நஞ்சு.
கடுங்காற்று மழைகூட்டும், கடுஞ்சிநேகம் பகைகாட்டும்.
கடுவெளியைக் கானல் சலமாய்க் கண்டதுபோல.
கடைசிச் சோற்றுக்கு மோரும்-கால்மாட்டுக்குப் பாயும் வேண்டும்.
கடையி லரிசி கஞ்சிக் குதவுமோ.
கட்டினவனுக்கு ஒருவீடு; கட்டாதவனுக்கு ஊரெங்கும் வீடு.
கட்டின வீட்டுக்குக் கருத்துசொல்வார் அநேகர்.
கட்டோடே போனல் கனத்தோடே வரலாம்.
கண் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா.
கண்டது சற்கப் பண்டித னவான்.
கண்ணடியில் கண்ட பணம் கடனுக் குதவுமா.
கண்ணாரக் கண்டதற்கேன் அகப்பைக் குறி.
கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்ட
கண்ணுள்ள போதே காட்சி.
கண்ணைக்கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது.
கண் பார்த்தால் கை செய்யும்
கதிரைக் களைந்தும் களையைப் பிடுங்கு.
கற்றது கைம்மண்ணளவு; கல்லாத துலகளவு.
கற்றவனுக்கு வித்தை அருமையா.
கற்றுங் கற்றறிமோழை; கண்ணிருந்துங் குருடு.
கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி.
கம்பளி விற்ற பணத்துக்கு மயிர் முளைத்திருக்கிறதா.
கரி விற்ற பணம் கறுப்பா யிருக்குமா.
கருமத்தை முடிக்கிறவன் கடலை ஆராய்வான்.
கரும்பு கசக்கிறது வாய்க்குற்றம்.
கரும்பு கோணியிருந்தாலும் தித்திக்கும்.
கரும்பும் எள்ளும் கசக்கினற்றான் பலன்.
கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்கலாமா.
கரும்பை விரும்ப விரும்ப வேம்பு.
கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்.
கலப் பாலுக்குத் துளிப் பிரை.

கல்மே லெழுத்துக் கலையுமா
கல்லாதவரே கண்ணில்லாதார்.
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமா.
கல்லைக் குத்துவானேன் கைநோகுதென் றழுவானேன்.
கல்வி யழகே யழகு
கல்வியில்லாச் செல்வமும் கற்பில்லா அழகும்
கல்வியுள்ள வாலிபன் கனகிழவன்
கல்வியென்ற பயிருக்குக் கண்ணீரென்ற மழைவேண்டும்.
கவலை யுடையார்க்குக் கண்ணுறக்கம் வாராது
கழுதை கெட்டால் குட்டிச்சுவர்
கழுதைக்குச் சேணங் கட்டினாலும் குதிரையாகுமா
கழுதை அறியுமா கந்தப்பொடி வாசனை
கழுதையும் குதிரையும் சரியாமா.
கழுத்து வெளுத்தாலும் காகம் கருடனாமா.
களவுங் கற்று மற
கள்ள மனம் துள்ளும்
கள்ளி பெருத்தென்ன, காயுண்டோ நிழலுண்டோ
கறக்க ஊறும் ஆவின்பால், கற்க ஊறும் மெய்ஞ்ஞானம்
கறுப்பு வெளுப்பாகாது, கசப்பு இனிப்பாகாது
கற்கையில் கல்வி கசப்பு கற்றபின் பதுவே இனிப்பு.
கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்
கற்றோ ரருமை கற்றோ ரறிவர்
கனத்திற்கு நற்குணம் சுமைதாங்கி.
கனமழை பெய்தாலும் கருங்கல் கரையுமா
கனமூடன் கைப்பொருள் இழப்பான்
கனவிற் கண்ட பணம் செலவிற் குதவுமா
கனிந்த பழம் தானே விழும்
கன்று கெட்டால் காணலாம் தாயருகே.
கன்னான் நடமாடக் குயவன் குடிபோகிறான்
காக்காய் ஏறினதும் பனம்பழம் விழுந்ததும்
காக்காய்க்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
காக்காய் கூட்டம்போலக் கட்டுக்கொப்பு
காசகாயுங் காற்றும் போக்கண்டானால் வரும்.
காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலனடைவான.
காட்டி லெரித்த நிலவும் கசடனுக்குச் செய்த நன்றியும்.
காட்டுக்குப் புலி ஆதரவு, புலிக்குக் காடு ஆதரவு.
காட்டை வைத்துக்கொண்டல்லவோ வேட்டை யாடவேண்டும்.
காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்

காணிக் கொத்தது கோடிக்கு.
காதவழி பெயரில்லான் கழுதையோ டொக்கும்.
காதவழி போயறியான் கழுதைப் பிறப்பு.
காதுக் கிட்டால் முகத்துக் கழகு.
காந்தத்தின் முன் ஊசி கம்பித்தாற்போல.
காய்த்த மரம் கல்லெறிபடும்.
காய்ந்த மரம் தளிர்க்குமா.
கார்த்திகைக்கு மிஞ்சின மழையுமில்லை; கர்னனுக்கு மிஞ்சின கொடையுமில்லை.
கார்த்திகைப்பிறை கண்டாற்போல.
காலத்துக் கேற்ற கோலம்.
காலம் போம் வார்த்தை நிற்கும்.
காவடி பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
காற்றுக் கெதிரில் துப்பினல் முகத்திலே விழும்.
காற்றுள்ளபோது தூற்றிக்கொள்; கரும்புள்ளபோது ஆடிக்கொள்.
கிட்ட நெருங்க முட்டப் பகை.
கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தான்.
கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்.
கிளி அழுதால் பூனை விடுமா.
கிளி அருமையைப் பூனை அறியுமா.
கீரிவாய்ப் பாம்பு போல.
கீரைவேர் பிடுங்க ஏலேலோ பாட்ட
கீர்த்தியால் பசி தீருமா.
கீழோ ராகிலும் தாழ வுரை
குங்குமம் சுமந்த கழுதை பரிமளம் அறியுமா.
குசவனுக்குப் பலநாளை வேலை: தடிகாரனுக்கு அரைநாழிகை வேலை.
குடி சூது விபசாரம் குடியைக் கெடுக்கும்.
குடித்தனமோ துரைத்தனமோ
குடியனும் வெறியனும் சரி.
குடியில்லா வூரில் குருவியும் பறக்காது
குட்டியின் கையைப் பிடித்துக் குரங்கு கொள்ளிக்கட்டையைச் சூடுபார்த்தாற்போல.
குட்டிக்கலகம் பண்ணுகிறவன் குட்டுப்பட்டுச் சாவான்.
குட்டிபோட்ட நாய்போல் குலைக்கிறது.
குட்டிபோட்ட பூனைபோல அலைகிறான்.
குட்டையைக் கலக்கிப் பருந்துக் கிரையிடுகிறது.
குணமுற்றவன் மணமுற்றவன்.

குணமற்றவன மணமற்றவன்
குணடுமில்லாமல மருநதுமிலலாமல் குருவி சுடலாமா
குதிரையின கொழுபபறிநது சுவாமி கொமபு கொடுககவிலலை
குதிரை ஏறுமல கெட்டது, கடன் கேளாமல கெட்டது
குந்தியிருநது தினறால குனறு மாளும
குப்பை உயரும, கோபுரம தாழும.
குபபைக கீரைததணடு கபபற பாயமர மாகுமா.
குபபையிலே கிடநதாலும குணடுமணி நிறமபோகுமா
குமபிடு கொடுததுக குமபிடு வாஙகுகிறது.
குமபிட்டுக கடனகொடாதே குமபிட்டுக கடனவாஙகாதே.
குயில முட்டையிடக காகம கணடுகளிககு.
குரஙகுப பிடியே பிடி
குரஙகுப பிணமும குறவன சுடுகாடும கணடதிலலை
குரஙகு முகமெலலாம ஒருமுகம
குரப்பமிட்டுத தேயககும குதிரையாமா கழுதை
குருடனுககுக குருடன வழிகாட்டினால இருவரும குழியிலே
விழுவாாகள
குருமொழிககு இரண்டு குறுககே பேசலாமா
குருவேஷங கொணடவன குரு ஆவானா
குலம குபபையிலே பணம பநதியிலே
குலத்தளவே யாகும குணம
குலமெபபடியோ குணமப்படி
குலததுக கீனம கோடாலிக காமபு
குலைககிற நாய கடிககிற தரிது
குலையாத நாய குதிகாலைக கடிககும.
குறுங்கொலலும நெடுநதசசும
குறைககுடம கூததாடும
குறையச சொலலி நிறைய அள
குற்ற மறைப்பதில மறறொரு குறறம
குற்ற மனசசாட்சி கூடிவாழ் சததுரு
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறெனனும, குறுமபியுளள காது தினவு
தின்னும்
குறறம் பாாககில் சுற்றமிலலை
கூட இருநதுபாா கூட்டுபபயிா இட்டு பாா.
கூததிலே கோணங்கி வநதாற்போல.
கூத்துககேற்ற கொட்டு கொட்டுகிறது.
கூலிப்படை வெட்டுமா
கூலியான் மேற்கே பார்ததான், கூததாடி கிழக்கே பாாததான்

கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கியுடு.
கெடுத்தவருக்கும் நீ கேடு நினையாதே.
கெடுப்பாரை தெய்வம் கெடுக்கும்.
கெடுவது செய்தால் படுவது கருமம்.
கெடுவான் கேடு நினைப்பான்.
கெட்டவன் பட்டணம் சேர்.
கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் தெரியும்.
கெண்டையைப் போட்டு வராலை யிழுக்கிறது.
கொடிகற்றவன் இடறிவிழுந்தால் அதுவும் ஒருவரிசை.
கெருடனைக் கண்ட பாம்பு.
கேட்டதையெல்லாம் நம்பாதே, நம்பினதெல்லாம் சொல்லாதே
கைதப்பிக் கண்ணில் பட்டால் கையைக் கண்டிப்பதுண்டா.
கை பட்டால் கண்ணாடி.
கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது
கையழுத்த மானவன் கரையேற மாட்டான்.
கையில் வெண்ணெயிருக்க நெய்க்கலைவானேன்
கையூன்றிக் கரணம் போடவேண்டும்.
கைவச் செட்டியார் குறைத்தால் காலைக் கைக்கோளன் குறைப்பான்
கைவிரல் கண்ணிலே பட்டால் கையை என்ன செய்யலாம்
கொசுவுக் கஞ்சி குடிபோகிறதா.
கொடிக்குக் கொம்மட்டிக்காய் கனத்திருக்குமா.
கொடுங்கோலரசு நெடுங்காலம் நில்லாது.
கொடுத்தது கேட்டால் அடுத்திடும் பகை.
கொடுத்தா லொன்று கொடாவிட்டா லொன்று
கொடுத்துப் பொல்லாப் பாகிறதைவிடக் கொடாமலிருப்பது நலம்
கொடுப்பாரைத் தடுக்காதே.
கொடும்பாவி யானாலும் கொண்ட மாமியார் வேண்டும்
கொட்டிக்கிழங்கும் ஒரு முட்டுக் குதவும்
கொட்டிக்கொட்டி அளந்தாலும் குறுணி குறுணிதான்.
கொண்டு குலம் பேசுகிறதா.
கொல்லத்தெருவில் ஊசிவிற்றாற்போல.
கொழு(உழவு)மீதிற் குடிகொண்ட குடிச்செல்வமே செல்வம்.
கொள்ளிகொண்டு தலை சொறிகிறதா.
கொள்ளென்றால் வாயைத் திறக்கிறது கடிவாளமென்றால் வாயை மூடுகிறது.
கொள்ளைக்குப் போனாலும் கூட்டாகாது.

கோடாலிக் காம்பு குலத்துக் கீனம்.
கோடை இடி குமிறி நிற்போல.
கோடையிலே தண்ணீர் ஓடைகண்ட மான்போல.
கோள் சொல்பவனைக் கொடுந்தேளென்று நினை.
கோணி கொண்டது எருது சுமந்தது.
கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமல் காணி கொடுப்பது நலம்
கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு, பாத்திரமறிந்து பிச்சையிடு.
கோபம் சண்டாளம்.
கோபமில்லாத துரையும் சம்பளமில்லாத சேவகனும்.
கோமுட்டி புத்திக்கு மோசமில்லை.
கோலிழந்த குருடனைப்போல.
கோவுக் கழகு செங்கோல் முறைமை.
கோழிக்காய்ச்சலும் குண்டன்காய்ச்சலும் விடாது.
கோழி போனது மல்லாமல் குரலும் போச்சுது.
கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா.
கோள் சொல்லிக் குடியைக் கெடுக்கிறது.
சகல தீர்த்தங்களுக்கும் சமுத்திரமே ஆதாவு.
சகோதர முள்ளவன் படைக் கஞ்சான்.
சங்கிலே வார்த்தால் தீர்த்தம்; செம்பிலே வார்த்தால் தண்ணீர்
சட்டி சுட்டதும் கைவிட்டதும்.
சட்டி பாலுக்கு ஒருசொட்டு மோரு பிரை.
சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கு பூட்டிக்கொண்டது போல
சண்டிக் குதிரைக்கு மொண்டி சாரதி
சண்டிக்கேற்ற மிண்டன்.
சண்டை முகத்திலே உறவா.
சத்திரத்திலே போசனம், மடத்திலே நித்திரை.
சத்துரு பொறாமை தனக்கே தண்டனை.
சந்தடி சாக்கிலே கந்தப்பொடி காற்பணம்.
சந்திரனைப் பார்த்து நாய் குலைத் தாவதென்ன.
சந்தைக்கு வந்தவர்கள் துணையா.
சபையிலே நற்கீரன் அரசிலே விற்சேரன்.
சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன்
சமுசாரக் குட்டு வியாதி ரெட்டிப்பு.
சமுசாரமோ சாகரமோ.
சம்பளம் அரைப்பண மானாலும் சலிகை இருக்கவேண்டும்.
சயினன் கைச் சீலைப்பேன் போல.

சருகைக் கண்டு தணல் அஞ்சுமா.
சளி பிடித்ததோ சனி பிடித்ததோ.
சற்சன ருறவு சர்க்கரைப் பாகுபோல.
சனத்தொடு சனம் சேரும் சந்தனத்தோடு கற்பூரம் சேரும்
சாகிறவரையில் மருந்து கொடுக்கவேண்டும்.
சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில்விழ லாம்.
சாட்டை யில்லாமல் பம்பரம் ஆடுமா.
சாணேற முழம் சறுக்குகிறது.
சாண் குருவிக்கு முழ வாலாம்
சாண்பறைக்கு முழத்தடி.
சாதிக்குணம் தன்னை விடாது.
சாதித் தொழில் தனக்குத்தானே வரும்.
சாத்திரம் பாராத வீடு சமுத்திரம்.
சிங்கத்துக்கு நாயா சிங்காரமுடி சூட்டுகிறது.
சிட்டுக் குருவிமேல் இராமபாணம் தொடுக்கிறதா.
சிதம்பரத்திலே பிறந்தபிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக் கொடுக்க வேண்டுமா
சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
சினேகம் செய்தபின், சோதி தெளிந்த பின் நம்பு.
சிந்தின வீட்டிலே சேராது
சிரித்துக் கழுத்தறுக்கிறது.
சில்லரைக் கடன் சீரழிக்கும்.
சிறுகக் கட்டிப் பெருக வாழு.
சிறுகச் சிறுகத் தின்றால் மலையையுந் தின்னலாம்.
சிறுகுழந்தை யில்லாத வீடும் வீடல்ல, சீரகமிட் டாக்காத கறியும் கறியல்ல.
சிறுபிள்ளை யிட்ட வெள்ளாமை வீடுவந்து சேராது
சிறுமை படுகிறதைவிடச் செத்தா லுத்தமம்.
சிறுமையிற் கல்வி சிலைமே லெழுத்து.
சிற்றாள் எட்டாளுக்குச் சரி.
சினத்தால் அறுத்தமூக்குச் சிரித்தால் வருமா.
சிற்றூரிலே பாரிக்கூத்தா.
சின்ன பாம்பானாலும் பெரிய தடிகொண் டடி
சீதை பிறக்க லங்கை அழிய.
சீப்பெடுத் தொளித்தால் கலியாணம் நிற்குமா.
சீவனும் விட்டது; வியாதியும் பொட்டென்று நின்றது.
சீறிவரும் வடவாக்கினியைச் சிறுகுட்டைத்தண்ணீர் அவிக்குமா.

சுடு கெண்டைக்காக ஏரியை உடைக்கலாமா.
சுடு நெருப்பை மடியிலே முடியலாமா
சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா.
சுட்டவனிருக்கக் நண்டை நோகிறதா.
சுண்டினாலும் பால் சுவை குறையுமா.
சுண்டைக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற்பணம்.
சுத்தம் சோறிடும்.
சுமக்கிறவனுக் கல்லவோ தெரியும் காவடிபாரம்.
சுமந்தவன் தலையிலே சும்மாடு.
சுயகாரிய துரந்தரன் சுவாமிகாரியம் வழுவழு.
சுயபுத்தி போனாலும் சொற்புத்தி வேண்டாமா.
சுவரை வைத்துக்கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்.
சுவர்க்கத்திலே தோட்டியும் சரி தொண்டமானும் சரி
சூடுண்ட பூனை அடுப்பங்கரை சேராது
சூதுகாரன் பணம் சுற்றியிருக்கிறபேரைச் சேரும்.
சூரியனுக்கு முன் மின்னும்பூச்சி போல
சூரியனைக் கண்ட தாமரைபோல
சூரியனைக் கண்ட பனிபோல.
சூரியனைக் கல்லா லடித்ததுபோல.
சூரியனைப் பார்த்து நாய் குலைத்ததுபோல.
சூரியன்கொடுத்த அக்கினியைக்கொண்டு சூரியனைப் பணிவது போல.
சூரியன் முன்னே தோன்றிய சந்திரன்போல.
சூரியன் வெளிச்சத்தில் சுடர்விளக்கு ஏன்
செக்கிலரைப்பட்ட எள் திரும்ப முழுசாமா
செங்கோல் கோணினால் எங்குங் கோணும்.
செடியிலே வணங்காதது மரத்திலே வணங்கும்.
செட்டிக்கும் பயிருக்கும் சென்மப் பகை.
செட்டி கூடிக் கெட்டான், சேணியன் பிரிந்து கெட்டான்.
செட்டி பணத்தைக் குறைத்தான், சேணியன்காலைக்குறைத்தான்.
செட்டிப்பிள்ளையோ கெட்டிப்பிள்ளையோ.
செட்டியாருக் கொருகாலம், சேவகனுக் கொருகாலம்.
செத்த நாய் திரும்பக் கடியாது.
செத்தபிறகா செய்தவனுக்குச் செய்கிறது.
செத்தபிறகா செல்வம் அனுபவிக்கிறது.
செத்தவன் பிள்ளை இருக்கிறவனுக் கடைக்கலம்.
செத்தும் சாவாதவன் தியாகம் கொடுப்போன்.
செம்பு நடமாடக் குயவன் குடிபோகிறான்.

செயமுள்ள மட்டும் பயமில்லை.
செய்த தீவினை செய்தவர்க்கே.
செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கில் நெய்யுந்தொழிலுக்கு நிகரில்லை.
செருப்புக்காகக் காலைத் தறிக்கிறதா.
செல்வம் சீரழியும்.
செல்லாத காசு என்றைக்கும் செல்லாது.
செல்லாப்பணம் எங்கும் செல்லாது.
செல்லும் பொழுது செலுத்துவாய் சிந்தையை
செல்வம் சொல்லுக் கஞ்சுமா.
சென்மத்திலே பிறந்ததைச் செருப்பா லடித்தாலும் போகாது.
சென்ற காசுக்கு வட்ட முண்டா.
சென்ற காரியத்தைப் பார்த்து வருங் காரியத்தை யறி
சேணியனைக் கெடுக்கச் சாணக்குரங்கு பத்தாதா
சேரப் போனால் செடியும் பகை.
சேராத கூட்டத்திலே சேர்ந்தால் வாராத துன்பம் வரும்.
சேர்க்கை வாசனையோ இயற்கை வாசனையோ.
சேர்த்து வைத்துப் பசுக் கறக்கலாமா
சேற்றிலே முளைத்த செந்தாமரைபோல.
சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
சொல்லாமற் செய்வார் நல்லோர், சொல்லியும் செய்யார் கசடர்.
சொல்லிப் போகவேணும் சுகத்துக்கு; சொல்லாமல் போகவேணும் துக்கத்துக்கு.
சொல்லுக் கரிச்சந்திரன் போல
சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு புத்தியில்லையா.
சொறிந்து தேய்க்காத வெண்ணெயும் பரிந்திடாத சாதமும்.
சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக் காகுமா
சொற்[illegible]சையுங் கேளான் சுய புத்தியுமில்லை
சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே
சோம்பலே துர்மார்க்கத்துப் பிதா.
சோற்றுக்கும் கறுப்புண்டு; சொல்லுக்கும் பழுதுண்டு.
ஞானமுங் கல்வியும் நாழி அரிசியிலே.
தகப்பன் வெட்டின கிணறென்று தலைகீழாய் விழலாமா.
தங்கமும் பொன்னும் தரையிலே; ஒருகாசு நார்த்தங்காயிலே.
தண்டிலே போனால் இரண்டிலே ஒன்று.
தண்ணீரிலேயா தன்பலங் காட்டுகிறது.

தண்ணீரும் கோபமும் தாழ்ந்த விடத்திலே
தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.
தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா.
தந்தனு வென்கிறது பாட்டுக் கடையாளம்.
தந்தா லொன்று தராவிட்டா லொன்று.
தம்பியுடையவன் படைக்கஞ்சான்.
தம்மினம் தம்மைக் காக்கும்; வேலி பயிரைக் காக்கும்
தயிருக்குச் சட்டி ஆதரவு சட்டிக்குத் தயிர் ஆதரவு.
தரித்திரப்பட்டாலும் தயிரியம் விடாதே.
தருமம் தலைகாக்கும்.
தலைக்குமே லோடிய வெள்ளம் சாணோடியென்ன முழமோடியென்ன.
தலைச்சன்பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும், ஆமுடையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்.
தலைநோவுக்குத் தலையணையைத் திருப்பிப்போட்டால் தீருமா.
தலைமயக்கம் சருவமயக்கம்.
தலையிருக்க வாலாடுமா
தலையிலே யிடித்தபிறகு தாழக் குனிகிறது.
தலையெழுத்திற்குத் தலையைச் சிரைத்தால் போகுமா.
தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
தலைவன் நிற்கத் தண்டு நிற்கும்; தலைவன் மயங்கச் சர்வமும் மயங்கும்.
தவசுக்குத் தனிமையும் தமிழுக்குத் துணையும்.
தவத்துக் கொருவர் கல்விக் கிருவர்.
தவிட்டுக்கு வந்த கைதான் தனத்துக்கும் வரும்.
தருமத்துக்குத் தாழ்ச்சி வராது.
தருமத்துக்குத் தானம்பண்ணுகிற மாட்டைப் பல்லைப்பிடித்துப் பதம்பார்க்கிறதா.
தருமமே தலைகாக்கும்.
தறுதலைக்கு ராஜா சவுக்கடி.
தனக்கழகு மொட்டை பிறர்க்கழகு கொண்டை.
தனக்குகந்த ஊணும் பிறர்க்குகந்த கோலமும்.
தனக்குத்தானே கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தால் கனியுமா.
தனக்குமிஞ்சி யல்லவோ தருமம்.
தனக்கென் றடுப்புமூட்டித் தான்வாழுங் காலத்தில் வயிறும் சிறுக்கும் மதியும் பெருக்கும்.
தனக்கென் றிருந்தால் சமயத்துக் குதவும்.

தன் கீர்த்தியை விரும்பாதவனைத் தள்ளிவிடு.
தன்குற்றம் தனக்குத் தெரியாது.
தன்குற்ற மிருக்கப் பிறர்குற்றம் பார்க்கிறதா.
தன்பலங் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.
தன்பாவம் தன்னோடே.
தன் முதுகு தனக்குத் தெரியவில்லை.
தன்வினை தன்னைச் சுடும்.
தன்வீட்டு விளக்கென்று முத்த மிடலாமா.
தன்னிச்சையை அடக்காவிட்டால் தன்னை ஆளும்.
தன்னிலத்தில் குறுமுயல் தந்தியிலும் வலிது.
தன்னுயிர்போல மன்னுயிரையும் பார்க்கவேண்டும்.
தன்னூருக்கானை அசலூருக்குப்பூனை.
தன்னைக் கொல்லவந்த பசுவைக் கொல்லு.
தன்னைப் புகழ்வானும் சாணேறி நிற்பானும் பொன்னைப் புதைத்து வைத்துப் போவானும் பேய்.
தன்னை யறிந்தால் தலைவனை அறியலாம்.
தன்னை யறியாச் சன்னத முண்டா.
தாட்டோட்டக் காரருடன் கூடுவதிலும் தனியேயிருப்பது நலம்.
தாமரையிலைத் தண்ணீர்போல் தளும்புகிறது.
தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு, பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு.
தாய்க் காகாத பிள்ளை ஊருக் காகுமா.
தாய்க்குப் பின் தாரம்.
தாய் தூற்றினால் ஊர் தூற்றும்.
தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா.
தாரமும் குருவும் தலைவிதி.
தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்.
தாளிட்டவன் தாள்திறக்கவேணும்.
தானொன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்.
தான்சாக மருந்து தின்பார்களா.
தான் திருடி அசல்வீடு நம்பாள்.
தான் தின்ற நஞ்சு தன்னைக் கொல்லும்.
தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை.
தான் போகிற காரியத்துக்கு அடப்பக்காரன் போனால் ஒரு சொட்டு.
திகம்பர சந்நியாசிக்கு வண்ணான் உறவேன்.
திட்டிச் செத்தாரு மில்லை வாழ்த்தி வாழ்ந்தாரு மில்லை.

திரித்தவரையில் கயிறு.
திருடனைத் தேள் கொட்டினது போல.
திருவாசகத்திற் குருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்.
திரு உண்டானால் திறமை உண்டு.
திறந்த கதவுக்குத் திறவுகோல் தேடுவானேன்.
தினவெடுத்தவன் சொறிந்துகொள்ளவேண்டும்.
தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினைவிதைத்தவன் வினை அறுப்பான்.
தீண்டாவிளக்கைத் தீண்டவரும் பூச்சி மாண்டாற்போல் மாளுகிறது.
தீபத்தி லேற்றிய தீவட்டி.
தீப்பட்ட வீட்டுக்குப் பீக்குட்டைத் தண்ணீர்.
தீயிலே விட்ட நெய் திரும்ப வருமா.
தீயும் பயிருக்குப் பேயு மழைபோல.
தீராத நெஞ்சுக்குத் தெய்வமே சாட்சி.
தீவட்டிக் காரனுக்குக் கண் தெரியாது.
துக்கமற்றவனுக்குச் சொக்கட்டான்.
துக்கமுள்ள மனதில் துன்பமேன் வேறே.
துடையுங் கிள்ளித் தொட்டிலும் ஆட்டுகிறது.
துணிந்தவனுக்குத் துக்க மில்லை.
துருசு கல்வி அரிது பழக்கம்.
துரும்பு தூணானால் தூணெப்படி யாகாது.
துலக்காத ஆயுதம் துருப் பிடிக்கும்.
துள்ளின மாடு பொதி சுமக்குமா.
துறக்கத்துறக்க ஆனந்தம், துறந்தபின்பு பேரின்பம்.
துறட்டுக் கெட்டாதது வாய்க் கெட்டுமா.
துறவிக்கு வேந்தன் துரும்பு.
துற்சனனைக் கண்டால் தூரத் தூர.
துற்புத்தி மந்திரியா லரசுக் கீனம்; சொற்கேளாப் பிள்ளையால் குலத்துக் கீனம்.
தூண்டில் காரனுக்கு மிதப்பிலே கண்.
தூண்டிலில் அகப்பட்ட மீன் துள்ளினதினால் விடுவார்களா.
தூண்டிலைப் போட்டு வராலை யிழுக்கிறது.
தூரத்துப் பச்சை பார்வைக்கு இச்சை.
தூரத்துப் பார்வைக்கு மலை மழமழப்பு: கிட்டப்போனால் கல்லுங் கறடும்.
தூர விருந்தால் சேர உறவு.
தென்றல் முற்றிப் பெருங்காற் றாகும்.

தென்னமரததுககுத தணணீா வாாததால் தலையாலே தரும்
தேசஙகள் தோறும் பாஷைகள வேறு
தேடித திருவிளககு வை.
தேரை மோநத தேஙகாய போல.
தேருச செய்கை தீராச சஞசலம
தேளுககுக கொடுககிலே விஷம
தேனுககு ஈயைத தேடிவநது விடுகிறவாகளாா
தேனுளள இடததில் ஈ மொயககும.
தை பிறநதால வழி பிறககும
தைமழை நெயமழை.
தையு மாசியும வையகத துறஙகு
தொட்டால் தோழன விட்டால மாறறுன
தொட்டுககாட்டாத விததை சொட்டுப்போட்டாலும வராது
தொட்டுப்பாாததால தோட்டியும உறவு
தொணணூறு பொனனோடே துவாமபருபபுக காறபணம
தோட்டககாரன வாழவு காறறடிததாற போசசுது
தோட்டததில பழமிருககக தூாட போவானேன
தோட்டிபோ லுழைததுத துரைபோலச சாப்பிடவேணடும.
தோரணி கெட்டால கோரணி
தோறபது கொணடு சபை ஏறுகிறதா
நகைததிகழ்வோனை நாயென நினை
நககுகிற நாயககு செககெனறும சிவலிஙகமெனறும தெரியுமா
நஞசுககுள ளிருநதாலும நாகமணி, குபபைககுள ளிருநதாலும குனறிமணி
நடநத காலிலே சீதேவி, இருநத காலிலே மூதேவி
நடநதால நாடெலலாம உறவு, படுததால பாயும பகை
நடுததெருப பிசசைககு நாணயம பாாககலாமா
நட்டுவனபிளளைககு நாட்டியம கறறுககொடுககக வேணடுமா.
நண்டு கொழுததால வளையில இராது
நணடைச சுட்டு நரியைக காவலவைததாறபோல
நததையின வயிறறிலே முததுப பிறநதாறபோல
நமககாகாதது நஞசோ டொககும
நம்பின பேரை நட்டாறறில கைவிடலாமா.
நம்வீட்டு விளககென்று முததமிட்டுக கொள்ளுகிறதா
நரிவாலைக கொணடு கடலாழம பாாககிறதுபோல
நல்லது செயது நடுவழியே போனால பொலலாதது போகிற வழியே போகிறது.
நலலது தெரியுமா நாயககு.

நல்லது நாற்கலம், ஊத்தைப் பதின்கலம்.
நல்ல மரத்திலே புல்லுருவி பாய்ந்தாற்போல.
நல்லமாட்டிற் கோரடி, நல்லபெண்ணுக்கு ஒருசொல்.
நல்லாரை நாவிலுரை பொன்னைக் கல்லிலுரை.
நற்குணமே நல்ல ஆஸ்தி.
நன்மைசெய்தார் நன்மைபெறுவர்: தீமைசெய்தார் தீமைபெறுவர்
நன்மையும் தீமையும் இன்மையிலே.
நன்மை செய்திடில் நாலிடையூறும் வரும்.
நன்மை செய்யக் கன்மம் விளையாது.
நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது.
நாயா சிங்கத்திற்கு நற்பட்டங் கட்டுகிறது.
நாயா லாகுமா கொக்கைப் பிடிக்க.
நாய் குலைத்து நத்தம் பாழாகுமா.
நாய்க்கு முழுத்தேங்காய் தக்குமா.
நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா.
நாய்வாலைக் குணக்கெடுக்கலாமா.
நாய்விற்ற காசு குலைத்துக் காட்டுமா.
நாற்பது வயதுக்கு மேல் நாய்க்குணம்.
நாலாறு கூடினால் பாலாறு.
நாலுகாரை கூட்டினால் ஒரு பழுதை.
நால்வர் கூடினால் தேவசபை.
நாவசைய நாடசையும்.
நாழிப்பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது.
நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறுபோல.
நாளைக்கு வருகிற பலாக்காயிலும் இன்றைக்கு வருகிற களாக்காய் மேல்.
நாறவாயன் தேட, ஊத்தைவாயன் உண்ண.
நித்தியம் கிடைக்குமா அமாவாசைச் சோறு.
நிலையிலான் வார்த்தை நீர்மே லெழுத்து.
நில்லாத காலடி நெடுந்தூரம் போகும்.
நிழலருமை வெய்யிலில் போனால் தெரியும்.
நிழல்கடகக் பாயலாமா.
நிறைகுடம் தளும்பாது.
நீண்ட தச்சும் குறுகிய கொல்லும்.
நீண்ட புல் நிற்க நிழலாமா.
நீதி கேளாமல் தலை வெட்டுவார்களா.
நீ படித்த பள்ளியிலேதான் நானும் படித்தேன்.
நீ பிறர்க்குதவி செய்தால் தெய்வம் உனக்குதவிசெய்யும்.

நீராழங் கண்டாலும் நெஞ்சாழங் காணக் கூடாது.
நீருள்ள மட்டும் மீன் துள்ளும்.
நீரை யடித்தால் நீர் விலகுமா.
நீர் என்று சொன்னால் நெருப்பு அவிவதும் சர்க்கரை என்று சொன்னால் வாய் தித்திப்பதும் உண்டா.
நீர்மேலெழுத்து நிற்குமா.
நீர்மேற் குமிழிபோல் நிலையில்லாக் காயம்.
நுனிக்கிளையி லிருந்து அடிக்கிளையை வெட்டினாற்போல.
நுளையன் அறிவானோ ரத்தினத்தின் பெருமையை.
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு.
நூறுநாள் ஓதி ஆறுநாள் விடத் தீரும்.
நூற்றுக் கிருந்தாலும் கூற்றுக் கிரை.
நெய்க்குட முடைந்தால் நாய்க்கு வேட்டை.
நெய் முந்தியோ திரி முந்தியோ
நெய்யும் திரியும் போனால் நிற்குமா விளக்கு.
நெருப்பாறு மயிர்ப்பாலம்
நெருஞ்சிமுள் தைத்தாலும் குனிஞ்சு பிடுங்கவேண்டும்.
நெருப்பில்லாமல் நீள்புகை எழும்புமா.
நெருப்பை ஈ மொய்க்குமா.
நெல்லு குத்துகிறவளுக்கு கல்லு பரிக்கை தெரியுமா.
நேரும் சீருமாய்ப் போகவேணும்.
நைடதம் புலவர்க் கௌடதம்.
நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
நோயற்ற வாழ்வே வாழ்வு; குறைவற்ற செல்வமே செல்வம்.
பகலில் பசுமாடு தெரியாதவனுக்கு இரவில் எருமைமாடு தெரியுமா.
பக்கச் சொல் பதினாயிரம்.
பசித்தவன் தின்னாதது மில்லை; பகைத்தவன் சொல்லாதது மில்லை.
பசித்தவள் பயறை விதை.
பசிருசியறியுமா நித்திரை சுகமறியுமா.
பசு கிழமானாலும் பாலின்சுவை போகுமா.
பசுவைக் கொன்று செருப்புதானம் செய்தாற்போல.
பச்சைப் பாண்டத்தில் பாலை வைத்தால் பாலும் உதவாது பாண்டமும் உதவாது.
பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டுமா.
பஞ்சாங்கம் கெட்டுப்போனால் நவக்கிரகமும் கெட்டுப்போகுமா
பஞ்சுப்பொதியில் நெருப்புப் பட்டாற்போல.

படியாள்வார் நீதிதப்பில் குடி யாரிருப்பார் குவலயத்தில்
படுகைச் சுகம் மெத்தை அறியாது.
பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
பட்டவர்க்குண்டு பலன்.
பட்டால் பலனுண்டு பட்டால் பாழ்போமா.
பணத்தைப் பார்க்கிறதா பழமையைப் பார்க்கிறதா.
பணமில்லாதவன் பிணம்.
பணமென்ன பாஷாணம் குணமொன்றே போதும்.
பணம் பந்தியிலே குலம் குப்பையிலே.
பணம் பெரிதோ பழமை பெரிதோ
பண்டமோரிடத்தில் பாவமோரிடத்தில்.
பண்ணின பாவத்தைப் பட்டுத் தொலைக்கவேண்டும்
பதறாத காரியம் சிதறாது.
பதினாயிரம் கொடுத்தாலும் பதைப்பாகாது.
பதிவிரதைக்குப் பர்த்தாவே தெய்வம்.
பதுங்குகிற புலி பாய்ச்சலுக் கடையாளம்
பத்தி கொள்பவன் முத்தி உள்ளவன்.
பந்திக்கு முந்தவேண்டும்; படைக்குப் பிந்தவேண்டும்
பரிக்கிடும் கடிவாளத்தை நரிக்கிடுகிறதா.
பருத்திபட்ட பாடெல்லாம் படுகிறது
பருப்பிலே நெய்விட்டதுபோல.
பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
பலநாளைத் திருடன் ஒருநாளைக் ககப்படுவான்.
பலவாய்க்கால் ஆறாய்ப் பெருகும்.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
பழம் புண்ணாளி பாதி பரிகாரி.
பழுத்த பழம் கொம்பிலே நிற்குமா
பள்ளமுள்ள விடத்திலே தண்ணீர் நிற்கும்.
பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது.
பள்ளிப் பிள்ளைக்குப் பகுத்தறிவேது.
பறக்கிற பட்சிக்கு இருக்கிற கொம்பு நிலைவரமா.
பறக்குங் காகம் இருக்குங் கொம்பறியாதா
பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா
பனிபெய்து கடல் நிறையுமா.
பனிப்பெருக்கிலே கப்ப லோடுமா.
பனைமரத்தின் கீழே பாலைக் குடித்தாலும் கள்ளென்று நினைப்பார்கள்.
பன்றிக்குட்டி ஆனை ஆகுமா.

பன்றியுடன் கூடிக் கன்றும் கெட்டது.
பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்குபோல.
பாடுபடாமற்போனால் பலனில்லாமற்போகும்.
பாடை ஏறினும் ஏடு கைவிடேல்.
பாதகர் பழக்கம் பாம்பொடு பழகல்போல.
பாம்புக்கு மூப்பில்லை.
பாம்பாட்டி பாம்பிலே, கள்ளன் களவிலே.
பாம்பின்வாய்த் தேரைபோல.
பாம்புக்குச் சத்துரு பஞ்சமா.
பாம்புக்குட்டிக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் படுவிஷத்தைக் கொடுக்கும்.
பாம்புக்கு விஷம் பல்லிலே.
பாம்பும் கீரியும் போல.
பாம்பு தன் பசியை நினைக்கும், தேரை தன் விதியை நினைக்கும்
பாம்பென்றால் படை நடுங்கும்.
பாய்மரஞ் சேர்ந்த காகம்போ லானேன்.
பாய்மர மில்லாக் கப்பலைப் போல.
பாரபுத்தியுள்ள பறவை பதரால் பிடிபடாது.
பாராத காரியம் பாழ்.
பார்த்தவர்க் கின்பம் படுபவர்க்குத் துன்பம்.
பார்த்தால் பசுப்போல, பாய்ந்தாற் புலிபோல
பார்த்தால் தெரியுமா பட்டால் தெரியுமா வருத்தம்.
பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்
பாலுக்கு வந்த பூனை மோரைக் குடிக்குமா.
பாலைப் பார்க்கிறதா பானையைப் பார்க்கிறதா.
பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு.
பால் சுண்டினாலும் சுவை சுண்டுமா.
பாவ மோரிடத்தில் பழி யோரிடத்தில்.
பாழாய்ப்போகிறது பசுவின் வயிற்றிலே
பாழூருக்கு நரி ராசா.
பானை சோற்றுக்குப் பத மொருசோறுதான்.
பானையி லிருந்தாலல்லவா அகப்பையில் வரும்.
பிச்சைக்காரனுக் கப் பயப்பட்டு அடுப்பு மூட்டாமல் விடுகிறதா.
பிச்சைக்காரன்மேல் பிரமாஸ்திரம் தொடுக்கிறதா.
பிச்சைக்குடி பெரியகுடி.
பிச்சைச் சோற்றுக்குப் பஞ்சமுண்டா.
பிக்ஷாபதியோ லக்ஷாபதியோ.
பிடாரன் பெரியவனென்று புற்றிலே கையை வைக்கலாமா.

பிடித்த கொம்பும் விட்டேன், மிதித்த கொம்பும் விட்டேன்.
பிணைப்பட்டுத் துணைபோகாதே.
பித்தளை சோதித்தாலும் பொன்குணம் வருமா.
பித்தனுக்குத் தன்குணம் நூலினும் செவ்வை.
பிய்ப்பானேன் தைப்பானேன்.
பிள்ளைச்சீர் கொள்ளக் கிடைக்குமா.
பிள்ளைபெற்றுப் பேரிடவேணும்.
பிள்ளையருமை பெற்றவளுக்குத் தெரியும்.
பிள்ளையருமை மலடி யறிவாளா.
பிள்ளையில்லாத பாக்கியம் பெற்றிருந் தென்ன சிலாக்கியம்.
பிறர் குற்றமறியப் பிடரியிலே கண்ணு.
பிறவிச் செவிடனுக்குப் பேசத் திறமுண்டா
பின்னால் வரும் பலாக்காயினும் முன்னால் வரும் களாக்காய் நலம்.
புண்ணியத்துக் குழுதமாட்டைப் பல்லைப்பிடித்துப் பதம்பார்த்ததுபோல.
புதியவண்ணான் பொந்துகட்டி வெளுப்பான்.
புதியோரை நம்பிப் பழையோரைக் கைவிடலாமா.
புதுமாடு புல்லுப் பெறும்.
புத்திகெட்ட ராஜாவுக்கு மதிகெட்ட மந்திரி.
புத்திமான் பலவான்.
புத்தி முற்றினவருக்குச் சித்தியாத தொன்றில்லை.
புத்தியெத்தனை சுத்தியத்தனை.
புலிக்குத் தன்காடு வேற்றுக்காடு உண்டா.
புலி பசித்தால் புல்லைத் தின்னுமா.
புலி பதுங்குகிறது பாய்ச்சலுக் கடையாளம்.
புலிமேலெடுத்த கத்தியைப் பூனைமேல் வீசுகிறதா.
புலியைக் கண்டு பூனை எதிர்க்குமா.
புலியைப் பார்த்து நரி சூடிக்கொண்டதுபோல.
புழைக்கடை மருந்து கலைக்குதவாது.
புளியங்காய்க்குப் புளிப்புப் புகுதவிடவேண்டுமா.
பூட்டிப் புசிக்காமல் புதைப்பார் ஈயைப்போல ஈட்டி இழப்பார்.
பூ விற்ற கடையிலே புல் விற்கலாமா.
பூவுடன் கூடிய நாரும் மணம் பெறும்.
பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.
பூனைக்குத் தன்குட்டி பொன்குட்டி.
பூனைமுன் கிளிபோலப் புலம்பித்தவிக்கிறது.
பூனைவாய் எலிபோல்.
பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.

பெண்ணுக்குப் பொன்னிட்டு பார்; சுவருக்கு மண்ணிட்டு பார்.
பெண்ணுக்குப் போய் பொன்னுக்குப் பின்வாங்கலாமா.
பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு வாத்தியாரும்.
பெண் என்றால் பேயும் இரங்கும்.
பெண்ணைத் திருத்தும், பொன்.
பெண்புத்தி பின்புத்தி.
பெரியோர்க ளுள்ளம் பேதிக்கலாகாது.
பெரியோர்களைக்கண் டெழுந்திராதவன் பிணம்.
பெருங்கயிறு முடி அழுந்தாது.
பெருநெருப்பிலே புழு மேயுமா.
பெருநெருப்புக் கீரமில்லை.
பெற்றதாய்க்கும் வளர்த்ததாய்க்கும் உதவாமல் பிரிந்த குயிலைப் போல.
பெற்றதாய் செத்தால் பெற்ற அப்பன் சிற்றப்பன்.
பெற்ற தெல்லாம் பிள்ளையா; இட்டதெல்லாம் பயிரா.
பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு.
பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையருமை.
பேசப்பேச எந்தப் பாஷையும் வரும்.
பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை.
பேராசைக்காரனைப் பெரும்புளுகால் வெல்லவேண்டும்.
பேராசை பெருநஷ்டம்.
பொங்குங்காலம் புளி, மங்குங்காலம் மாங்காய்.
பொடி மீனெல்லாம் பெருமீனுக்கிரை.
பொய்சொன்ன வாய்க்குப் போசனமுங் கிடையாது.
பொய் மெய்யை வெல்லுமா.
பொய்யான பொருளாசை மெய்யான அருளாசையை விலக்குகிறது.
பொருளாசையும் மனச்சாட்சியும் பொருந்துமா.
பொருளில்லார்க்கு அருளில்லை.
பொல்லாப் பிள்ளை இல்லாப் பிள்ளைக்குச் சரி.
பொன்னான மருமகளானாலும் மண்ணாலே ஒரு மாமியார் வேண்டும்.
பொன் இரவலுண்டு பூ இரவலுண்டா.
பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்கவேண்டுமா.
பொன்னின் குணம் போமா, பூவின் மணம் போமா.
பொன்னின் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.
போகாத இடத்திலே போனால் வாராத சொட்டு வரும்.
போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.

போர்சுட்டுப் பொரி பொறுக்கினாற்போல.
போன சுரத்தைப் புளியிட்டு அழைத்ததுபோல.
போனதை நினைக்கிறவன் புத்திகெட்டவன்.
மடக்கிழவனிலும் புத்தியுள்ள வாலிபன் அதிகம்.
மடக் கேள்விக்கு மாறுத்தரமில்லை.
மடியிலே கனமிருந்தால் வழியிலே பயம்.
மட்டான போசனம் மனதிற்கு மகிழ்ச்சி.
மணலை அளவிட்டாலும் மனதை அளவிடக்கூடாது.
மண் காசுக்குச் சாம்பல் கொழுக்கட்டை.
மண்குதிரையை நம்பி ஆற்றி லிறங்கலாமா.
மண்டையுள்ள மட்டில் சளி பற்றாது.
மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்து மண்ணுக்கிரையாய்ப் போகிறது.
மண்பூனை எலி பிடிக்குமா.
மந்திரத்தால் மாங்காய் விழுமா.
மந்திரங் கால் மதி முக்கால்.
மந்திரிக்கு முண்டு மதிகேடு.
மந்திரியில்லாத யோசனையும் ஆயுதமில்லாத சேனையும் கெடும்
மயிருடாடாத நட்பும் பொருளுடாடக் கெடும்.
மரக்கோணல் வாச்சியிலே நிமிரும்.
மரத்துப் பழம் மரத்தடியில் விழும்.
மரமேறிக் கைவிட்டவனும் கடன்வாங்கிக் கடன் கொடாதவனும் கெட்டுப்போவான்.
மரம் வைத்தவனுக்குத் தண்ணீர் வார்க்கக் கடன்.
மரியாதையில்லாதான் மகிமையற்றான்.
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
மருந்தும் விருந்தும் மூன்றுபொழுது.
மலடிக்குத் தெரியுமா மகப்பெறு வருத்தம்,
மலரும் மணமும் போல.
மலிந்த பண்டம் கடையிலே வரும்.
மலை கலங்கினாலும் மனங் கலங்கப்போகாது.
மலைகல்லி எலி பிடிக்கிறதா.
மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் சரியா.
மலை நெல்லிக்காய்க்கும் கடலுப்புக்கும் உறவுசெய்தவர் யார்.
மலைபோல் வந்தது பனிபோல் நீங்கிற்று.
மலையத்தனை சாமிக்கு மலையத்தனை புட்பம் சாத்துகிறார்களா.
மலை இலக்கானால் குருடனும் எய்வான்.
மலையில் விளைந்தாலும் உரலில் மசியவேண்டும்.

மனமிருந்தால் மலையும் சாயும்
மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்.
மாமி மெச்சிய மருமகள் இல்லை.
மாமியாருடைத்தால் மண்கலம்; மருமகள் உடைத்தால் பொன் கலம்.
மாவாகத் தின்றால் பணியாரமில்லை.
மாவிருக்கிற மணத்தைப்போ லிருக்கும் கூழிருக்கிற குணம்
மாவுக்குத் தக்க பணியாரம்
மாவுண்டானால் பணியாரம் சுடலாம்.
மான மழிந்தபின் மரியாதை என்ன.
மானம் பெரிதோ பிராணன் பெரிதோ.
மானுக் கொருபுள்ளி ஏறியென்ன குறைந்தென்ன.
மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும்.
மிதித்தாரைக் கடியாத பாம்பு உண்டா.
மிளகத்தனை பிள்ளையாருக்குக் கடுகத்தனை நைவேத்தியம்.
மிளகு சிறுத்தால் வீரியம் போகுமா.
மின்மினிப்பூச்சி வெளிச்சத்துக்கு இருள் போமா
மின்னமல் இடி விழுமா.
மீந்த சுண்ணம்பையும் மெலிந்த ராசாவையும் கைவிடலாகாது.
மீன்குஞ்சுக்கு நீச்சுப் பழக்கவேணுமா.
முகக் கோணலுக்குக் கண்ணடி பார்த்தால் தீருமா.
முகம் சந்திரபிம்பம் அகம் பாம்பின் விஷம்.
முகத்துக்கு முகம் கண்ணடி.
மூக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காருமா.
முக்கூட்டு சிக்கறாது.
முடப்பிள்ளையானாலும் மூத்த பிள்ளை.
முடப்புல் முக்கல நீரைத் தடுக்கும்.
முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டது போல்.
முடிசார்ந்த மன்னரும் முடிவிலோர் பிடிசாம்பல்.
முடியும்வகை யோசியாமல் முயற்சிகொள்ளாதே.
முட்ட நனைந்தவனுக் கீரமில்லை; முழுதுங் கெட்டவனுக்குத் துக்கமில்லை.
முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே.
முட்டாளுக்கென்ன சொன்னலும் கட்டோடே கேளான்.
முதலுக்கு மோசமாக இருக்கிறபோது லாபத்துக்குச் சண்டை போடுகிறதா.
முதற் கோணல் முற்றுங் கோணல்,
முதுகிலே புண்ணுண்டானால் செடியிலே நுழையப் பயம்.

முத்தால் நத்தை பெருமைப்படும்; மூடர் எதனாலும் பெருமைப் படார்.
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
முருக்கம்பூ சிவந்ததனால் முடிப்பார்கள் உண்டா.
முழுக்கட்டிபோக்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டதுபோல
முழுச்சோம்பேறி முள்ளுள்ளவேலி.
முளைக்கையிலே உண்டானதுதான் முட்டவரும்.
முள்ளாலே முள்ளை எடுக்கவேண்டும்.
முள்ளின்மேலே சீலையைப் போட்டால் மெள்ள மெள்ள வாங்க

முள்ளுக்குக் கூர்மையும் துளசிக்கு வாசனையும் இயற்கை.
முன்கை நீண்டால் முழங்கை நீளும்.
முன் அளந்த நாழி பின் அளக்கும்.
முன்னாலே போனால் கடிக்கிறது, பின்னாலே போனால் உதைக்

முன்னே போனால் சிசுவத்தி; பின்னே போனால் பிரமஹத்தி.
மூக்கறுபட்ட மூளி காதறுப்பட்ட மூளியைப் பழித்தாளாம்.
மூக்குமயிர் பிடுங்கினால் ஆள்பாரம் குறையுமா
மூட்டைக்காரனுக்கு முழங்காலிலே புத்தி.
மூலிகை யறிந்தால் மூன்றுலக மாளலாம்.
மூர்க்கனும் முதலையும் சரி
மெய்ஞ்ஞான முடையார்க்கு அஞ்ஞான மில்லை
மெத்தப் படித்தவன் பயித்தியக்காரன்.
மெய்க்கும் பொய்க்கும் விரற்கிடை தூரம்.
மெய்சொல்லி வாழாதான் பொய் சொல்லி வாழ்வானா.
மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையுங் குழியப்பாயும்
மேருவைச் சார்ந்த காகமும் பொன்னிறம்.
மேருவை அடைந்த காகமும் அமுத முண்ணும்.
லங்கணம் பரமௌஷதம்.
லஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்.
வஞ்சகருறவை வழுவிவிலகு.
வஞ்சகர் என்ன நேசம்காட்டினாலும் நெஞ்சில் நேசம் கொள்ளார்.
வஞ்சனை நெஞ்சை அடைக்கும்.
வடக்குப்பார்த்த மச்சுவீட்டைப் பார்க்கிலும் தெற்குப்பார்த்த தெருத்திண்ணை நல்லது.
வட்டி ஆசை முதலைக் கெடுத்தது.
வணங்கினபுல் பிழைக்கும்.
வண்டியில் ஓடம் ஏறும், ஓடத்தில் வண்டி ஏறும்.

வணணானுககு நோயவநதால கலலோடே
வநததை வரபபறற வேணடும
வநதவரெலலாம சநதையில குடியா
வருநதினால வாராத தொனறிலலை
வலிமைககு வழககிலலை
வலியவன கிடடே வழககுணடா
வலலவ னாடிய பமபரம மணலிலு ம ஆடும
வலலவனுககுப புலலாயுதம
வலலவன போனது வழி
வவவால வீடடுககு வவவால வநதால நீயும தொஙகு நானும தொஙகு
வழவழதத உறவைப பாரககிலும வயிரமபறறிய பகை நனறு
வழி நடை வாரததை வாகனமபோல
வழியிலே கணட குதிரைககு வைககோல பழுதை கடிவாளம
வழிடே போய வழியே வநதால அதிகாரி செஙகோல என்ன செயயும
வளருஙகாய பிஞசிலே தெரியும, விளையும பயிர முளையிலே தெரியும
வறுதத பயறு முளைததாறபோல
வாகன முளளவன நடைககஞசான
வாககு மனது மொததது வாரததை சொலலவேணடும
வாசனையுளள புஷபம வனததிலிருநதென்ன பலன
வாதம [illegible]யறி, வேதம ருதியறி
வாதம கெட்டால வைததியப
வாயாடிதான வலலவன
வாய உணடானால பிளளை பிழைககும
வாய கருமபு கை இருமபு
வாய வாழைபபழம கை கருணைககிழஙகு
வாரததை இருநதுபோம வழி நாநதுபோம
வாலசோசியம விருததவைததியம
வாழும பிளளை விளையாடடிலே தெரியும
வாழையடி வாழை
வாழைபபழம கொணடுபோனவன நடுவீட்டில இருநதான.
வாழகிறதும கெடுகிற நம வாயிலேதான்
வாழகிறதும தாழகிறதும வணடி உருளைபோல
வாழவாருககுச சீதேவி வாயிலே
வாழ்வும சிலகாலம தாழ்வும சிலகாலம
வானம் வழஙகத தானம வழங்கும்.

விடியுமட்டும் மழைபெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சல் கரையுமா.
விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்பாது.
விண் பொய்த்தால் மண் பொய்க்கும்.
விதி எப்படியோ மதி அப்படி.
விதி போகிற வழியே மதி போகும்.
வித்துவான் அருமையை வித்துவான் அறியவேண்டும்.
வித்தில்லாச் சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை.
வியாச்சியம் சேற்றில் நட்ட கம்பம்.
வியாதிக்கு மருந்து உண்டு; விதிக்கு மருந்து உண்டா.
விரதம் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும்.
விரல் கண்ணிலே குத்தினதென்று வெட்டிப்போடுவார்களா.
விரை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா.
விரை முந்தியோ மரம் முந்தியோ.
விருந்தும் மருந்தும் மூன்று வேளை.
விருப்பத்தினால் ஆகாதது வீம்பினால் ஆகுமா.
விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டினதுபோல.
வில் இல்லாதவன் அம்பு தேடுவானேன்.
வில் அம்போ சொல் அம்போ.
வில்லுக்கு விசயன்; பரிக்கு நகுலன்.
விளக்கிருக்க நெருப்புக் கலைவானேன்.
விளையாட்டுப் பிள்ளைக்கு விதரணை தெரியுமா.
விஷத்தின்மேல் விஷம், விஷம் போக்கும்.
வீடுகட்டு முன்னம் கிணறு எடுக்கவேண்டும்.
வீட்டுக்கு அலங்காரம் விளக்கு.
வீணுக்கு உழைக்கிறவன் வீணன்.
வெகுசனவாக்கியம் கர்த்தவ்வியம்.
வெண்ணெயிருக்க நெய்க்கு அலைவானேன்
வெந்த புண் வினை செய்யாது.
வெளுத்ததெல்லாம் பாலா, கறுத்ததெல்லாம் தண்ணீரா.
வெள்ளம் வருமுன்னே அணை கோலிக்கொள்ளவேண்டும்.
வெறுங்காதுக்கு ஓலைக்காது மேல்.
வெறுங்கை முழம்போடுமா.
வேடத்தினால் என்ன, வெண்ணீற்றினால் என்ன.
வேடிக்கைக்கு விலை இல்லை
வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமா.
வேம்புக்குப் பல்லழகு; வேலுக்குப் பல்லிறுகும்.
வேம்பை விரும்ப விரும்பக் கரும்பு.
வேர்நின்றால் மரம்நிற்கும்; வியாபாரம் நின்றால் செட்டிநிற்பான்

வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினை ஆச்சு.
வேலிதானே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி.
வேலைக்குத் தக்க கூலி விருப்பத்துக்குத் தக்க கூர்மை.
வேலையைப் பார்த்துக் கூலிகொடு.
வைத்தியன் பெரிதோ, வாத்தி பெரிதோ.
வைத்திய சாஸ்திரம் சாஸ்திரங்களில் விசேஷம்.
வையம் ஒத்தால் ஐயம் இல்லை.
வைரத்தை வைரம்கொண்டே அறுக்கவேண்டும்.
வௌவாலுக்கு ஒருகனிக்கு நூறுகனி நஷ்டம்.
வௌவாலுக்கு மரமே கதி, அதன்குஞ்சுக்கும் அதுவே கதி.
வௌவால் அடித்துத் தின்னும், அணில் கடித்துத் தின்னும்.
வௌவால் தின்னாத பழம் இல்லை.

PRINTED IN INDIA BY GEORGE KENNETH
AT THE MADRAS DIOCESAN PRESS, MADRAS—B. 16407.

## Publications of

# T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A.

மாதவ கோவிந்த ரானடே.—பொம்பாயில் ஹைகோர்ட் ஜட்ஜியாகிய இவருடைய ஜீவ சரித்திரம். இவருடைய மனைவியார் ஸ்ரீமதி-ரமாபாய் அவர்கள் மஹாராஷ்டிர பாஷையில் எழுதியதை அடியொற்றித் தமிழில் அமைத்தது. இதனுள் இந்துக்களுக்குரிய இல்வாழ்க்கைத்திறம் பாங்காக அமைந்திருக்கின்றது. அங்கங்கே பர்த்தாவையும் பதிவிரதையையும் பற்றிய சிறிய வரலாறுகள் பாலர்க்கும் பாலிகைகளுக்கும் உபயோகமான ஒழுக்கங்களை இனிது புகட்டுவனவாகும் (1 ரூ)

ராபின்ஸன் க்ருஸோ—ஓர் இங்கிலீஷ்காரன் அமெரிக்காவை அடுத்த நிர்மானுஷ்யமான ஒரு தீவில் விடப்பட்டு அங்கே நெடுங்காலம் தனியாய் ஜீவித்திருந்ததாக இங்கிலீஷில் எழுதியுள்ள ஒரு கதையின் சுருக்கம் சிறுவர் சிறுமியர் படித்தறியுமாறு எளிய நடையில் எழுதியிருக்கிறது (4 அணா)

அபிநவ கதைகள்—இதில் ஆறு கதைகள் அடங்கியிருக்கின்றன கற்பலங்காரம்—ஓர் அரசன் தான் விவாகம் பண்ணிக்கொண்ட ஓர் எளிய மாதின் கற்பைப் பரிசோதிக்குமாறு கொடுமை செய்ததும், அவைகளுக்கு ஈடுபட்டு அவள் கற்பலங்காரியெனப் புகழ்பெற்றதுமாகிய விஷயங்களை விவரிப்பது. தனபாலன்—தான் செய்துவந்த கொடுக்கல் வாங்கல் வியாபாரங்களில் கள்ளக்காசுகள் கலந்திருந்ததனால் மரணதண்டனை அடைந்து ஒரு சாவகாரியைத் தூக்கிடுகிற ஸமயத்தில், அந்த மோசத்துக்குக் காரணம் இன்னான் என்பது வெளியாகி, தண்டனையினின்றும் விடுபட்ட கதை. கோமளம்—மஹாகவி ஷேக்ஸ்பியர் ஸிம்பலின் என்னும் நாடகத்தில் அமைத்திருப்பதை ஒட்டித் தமிழ்ச் சிறுவர்களுக்கு ஏற்றவாறு பொருத்திய ஒரு பதிவிரதையின் கதை. ஸுப்பையர்—சென்னை சிங்காரவனத்தில் ஓர் வருஷம் சந்தைக்கடைக்குத் தீப்பற்றியபோது காணாமற்போன ஒருவன், உத்தரக்கிரியைகளெல்லாம் நடந்தபின், திரும்பிவந்த ஓர் உண்மையான கதை. கிருஷ்ணன்—விடுமுறையில் தாய் தந்தையரைப் பார்க்கப்போயிருந்த சகோதரர் இருவரில் ஒருவன், உரியநாளில் கலவிச்சாலைக்குத் திரும்பாமல் ஒரு நாள் தாமதிக்கும்பொருட்டுச் செய்த மோசத்தால் விளைந்த விபரீதத்தை விரித்துரைப்பது. ஆஷாட பூதி—பல உபகாரம் செய்த சிநேகிதருக்கு அந்தரங்கத்தில் செய்த துரோகத்தை விரித்துரைப்பது (10 அணா)

அக்பர்—இந்தியாவில் அரசாட்சி செய்திருந்த மோகல் அரசரில் [illegible] நாயகமான அக்பர் பாதுஷாவின் குண விசேஷங்களையும், அவருடைய [illegible]திரிமார்களின் திறங்களையும், அரசாட்சி நீடித்திருக்குமாறு மதாவ[illegible] அவர் செய்த சீர்திருத்தங்களையும் விரிவாக உரைக்கின்ற சரித்திரம். [illegible]பில் அவருடைய படம் வைத்திருக்கிறது. (12 [illegible])

குசேலர்—கண்ணனுக்கு ஒரு சாலைமாணாக்கரான குசேலர், மக்களைப் படுகின்ற வறுமைத் துன்பத்தைக் கருதி மனைவி செய்த விண்ணப்பத்தால் துவாரகை சென்று கண்ணனைக் கண்டு அருள்பெற்ற, பாகவதபுராண[illegible] கதை. (4 அணா)